# முன்னோக்கிய பயணம்



விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (சிறிலங்கா) கம்பனி

ஆண்டறிக்கை 2013

# நோக்கு

‘ஆசிய பிராந்தியத்தில் மிக திறமையான மற்றும் சிநேகபூர்வமான விமான போக்குவரத்து மையமாக திகழ்தல்’

# பணி

‘நாம் போட்டித்தன்மை மேன்மையான பயிற்சியுடனான சிறந்த விமான போக்குவரத்து வசதிகள் மற்றும் சேவைகளை பங்குதாரர்களின் திருப்தியை உறுதிபடுத்தும் வகையில் வழங்க பாடுபடுவோம்”



# முன்னோக்கிய பயணம்

மீளாய்வு ஆண்டில் நாம் கடந்த ஆண்டுகளின் சகல செயற்பாடுகளையும் விஞ்சும் விதமாக அவற்றை மேலும் உயர்நிலைக்கு கொண்டு சென்றோம். எமது அர்ப்பணிப்புமிக்க உயர் ஆற்றல் கொண்ட குழுவினர் ஓரணியில் செயற்பட்டு இவ்வாண்டை நிறுவனத்திற்கு மாத்திரமின்றி தேசத்திற்கும் முக்கியத்துவம் கொண்ட வரலாற்று சிறப்பு மிக்க ஆண்டாக மாற்றியது. எமது விசேட சேவைகள் தேசத்தின் சுற்றுலாதுறை மற்றும் ஏனைய சேவைத்துறைகளின் அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிக்கு உதவியதுடன் எமது தேசத்தின் நன்மதிப்பினை சர்வதேசரீதியில் உயர்நிலைக்கு இட்டுச் சென்று உலக வரைப்படத்தில் இலங்கையினை அழுத்தமாக பதியச் செய்தன. மீளாய்வு ஆண்டின் மிகப்பெரிய வெற்றியாக இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமானநிலையத்தின் அங்குரார்பணத்தினை குறிப்பிடலாம். இது எமது செயற் திறன், நிபுணத்துவம், முகாமைத்துவ அர்ப்பணிப்பு, என்பவற்றினை பறைசாற்றுவதுடன் நிறுவனம் பிராந்தியத்தில் சிறந்த விமான கட்டுப்பாட்டு மற்றும் விமான சேவைகள் வழங்குனர்களின் ஒருவராகவும் திகழ்கின்றது.



# பொருளடக்கம்


நிதிசார் தனிச்சிறப்புகள் 02

செயற்பாடு சார்ந்த தனிச்சிறப்புகள் 03

தனிச்சிறப்பு நிகழ்வுகள் 04

தவிசாளரின் மீளாய்வு 08

பணிப்பாளர் சபை 12

சிரேஷ்ட முகாமைத்துவம் 13

முகாமைத்துவ உரையாடலும் பகுப்பாய்வுகளும் 17

நிதி மீளாய்வு 40

மனித வளங்கள் முகாமைத்துவம் 45

நீண்டகால நிலைப்பாட்டு அறிக்கை 52

கூட்டிணைப்பு ஆளுமை 55

இடர் முகாமைத்துவம் 60

நிறுவனத்தின் அலுவலகள் தொடர்பில் பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை 64

சுயாதீனக் கணக்காய்வாளர்களின் அறிக்கை 71

விரிவான வருமானக் கூற்று 72

ஐந்தொகை 73

பங்குகள் மாற்றங்கள் அறிக்கை 74

காசுப்பாய்ச்சல் அறிக்கை 75

நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் 76

# நிதி சார்ந்த
# தனிச்சிறப்புகள்

| | 2013 | 2012 | +/- %* | 2012 | 2011 | +/- % |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் | |
| மொத்த விற்பனை வரவு | 12,110 | 11,114 | 9% | 11,114 | 9,290 | 20% |
| பெறுமானத்தேய்வுக்கு முன் தொழிற்பாட்டுச் செலவு | 7,468 | 5,214 | -43% | 5,214 | 4,598 | -13% |
| **EBITD** | 4,642 | 5,899 | -21% | 5,899 | 4,693 | 26% |
| நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு | 1,751 | 1,011 | -73% | 1,011 | 1,135 | 11% |
| நிகர நிதிச் செலவுகள் / (வருமானம்) | (1,855) | 1,030 | 280% | 1,030 | 1,417 | 27% |
| வரிக்குமுன் இலாபம் | 4,746 | 3,859 | 23% | 3,859 | 2,141 | 80% |
| வருமான வரி | 1,192 | 1,121 | 6% | 1,121 | 751 | 49% |
| **வரிக்கு பின் இலாபம்** | 3,554 | 2,738 | 30% | 2,738 | 1,390 | 97% |
| ஓப்புரவுப் பங்குதாரர்கள் சார்ந்த இலாபம் | 3,554 | 2,738 | 30% | 2,738 | 1,390 | 97% |
| பங்கிலாபங்கள் | 500 | - | 100% | - | 2,106 | 100% |
| திசம்பர் 31இல் காசும் காசு சார்ந்தவையும் | 4,031 | 4,425 | -9% | 4,425 | 4,215 | 5% |
| **முக்கியமான நிதிசார் விகிதாசாரங்கள்** | | | | | | |
| ஓப்புரவின்மீது வருவாய் | 47.8% | 64.9% | -29% | 64.9% | 109.0% | -40% |

* வித்தியாசங்களை முழுத் தானமாக்குவதற்கு அமைவானது

+ = சாதகமானது

- = பாதகமானது

# செயற்பாடு சார்ந்த தனிச்சிறப்புகள்

| | | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|
| **நிதிசார்ந்த சிறப்பம்சங்கள்** | | | | | |
| மொத்த வருமானம் | ரூ. மி | 12,110 | 11,114 | 9,290 | 8,272 |
| வரிக்குமுன் தேறிய இலாபம் | ரூ. மி | 4,746 | 3,859 | 2,140 | *** 5,609 |
| திசம்பர் 31இல் பங்குதாரர்களின் நிதியம் | ரூ. மி | 7,441 | 4,217 | 1,274 | 1,877 |
| திசம்பர் 31இல் நடைமுறையற்ற சொத்துக்களின் முன்னெடுக்கப்படும் மொத்தத்தொகை | ரூ. மி | 47,193 | 42,044 | 25,647 | 15,607 |
| திசம்பர் 31இல் மொத்த நடைமுறைச் சொத்து | ரூ. மி | 9,079 | 7,488 | 10,625 | 14,345 |
| திசம்பர் 31இல் மொத்த நடைமுறைப் பொறுப்புகள் | ரூ. மி | 7,058 | 4,181 | 4,011 | 2,953 |
| ஆண்டிற்கான மொத்த மூலதனச் செலவினம் | ரூ. மி | 6,378 | 17,449 | 9,165 | 544 |
| ஆண்டிறுதியில் காசும் காசு சார்ந்தவையும் | ரூ. மி | 4,031 | 4,425 | 4,203 | 7,020 |
| **தொழிற்பாடு சார்ந்த முக்கிய அம்சங்கள்** | | | | | |
| சர்வதேச வான் பயண நகர்வுகள் | எண். | 52,178 | 48,416 | 43,454 | 34,088 |
| பயணிகளின் நகர்வுகுகள்* | எண். | 7,348,006 | 7,079,920 | 6,145,532 | 5,259,648 |
| விமான சரக்குகளின் நகர்வுகள்** | மெ.தொ | 194,039 | 186,618 | 168,577 | 167,130 |
| திசம்பர் 31இல் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை எண். | எண். | 3,674 | 3,445 | 3,306 | 3,179 |
| **விகிதாசாரப்படி முக்கிய அம்சங்கள்** | | | | | |
| வரிக்குமுன்னர் மொத்த வருமானத்திற்கு தேறிய இலாபம் | % | 39 | 34.7 | 23 | 68 |
| வரிக்குமுன்னர் பங்குதாரர் நிதியத்திற்கு தேறிய இலாபம் | % | 64 | 92 | 168 | 299 |
| கம்பனி மொத்தச் சொத்துக்களுக்கு மொத்த வருமானம் | தடவை | 0.22 | 0.22 | 0.26 | 0.28 |
| ஊழியர் ஒருவருக்கு மொத்தச் சொத்துக்கள் | ரூ.'000 | 15,316 | 14,378 | 10,972 | 9,422 |
| ஊழியா ஒருவருக்கு மொத்த பணியாட்டொகுதிச் செலவு - ஆண்டிற்கு | ரூ.'000 | 1,135 | 1,020 | 942 | 888 |
| கையாளப்பட்ட வான் பயணம் ஒன்றிற்கு மொத்தச் செலவு | ரூ.'000 | 141 | 164 | 176 | 123 |
| பயணி ஒருவருக்கு வருமானம் | ரூ. | 1,648 | 1,570 | 1,512 | 1,573 |
| பயணி ஒருவருக்கான வரிக்கு பின்னரான இலாபம் | ரூ. | 484 | 387 | 226 | 929 |
| ஊழியர் ஒருவருக்கு வானூர்தி நகர்வுகள் | எண். | 14 | 14 | 13 | 11 |
| வானூர்தி ஒன்றிற்கான பயணிகள் | எண். | 141 | 146 | 141 | 154 |
| ஊழியர் ஒருவருக்குப் பயணிகள் | எண். | 2,000 | 2,055 | 1,859 | 1,654 |
| நிகர சொத்துக்கள் மீதான இலாபம் | % | 50 | 65 | 109 | 260 |
| மொத்த சொத்துக்கள் மீதான் இலாபம் | % | 7 | 6 | 4 | 16 |
| இலாப விகிதாசாரம் | % | 30 | 25 | 15 | 59 |
| பங்கொன்றுக்கான சம்பாத்தியம் | ரூ. | 17,768 | 13,688 | 6,943 | 24,441 |
| நடைமுறை விகிதாசாரம் | தடவை | 1.29 | 1.79 | 2.65 | 4.86 |
| உடனடி சொத்து விகிதம் | தடவை | 1.24 | 1.73 | 2.58 | 4.78 |
| மொத்த செலவினங்களுக்கான மொத்த வருமானம் | தடவை | 1.64 | 1.53 | 1.30 | 3.11 |

* பயணிகள் நகர்வில் வந்தடைதல், புறப்படுதல், இடமாற்றம், இடைப்போக்குப் பயணிகள் என்பன அடங்கும். இடமாற்றமும் இடைப்போக்குப் பயணிகளும் இருமுறை கணிப்பிடப்படுகின்றன.

** விமான சரக்கு நகர்வுகளில் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் இடைமாற்ற விமான சரக்கு (இரு தடவை கணிப்பிடப்படும்) என்பன அடங்கும். வான் கடிதங்கள் புறநீக்கம் செய்யப்பட்டுள்ளன.

*** இது முன்னைய ஆண்டின் தேய்மான விகிதங்களின் மீளாய்வு மற்றும் SLFRS விதிமுறைக்குட்பட்ட கணக்குகளின் ஒன்றாக்கலான ரூ. 3.7 பில்லியன் சீராக்கலை உள்ளடக்குகின்றது.



# நிகழ்வுகளின் தனிச்சிறப்புகள் 2013

# தனிச்சிறப்புகள்

## நிகழ்வுகள் 2013



சனவரி



பெப்ரவரி



மார்ச்



ஏப்ரல்



ஏப்ரல்




ஜூலை



செப்டெம்பர்



அக்டோபர்

### *சனவரி*

**மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் (MRIA) வரலாற்று சிறப்புமிக்க பரிச்சார்த்த விமான தரையிறக்கம் இடம்பெற்றது.**

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானசேவைக்குரிய A330 ரக விமானம் 2013 சனவரி 29 ஆம் திகதி ம.ச.வி.நி வெற்றிகரமாக தரையிறங்கியது. குறித்த விமானம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு காலை 9.45 இற்கு மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கு வந்தடைந்தது.

### *பெப்ரவரி*

**டர்கிஷ் எயார்லைன்ஸ் இஸ்தான்புலில் இருந்து கொழும்பு வரை விமான பயணங்களை ஆரம்பித்தது.**

இச்சேவை 2013 பெப்ரவரி 01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. இந்த விமானசேவை IST-MLE-CMB வான் பயண வழியினூடாக வாராந்தம் ஐந்து தடவைகள் விமானப் பயணங்களை மேற்கொள்கின்றது.

### *மார்ச்*

**இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டது**

விஷேட சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானமொன்றினால் தரையிறங்கி, மேன்மைதங்கிய சனாதிபதி மஹிந்த இராஜபக்ஷ அவர்களினால் மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் 2013 மார்ச் 18 ஆம் திகதி அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டது. மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் இலங்கையின் வரலாற்றில் பாரிய உட்கட்டமைப்பு செயற்திட்டங்களில் ஒன்றாகும். விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி இதன் ஆரம்ப திட்டமிடல்களில் பங்கேற்றதுடன், தற்பொழுது விமான நிலைய அபிவிருத்தியாளர், நிர்மாணதாரர் மற்றும் சேவை வழங்குநராக விமானநிலையத்தினை முகாமைத்துவம் செய்கின்றது.

### *ஏப்ரல்*

**எதிஹாட் விமானசேவையால் மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் இடர் மதிப்பீட்டு கணக்காய்வு (RAA)**

எதிஹாட் விமானசேவையால் மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் இடர்பாட்டு மதிப்பீட்டு கணக்காய்வை மேற்கொண்டது. (புதிய விமான நிலையமொன்றின் தமது சேவைகளைத் தொடங்குவதற்காக உள்ள தகைமை உறுதிபடுத்திக் கொள்வதற்காக)

**பிரிட்டிஷ் எயார்வேஸ் ப.ச.வி விமான வலையமைப்பில் இணைந்தது**

பிரிட்டிஷ் எயார்வேஸ் 2013 ஏப்ரல் 15 ஆந் திகதி பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு தமது விமான பயணத்தினை பதினைந்து ஆண்டுகளுக்கு பிறகு மீளவும் ஆரம்பித்தது. பிரிட்டிஷ் எயார்வேஸ் 1990 ஆண்டின் இறுதி வரை கொழும்புக்கான விமானசேவைகளை நடாத்தியது. பின்னர் இலங்கையில் 2009 ஆம் ஆண்டு வரை நிலவிய சமுக அமைதியின்மை காரணமாக சேவைகள் இடைநிறுத்தப்பட்டன. திரும்ப தொடங்கியதும் அதன் மூலம் மாலையூடாக லண்டன் கேட்விக்கிலிருந்து பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தை நோக்கி ஞாயிறு, புதன் மற்றும் வெள்ளி தினங்களில் போயிங் 777-200 ரக விமானங்களினால் வாராந்தம் மூன்று தடவைகள் விமானசேவைகளை வழங்கப்படும்.

### *மே*

**வானோடல் சேவை வசதிகளின் விரிவாக்கம்**

2012 ஆண்டு பொருத்தப்பட்ட விமான போக்குவரத்து செய்திகள் கையாளுகை முறைமை (AMHS), மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திலும் சேவைகளை வழங்குவதற்காக விரிவாக்கப்பட்டது. அதிகரிக்கும் வானோடல் சேவைத் தேவைப்பாடுகளுக்காகவென புதிய AMHS தொகுதி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், சிவில் விமானசேவைகள் அதிகாரசபை, சிறிலங்கன் எயார்லைனஸ் மற்றும் இலங்கை விமானப்படையில் இணைக்கப்பட்டது.

இலங்கை விமானப்படையில் இணைக்கப்பட்டது. சர்வதேச சிவில் விமானசேவைகள் ஒருங்கமைப்பின் தரங்களுக்கு இணங்கும் வகையிலும், நம்பகத்தன்மையுடைய சேவையை உறுதிப்டுத்தும் வகையிலும் கனேடியன் வழங்குநரின் ஒத்துழைப்புடன் விமான போக்குவரத்து செய்திகள் கையாளுகை முறைமை புதுப்பித்து தரமுயர்த்தப்பட்டது.

### *ஜூன்*

**சாதனைகளை முறியடித்து வான் நெரிசல் எண்ணிக்கையில் முதல் அரையாண்டிற்குள் வளர்ச்சி**

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் நெரிசல் தரவுகள் மூலம் வரலாற்றில் சிறப்புமிக்க அரை வருட செயலாற்றுகை பதிவுசெய்யப்பட்டது. பயணிகளின் எண்ணிக்கை, விமானச் சரக்கு போக்குவரத்து மற்றும் வருடத்துக்குள் விமானங்களுக்கு ஏற்றும் ஆகக்கூடிய நிறையின் தெளிவான வளர்ச்சி என்பன அடங்கலாக இது பதிவு செய்யப்பட்டது.

### *ஜூலை*

**தொழிற்துறைக்கு புதிய உயிரோட்டம்**

2012 ஆம் ஆண்டில் விமானசேவை கற்கை நெறி டிப்ளோமாவினை வெற்றிகரமாக நிறைவு செய்த 2 ஆவது தொகுதி மாணவர்களுக்கான விருது வழங்கும் வைபவம் சிவில் விமானசேவை பயிற்சிகள் நிலையத்தில் CATC இடம் பெற்றது.

**மூன்றாவது விமான சேவை மாணவர்களின் தொகுதி**

விமான சேவை கற்கைநெறி டிப்ளோமாவிற்கான 3ஆவது தொகுதி கல்வி நடவடிக்கைகள் 2013 ஜூலை மாதம் சிவில் விமான பயிற்சிகள் நிலையத்தில் இடம் பெற்றது.



நவம்பர்



நவம்பர்



டிசெம்பர்

## ஆகஸ்ட்

### முதலாவது தாபன வள திட்டமிடல் தொகுதி (ERP)

முதலாவது தாபன வள திட்டமிடல் தொகுதியின் “To Be” கட்டத்தின் வேலைகள் முடிவு செய்யப்பட்டது. இதன் ரூ. 250 மில்லியன் பெறுமதியான கருத்திட்டத்தின் “Go –Live” கட்டம் 2014 முதல் காலாண்டில் ஆரம்பிப்பதற்குள்ளது.

## செப்டெம்பர்

### ம.இ.ச.வி இன் வசதிகளை மேம்படுத்தல்

வி.வி.சே.க 2013 செப்டெம்பர் 06 ஆம் சைனா ஹாபர் இன்ஜினியரிங் கம்பனியுடன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது. இதன் கீழ் மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலைய பராமரிப்பு, பழுதுபார்த்தல்கள், திட்டமிடல்கள், நிர்மாணித்தல் மற்றும் விமான நிலையத்தின் வசதிகளை தரமுயர்த்தல் போன்ற வசதிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## ஒக்டோபர்

### ப.ச.வி நிலையத்தில் அதிவிசேட விருந்தினர்களுக்கான ஓய்வறை

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அதிவிசேட விருந்தினர் ஓய்வறை 2013 ஒக்டோபர் 27 ஆம் திகதி மேன்மைதங்கிய சனாதிபதி மஹிந்த இராஜபக்ஷ அவர்களினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டிற்காக (CHOGM) ஆயத்தமாகும் நிகழ்ச்சித்திட்டத்தின் பகுதியாக இந்த நவீனமயப்படுத்தும் மற்றும் பரவலாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## நொவெம்பர்

### பொதுநலவாய தேசத்தலைவர்களின் மாநாடு (CHOGM)

வி.வி.சேவைக் கம்பனி உலகெங்கும் இருந்து பலநூறு பிரதிநிதிகளின் வருகை மற்றும் புறப்படுகையினை தொடர்பான பொறுப்பு சீரான முறையில் ஒருங்கிணைத்து சீராக கையாண்டது. இலங்கையில் முதல் முறையாக நடைபெறும் பொதுநலவாய தேசத்தலைவர்களின் மாநாடு வெற்றிபெற பாரிய ஒத்துழைப்பை வழங்கியது. இங்கு இரத்மலானை விமானநிலையத்தின் முனையக் கட்டடம் புதுப்பிக்கப்பட்டது.

கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தில் புதுப்பிக்கப்பட்ட முனையக் கட்டிடம், அதி அதிவிசேட விருந்தினர் ஓய்வறை, புதிய அதிவிசேட விருத்தினர் ஓய்வறை, வாகன தரிப்பிடம் 2013 நவம்பர் 08 ஆம் திகதி மேன்மைதங்கிய சனாதிபதி மஹிந்த இராஜபக்ஷ அவர்களினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

## திசெம்பர்

### கிறிஸ்மஸ் விற்பனை திருவிழா

கிறிஸ்மஸ் விற்பனை திருவிழா ப.ச.வி வரிச்சலுகை விற்பனை மேம்பாட்டு திட்டத்தின்

ஓர் அங்கமாக ப.ச.வி. கிறிஸ்மஸ் விற்பனை திருவிழா 2013 திசெம்பர் மாதம் தொடாக்கம் சனவரி இறுதிவரை இடம்பெற்றது.

# சரியான
## வழிப்பாதையில் செல்லும்
# பயணம்



# முகாமைத்துவ அறிக்கைகள்



தெளிவான தோற்றம், நன்கு திட்டமிடப்பட்ட வினைமுறைத் திறன், தகுதிபெற்ற மற்றும் அனுபவங்களால் தேர்ந்த பணியாளர்களுடன் வளர்ச்சியின் திசையை நோக்கி வெற்றிகரமாக பயணிப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

# தவிசாளரின் மீளாய்வு



**பிரசன்ன ஜே விக்ரமசூரிய** WWV RWP RSP
தவிசாளர்

**எமது வாடிக்கையாளர் தளத்தினை வலுவூட்டும் கொள்கை மற்றும் பிரதான வாடிக்கையாளர்கள் மத்தியிலுள்ள நீண்டகால உறவுகளே எமது வருவாய் அதிகரிப்பிற்கு முக்கிய காரணம் என நம்புகின்றேன். மேற்குறிப்பிட்ட எமது வெளிநாட்டு தொழிற்பாட்டு வருமானங்களின் வளர்ச்சியுடன் தொடர்புடைய விஷேட 10 சேரிடங்களுக்குள் படிநிலைப்படுத்தாத கொரியா, துருக்கி, அவுஸ்திரேலியா போன்ற மரபுவழியல்லாத சேரிடங்களுக்கு பயணங்களை மேற்கொண்டமையே வருடத்துக்குள் காணக்கூடியதாகயிருந்த கவர்ச்சிகரமான மேம்பாடாகும்.**

அன்பிற்குரிய பங்குதாரர்களே,

மீளாய்வுக்குட்பட்டுள்ள இவ்வாண்டு விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி வரலாற்று முக்கியத்துவம் மிக்கதொரு ஆண்டாகும். இலங்கையினை சர்வதேச ரீதியாக போட்டியடிப்படையிலான வர்த்தக மற்றும் பிராந்திய விமானசேவை நிலையமாக உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட சுற்றுலா மற்றும் விமானயணத்திற்கான புதிய தொரு நுழைவாயிலாக ஊக்குவிக்கும் சர்வதேச ரீதியில் பல்வேறு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன. இது தற்போதைய உட்கட்டமைப்பில் பல்வேறு மாற்றங்களை வேண்டி நிற்கும் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். 2013 மார்ச் 18 ஆம் திகதி மத்தல மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் அங்குரார்பணம் மற்றும் அதன் வெற்றிகரமான வர்த்தக செயற்பாட்டுகளின் ஆரம்பம் ஆண்டின் மிக முக்கிய நிகழ்வாகும்.

இவ் ஆண்டில் பொதுநலவாய நாடுகளின் தேசத்தலைவர்களின் மாநாட்டு இலங்கை இடம்பெற்றது. 24 ஆண்டுகளின் பின்னர் ஆசிய நாடு ஒன்று இதனை நடாத்தும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும். இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருதடவை பொதுநலவாய நாடுகளின் தலைவர் ஒன்று சேர்ந்து சர்வதேசரீதியான பிரச்சினைகள் மற்றும் பொதுநலவாய பிரச்சினைகள் பற்றி ஒன்றுதிரட்டப்பட்ட கொள்கைகள் மற்றும் முயற்சிகள் வாயிலாக ஆராயும் மாநாடு ஆகும். இந்நிகழ்வின் போது தேசத்தலைவர்களின் வருகை மற்றும் புறப்படுகைகளுக்கு பொறுப்பாக இருந்து உயர் ஆளுமை திறனை விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி வெளிப்படுத்தியிருத்தமையை அதன் தலைவராக இங்கு குறிப்பிடுவதில் பெருமையடைகின்றேன். இது முற்றிலும் மிகச் சிறந்த செயலாற்றல் வெளிப்படுத்தலாக இருந்தது.

## செயற்பாட்டு மீளாய்வு

2013 ஆம் ஆண்டில் உலக பொருளாதாரம் சற்று வீழ்ச்சிப்போக்கில் இருந்த போதிலும் ஆண்டிறுதில் பொருளாதார செயற்பாட்டில் பாரிய அதிகரிப்பை காட்டிய. எமது முக்கிய செயற்பாடுகளாக பயணிகள் போக்குவரத்து, சரக்கு அசைவுகள், மற்றும் விமான அசைவுகள் புதிய சாதனைகளை படைத்தன. இதன் மூலம் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி 2013 ஆம் ஆண்டில் வருவாயான ரூபா 12.1 பில்லியன்களை ஈட்டியது. 2012 ஆம் ஆண்டு வருமானம் 11.1 பில்லியன்கள் ஆகும். இது 9% வளர்ச்சியாகும்.

வெளிநாட்டு விமானசேவைகள் மற்றும் வெளிநாட்டு தீர்வை விலக்கு செயற்பாட்டாளர்களிடமிருந்தான வருவாய் ரூபா. 6,074 மில்லியனாகும். இது கடந்த ஆண்டினை விடவும் 12% அதிகரிப்பாகும். இது மொத்த வருவாயின் 50% த்தினை உள்ளடக்கியுள்ளது. வருமானத்திற்கான முக்கிய காரணி இலங்கை சிறந்த சுற்றுலா தளத்திற்கான வர்த்தக நன்மதிப்பை உணரப்பட்டமையாகும். இலங்கையின் பொருளாதார வளர்ச்சியின் மிகமுக்கிய காரணியாக விளங்கும் சுற்றுலாதுறையின் வளர்ச்சி மிகச்சிறப்பான கட்டமைப்பு காணப்படும்மிடத்து 2016 ஆம் ஆண்டு எமது இலக்கான 2.5 மில்லியன் சுற்றுலா பயணிகள் என்ற இலக்கினை அடையலாம். பயணிகள், சுற்றுலா பயணிகள் மற்றும் விமான சேவைகளுக்கு தம்மை மிகவும் சிநேகபூர்வமான, துல்லியமான பாதுகாப்பான விமானசேவைகள் வழங்குநராக நிறுவனம் நிலைப்படுத்தியுள்ளது. மேலும் எமது இரண்டாவது சர்வதேச விமான நிலையம் மிகமுக்கிய மாற்று விமான நிலையமாகவும் உள்ளது. இதன் மூலம் மேலதிக எரிபொருள்களை சுமந்து வருவதற்கு பதிலாக மேலதிக சரக்குத் தொகுதிகளை கொண்டுவருவதற்கு முடிவதால் விமானசேவைக் கம்பனிகளுக்கு பாரிய சேமிப்பு ஏற்படுகின்றன.

எமது வாடிக்கையாளர் தளத்தினை வலுவூட்டும் கொள்கை மற்றும் பிரதான வாடிக்கையாளர்கள் மத்தியிலுள்ள நீண்டகால உறவுகளே எமது வருவாய் அதிகரிப்பிற்கு முக்கிய காரணம் என நம்புகின்றேன். பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் சலுகைத் தொழிற்பாடு காரணமாக இத்தாலி, இந்தியா மற்றும் ஐக்கிய அறபு எமீர் குடியரசுடன் தொடர்புடைய வெளிநாட்டு தொழிற்பாடுகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தது. மேற்குறிப்பிட்ட எமது வெளிநாட்டு தொழிற்பாட்டு வருமானங்களின் வளர்ச்சியுடன் தொடர்புடைய விஷேட 10 சேரிடங்களுக்குள் படிநிலைப்படுத்தாத கொரியா, துருக்கி, அவுஸ்திரேலியா போன்ற மரபுவழியல்லாத சேரிடங்களுக்கு பயணங்களை மேற்கொண்டமையே வருடத்துக்குள் காணக்கூடியதாகயிருந்த கவர்ச்சிகரமான மேம்பாடாகும்.. இது எமக்குரிய முக்கிய 10 இடங்களில் இதற்கு முன்னர் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு முக்கிய காரணம் இவ்வாண்டில் கொரியன் ஏயார்லைன் மற்றும் தர்கிஸ் ஏயார்லைன் ஆகியவற்றின் செயற்பாடுகளின் ஆரம்பமாகும். மேலும் குவன்டஸ் ஏயார்லைனின் அதிக பரப்புகளும் அதிகமான வெளிநாட்ட நாணய வருவாயை அவுஸ்திரேலியாவில் இருந்து எமக்கு பெற்றுத் தந்தன.

2013 ஆம் ஆண்டின் வானவழி வருவாய் 12% வளர்ச்சியடைந்து 3.05 பில்லியனாகவும், வான்வழியல்லாத வருமானம் சாதனையளவான 15% அதிகரிப்புடன் 9.2 பில்லியன்களாகவும் பதிவாகின மேலும் சரிய முகாமைத்துவ வழிகாட்டல் மற்றும் தீர்மானங்கள் காரணமாக விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி தீர்வையற்ற விற்பனைகளின் வருவாயை மற்றும் வான்வழிசாராத வருமானங்களை மொத்த வருவாயின் 76% ஆக அதிகரித்து கொள்ள முடிந்தது. மொத்த செலவினங்கள் ரூபா 9.2 பில்லியன் ஆகும் 2012 ஆம் ஆண்டில் செயற்பாட்டு செலவினங்களுடன் நோக்குகையில் ரூபா 3,028 மில்லியன் அதிகரிப்பாகும். செயற்பாட்டு செலவினங்கள் அதிகரிக்க குறித்த ஆண்டில் ப.ச.வி பயணிகளின் அசைவுகளில் காணப்பட்ட அதிகரிப்பே காரணமாகும்.

# தவிசாளரின் மீளாய்வு தொடர்ச்சி.

## இரண்டாவது சர்வதேச விமான நிலையம்

அம்பாந்தோட்டை சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி கருத்திட்டமாக கருதும் ம.இ.ச.வி இன் நிர்மாணப் பணிகள் 2009 ஆம் ஆண்டு நொவெம்பர் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. தேசத்தின் வரலாற்றில் முக்கிய மைல்கல்லாக கருதப்படுவதுடன், அதன் நிர்மாணப் பணிகள் திட்டமிடப்பட்ட திகதிக்கு முன்னரே 2013 மார்ச் மாதம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அதற்காக இக்கருத்திட்டத்திற்கு பங்களிப்பச் செய்த மதியுரையாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்கள் சோர்வின்றி தமது விஷேட திறமைகளை இந்த கருத்திட்டத்தின் வெற்றிக்காக அர்ப்பணித்த எமது ஊழியர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன். ம.இ.ச.வி அது செயற்பட தொடங்கிய திகதி தொடக்கம் சர்வதேச சேரிடங்களை நோக்கி விமான சேவைகளை நடாத்தி வருகின்றது. இத்திட்டத்தின் முதல் கட்டத்திற்கான செலவு அ.டொ 209 மில்லியன்கள் என்பதுடன் அ.டொ 190 மில்லியன்கள் சீனாவின் எக்ஸிம் வங்கியினால் சலுகைக் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டதுடன், மிகுதி தொகையான அ.டொ. 19 மில்லியன்கள் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியால் பொறுப்பேற்கப்பட்டது. இக்கடனுக்கான திருப்பி செலுத்தும் பொறுப்பினை அரசாங்கத்துக்கு பாரம் சாட்டாமல் முழுமையாக செலுத்தும் பொறுப்பினை விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி ஏற்றுள்ளது.

ம.இ.ச.வி ஓராண்டிற்கு 01 மில்லியன் பயணிகள், 30,000 விமானங்கள் மற்றும் 45,000 மெட்ரிக் தொன் சரக்கு அசைவுகளை கையாளும் திறனை கொண்டுள்ளது. இரண்டாம் கட்டத்தின் பின்னர் அது 5 மில்லியனகள் பயணிகளை கையாளும் விதமாக அதிகரிக்கப்பட்டு ஆண்டிற்கான அதன் மொத்த பயணிகள் கையாளுகை திறன் 6 மில்லியன்கள் மற்றும் 45,000 விமானங்கள் மற்றும் 150,000 மெட்ரிக் தொன் சரக்கு அசைவுகள் என்பதாக இருக்கும். இதன் பெறுபேராக 2020 ஆம் ஆண்டாகும்போது ப.ச.வி மற்றும் ம.இ.ச.வி. ஆகிய இரண்டும் இணைந்து வருடத்துக்கு 21 மில்லியன் பயணிகளுக்கு சேவை வழங்கக்கூடியதாக இருக்கும். இது உண்மையாக “பிராந்தியத்தின் விமானபயண நுழைவாயிலாக உருவாகுதல்” என்ற எமது தொனிப்பொருள் யதார்த்தமாக்கிக் கொள்ள முடியும்.

கடந்த 02 ஆண்டுகளில் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி பணிப்பாளா சபையினர், முகாமைக்குழு, ஊழியர்கள் மற்றும் தொடர்புடையவர்கள் இலங்கையின் புதிய சர்வதேச விமான நிலைய நிர்மாணிக்கும் பாரிய கருத்திட்டம் குறித்த காலத்திற்குள் பூர்த்திசெய்வதற்காக அர்ப்பணிப்புடன் கடுமையாக பணியாற்றினார்கள். இங்கு ஆயத்தமாகும் திட்டமிடல்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதனால் முதலாவது நாளிலிருந்து பிரச்சினைகள் ஏதுமின்றி தொழிற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. இதற்கு மேலதிகமாக தொழிறபாட்டு நடவடிக்கைகளுக்காக ஆயத்தப்படுத்தி கையளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்துக்கு (OTAT) உள்ளடக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமானங்களுக்காக பயிற்சி விமானத் தடவைகள் உண்மையான தொழிற்பாடுகளுக்கு சமனான நிலைமையின் கீழ் பயிற்றுவித்ததனால் தடங்களின்றி தொழிற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. ம.இ.ச.வி ஆரம்பத்துடன் விவி.சே.க இடைவெளி விரிவாக்கப்பட்டதுடன் அது இலங்கை பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு எதிரொலியை ஏற்படுத்தியது.

## எதிர்கால கண்ணோட்டம்

எதிர்வரும் ஆண்டுகளில் நாம் ப.ச.வி மற்றும் ம.இ.ச.வி போன்ற இரு நிறுவனங்களினதும் கொள்ளளவை அதிகரிப்பதற்காக பாரியளவு முதலீடுகளில் செய்வதற்குள்ளோம். அதேவேளை விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி பலமான ஐந்தொகையினை பேண வேண்டும். ஏனெனில், திறைசேரியினூடாக பெற்றுக்கொண்ட கடன்களைத் தீர்பதற்கு மட்டுமல்லாது எம்மால் JICA போன்ற வெளிவாரி நிதி திட்டமிடல் நிறுவனத்தினால் நேரடியாக பெற்றுக்கொண்ட கடன்கள் செலுத்த வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும் ப.ச.வி தொடர்பாக கருதும்போது II வது கட்டத்தின் 2வது தொகுதி மூலம் விமானப் பயணிகளுக்கு சேவை வழங்கும் கொள்ளளவு வருடத்துக்கு இன்னும் 9 மில்லியன் பயணிகளை கையாளும் திறனை அதிகரிக்கும். இந்த கருத்திட்டத்துடன் இது 2016 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்த கருத்திட்டங்கள் முன்மொழியப்பட்ட கருத்திட்டங்கள் மத்தியில் முதலிடம் வகிக்கின்றன. ப.ச.வி மற்றும் ம.இ.ச.வி சூழ புகலிடம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள வேறு ஆதனங்கள் அபிவிருத்தி செய்வதற்காக 2013 நொவெம்பர் 13 ஆந் திகதி பொதுநலவாய வர்த்தக சம்மேளனத்தில் சைனா ஹாபர் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கையின் கீழ் கேடிக்கை நிலையம், வணிக மையம் மற்றும் விற்பனை அங்காடி மற்றும் அடுக்குமாடி வாகன தரிப்பிடம் என்பன அமைக்கப்படும். இதற்காக ப.ச.வி அருகில் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட புதிய 7.5 ஏக்கர் காணி பயன்படுத்தப்படும். (சொத்துக்களில் மேற்கொண்ட மேலும் ஒரு சிறந்த முதலீடாகவும் இதனை கொள்ள முடியும்). மேற்கூறிய புரிந்துணர்வு ஒப்பந்தம்படி ம.இ.ச.வி நிலையத்தில் ஒரு தங்குவிடுதி, கோல்ஃப் திடல், தீர்வை விலக்கு விற்பனை கூடங்கள் மற்றும் கேடிக்கை நிலையங்கள் என்பன அமையவிருக்கின்றன. மேலும் வெளிநாட்டு முதலீட்டாளருடன் இணைந்து வி.வி.சேவைக் கம்பனிகள் மூலம் ம.இ.ச.வி இன் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸினால் தொழிற்படுத்தப்படும் விமானங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்களுக்காக (MRO) மொத்த உட்கட்டமைப்பு வசதிகளாலான கட்டிடமொன்று நிர்மாணித்து வருகினறது. மேலும் ம.இ.ச.வி இன் ஸ்ரீலங்கன் விமானசேவைக்காக “பறத்தல் பயிற்சிக் கல்லூரி” நிர்மாணிப்பதற்கும் திட்டமிட்டுள்ளது.

மொத்த வருமானம்
ரூ.12.1 பில். by ↑9%

மொத்த பங்குலாபம்
ரூ.7.4 பில். by ↑76%

வரிக்கு பிந்திய இலாபம்
ரூ.3.5 பில். by ↑30%

மொத்த சொத்து
ரூ.56.3 பில். by ↑13%

மீளாய்வு ஆண்டில் எமது முதலாவது ERP அமைப்பு முறையின் முக்கிய கட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டமை மிகப்பெரிய சாதனையாகும். இது தகவல் தொழில்நுட்பதுறையில் மிகப்பெரிய வெற்றியாகுவதுடன் ERP அமைப்பு முறையின் நேரடி தொழிற்பாடு 2014 ஆம் ஆண்டில் வி.வி.சே.க இற்கு எதிர்காலத்தில் பலனுடைய பிரவேசமாகவுள்ளது.

விமானப் பயணத் துறையின் வாழ்க்கை வட்டத்திற்குள் (ILC) முதிர்ச்சிக் கட்டத்தைக் கடக்கும் ப.ச.வி. அந்த வட்டத்தின் வளர்ச்சிக் கட்டத்தின் காணப்படும் ம.இ.ச. விமானநிலையமும உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் தனிப்பட்ட ஜெட் விமானங்களின் தொழிற்பாடுகள் மேற்கொள்ளும். இரத்மலானை விமானநிலையத்தை கருதும் போது புதிய உற்பத்திச் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக அதிகளவு கேள்வி மற்றும் பரந்த வளர்ச்சி வாய்ப்புக்கள் பல உண்டு. இதனை கருத்திற் கொண்டு அபிவிருத்தி கருத்திட்டங்கள் பல திட்டமிடப்பட்டுள்ளன. அது தொடர்பான மேலதிக தகவல்கள் முகாமைத்துவ உரையாடல் மற்றும் பகுப்பாய்வில்” அடுத்துவரும் 5 ஆண்டுகளுக்காக திட்மிடப்பட்ட கருத்திட்டங்கள்” என்ற தலைப்பின் கீழ் காட்டப்படும்.

இதற்கு மேலதிகமாக துருக்கி, கொரியன், மாலைத்தீவு, அபுதாபியிலுள்ள றொட்டானா ஜெட் மற்றும் எயார் ஏசியா, X பர்ஹாட், போன்ற விமானசேவைகளுடன் இரு தரப்பு 5 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. அதேவேளை கொழும்பிலிருந்து மற்றும் கொழும்பு வரை தொழிற்பாடுகளுக்காக பிரிட்டிஷ் எயார்வேஸ் மீண்டும் தொழிற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. ம.இ.ச.வி தொழிற்பாடுகளை ஆரம்பித்த நாளிருந்து எமது தேசிய விமானசேவை மற்றும் சலுகை விமானசேவையான மிஹின்லங்கா விமானசேவைக்கு மேலதிகமாக பிளய் டுபாய் மற்றும் எமிரேட்ஸ் விமானசேவை எம்முடன் இணைந்தது. விமானநிலையம் இரட்டைத் தன்மையை இலாக்காக் கொண்டு விமான பயண வலையமைப்பை பரவலாக்கும் கலந்துரையாடல்கள் ஏற்கனவே குறித்த தரப்பினர்களுடன் ஆரம்பித்துள்ளது. எமது முக்கியமான நோக்கமாக அமைவது, ப.ச.வி ஆசியா பிராந்தியத்தில் பயணிகள் இடைமாறுபாட்டு நிலையமாக உருவாக்குவதாகும். அதேவேளை 2016 ஆம் ஆண்டாகும் போது 15 மில்லியன்கள் பயணிகள் கையாளுவதற்காக விமானநிலைய கொள்ளவை அதிகரித்தல் மற்றும் பயணிகள் எண்ணிக்கையின் அதிகரிப்பு கையேற்பதுடன் கொழும்பு ஊடாக பரிமாறும் வான் சரக்குகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதாகும்.

நாம் தேர்ச்சிமிக்க பதவியணியின் உதவியுடன் நடைமுறைப்படுத்தும் சேவைத் திட்டமிடலாளராக இருப்பதுடன் அவர்களுக்கு போட்டியடிப்படையிலான உழைப்பூதியத்துடனும், துறையின் இணையற்ற பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தி வாய்ப்புகளும் வழங்கப்படும். புதிய பதவி உயர்வு வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் எமது பதியணியினரின் தொழில்சார் அபிவிருத்திக்காக எம்மால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். எமது ஊழியர்களின் ரூபா 2 பில்லியன் ஆன பணிக்கொடை பொறுப்பு குறித்த நோக்கத்துக்காக கண்டறியப்பட்ட வேறொரு நிதியத்தினூடாக பாதுகாக்கப்பட்டுள்ளன. எம்மால் பல வருடங்களாக பல்வேறு சமூக கூட்டுறவு பொறுப்புகள் (CSR) கருத்திட்டம் ஏற்படுத்தியிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டில் எமது தாபன சமூக பொறுப்புக்களின் பங்களிப்பு ரூபா 18 மில்லியன்களாகும். விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) நீண்டகால நிலைப்பாட்டு கொள்கைகளுக்கு இயைவாக எமது சமூக பொறுப்புக்களின் செயற்பாடு பாடசாலைகள் மற்றும் மருத்துவ மனைகள் நவீனமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள், அங்கவீன படைவீரர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக நிதி நன்கொடைகள், முன்னைய வருடங்களைப்போல இந்த வருடத்திலும் ஆழ்ந்த கவனம் செலுத்தப்படும்.

## இறுதியாக..

மேலும் அதி சிறப்புவாய்ந்த வருடத்தை பூர்த்தி செய்வதற்காக உயர் கடமையுணர்ச்சியுடன் செயலாற்றிய வி.வி.சே.கம்பனியின் பதவியணியினருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும்போது உமது தொடர்வாரியான அர்ப்பணிப்பு மற்றும் இயக்கத்தன்மையை தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றேன். எமது சேவைகளை பயன்படுத்தியமைக்காகவும், பெறுமதிவாய்ந்த கருத்துள்ள தொடர்பை கட்டியமைத்தமைக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கு எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறந்த வாடிக்கையாளர்களின் உறவைப் பேணி அவர்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வது எமக்கு மிகவும் முக்கியமானதாகவுள்ளது. விமானநிலைய சேவைத் திட்மிடலாளராக ஏனைய விமானநிலைய உதவியாளர்கள் எம் மீது வைத்துள்ள நம்பிக்கை மேலும் வளரச்செய்வதில் நாம் எழுச்சியூட்டப்படவேண்டும். எனது ஏனைய பணிப்பாளர்களுக்கும், சிரேஷ்ட முகாதைத்துவத்துக்கும், எமது பங்குதாரர்களுக்கும், அதிக பெறுமதியைச் சேர்ப்பதற்காக அதிக விவேகத்துடன் செயலாற்றிய எனது ஏனைய பணிப்பாளர்களுக்கும் மற்றும் உதவிகள் மற்றும் வழிக்காட்டல்களை வழங்கிய முதுநிலை முகாமைத்துவத்துக்கும் எனது மனமார்ந்த நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

இறுதியாக, தவறாத கண்ணோட்டம், ஒத்துழைப்பு, மற்றும் தலைமைத்துவத்துக்காக இலங்கை அரசுக்கு எனது உள்ளார்ந்த பாராட்டை தெரிவிக்கின்றேன். “மஹிந்த சிந்தனை அபிவிருத்தி தொலைநோக்கில்” காட்டப்பட்டுள்ளவாறு இலங்கையை பொருளாதார அபிவிருத்தியின் பிரதான ஐந்து மையங்களில் ஒன்றாக உருவாக்கும் தொழிற்பாட்டுக்குள் முதல்நிலை கடமைப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு கிடைத்தமை தொடர்பாக வி.வி.சே.க. (இலங்கை) கம்பனி பெருமையடைகின்றது.

**பிரசன்ன ஜே விக்ரமசூரிய** WWV RWP RSP



தவிசாளர்

2014 யூன் 18

# பணிப்பாளர் சபையினர்



இடமிருந்து வலமாக:

திரு. எஸ் பி சேனாரத்ன - பணிப்பாளர், திருமதி எம் சீ ஜீ மஹிபால - கம்பனிச் செயலாளர்,
திரு. யோகா பெரேரா - பணிப்பாளர், திரு. ஜே ஆர் யூ டீ சில்வா - பணிப்பாளர்,
திரு. கமால் எஸ் ரத்வத்த - துணைத் தவிசாளர், திரு. பிரசன்ன ஜே விக்ரமசூரிய - தவிசாளர்,
திரு. கோசல விக்ரமநாயக - பணிப்பாளர், செல்வி ஷானிகா கொபல்லவ - பணிப்பாளர்,
திரு. யோஹான் ஜயரத்ன - நிறைவேற்றுப் பணிப்பாளர், திரு. ஆனந்த குணதிலக - பணிப்பாளர்,





# சிரேஷ்ட முகாமைக்குழு







இடமிருந்து வலமாக:

எஸ் பி ஆர் மனுகுலசூரிய - சந்தைப்படுத்தல் பதிற் தலைவர்

திருமதி எம் ரத்னசிங்க - சட்டத்துறை தலைவர்

எல் தஹாநாயக - நிதிப் பிரிவுத் தலைவர்

லெப்.கேனல். கே எச் சீ குமாரசிங்க - பாதுகாப்பு சேவைகள் பகுதித் தலைவர்

திரு. யூ ஜே  லொக்குவாராச்சி - தகவல் தொழில்நுட்ப பதிற் தலைவர்

திரு. எச் பி எல் சிறிமான்ன - வழங்கல் தொடர் முகாமைத்துவப் பகுதி பதிற் தலைவர்

எஸ் எம் டீ. விஜேசூரிய - பாதுகாப்பு பதில் தலைவர்

டப்ளியு. விமலசாந்தி - இலத்திரனிவியல் மற்றும் வான்போக்குவரத்து பொறியியல் தலைவர்,

விபுல விமலசாந்தி - இலத்திரனியல்மற்றும்  வான்வழிப்பாதை பொறியியல் தலைவர்,

ஏ டீ என் ஆர் டீ அல்விஸ் குணசேகர - தீயணைப்பு மற்றும் மீட்பு சேவைகள் தலைவர்

எஸ் எம் ஆர் ரபீக் - கருத்திட்டங்களின் தலைவர்,

ஜே எம் டி குரோஸ் ரூபன் - விவசாய, காணியமைப்பு மற்றும் உள்ளக வடிவமைப்பு பதிற் தலைவர்

எச் எஸ் ஹெட்டியராச்சி - விமானநிலைய முகாமைத்துவ தலைவர்,





இடமிருந்து வலமாக:

டி பி கருணாரத்ன - பிரதான நிறைவேற்று அதிகாரி / ம.இ.ச.வி.நி

ஜீ விதானகே - சிவில் பொறியியல் தலைவர் (திட்டமிடல், வடிவமைப்பு)

திரு. ஆர் டப்ளியூ விஜேசிங்க - சிரேஷ்ட இயந்திர பொறியியலாளர். வெளிநாட்டு செயற்பாடுகள், இயந்திரநுட்பப் பொறியியல் பகுதி பதிற் தலைவர்,

திருமதி எம். சீ ஜீ மஹிபால - மனித வள பகுதித் தலைவர் / கம்பனிச் செயலாளர்,

வைத்தியர். எஸ் டி ஏ எஸ் நிசாந்த - நிறுவனத்தின் மருத்துவ அதிகாரி

எச் ஏ ஏ கே எம் செனவிரத்ன - சிவில் வான்போக்குவரத்து பயிற்சி பகுதித் தலைவர்,

திருமதி டப்ளியூ சீ திசேரா - வான் வழிச் சேவைகள் பகுதி தலைவர்

டப்ளியூ எம் ஜீ கருணாரத்ன - வணிக மற்றும் ஆதனங்கள் பகுதித் தலைவர்,

டப்ளியூ ஜீ சிறில் - உள்ளக கணக்காய்வு மற்றும் தரஉறுதிப்பாட்டுப் பகுதித் தலைவர்

திரு. ஜே எம் ஏ யூ ஜயமான்ன - மின்சாரப் பொறியியல் பதிற் தலைவர்

*படத்தில் இல்லை*

யூ எஸ் ஜாகொட - சிரேஷ் சிவில் பொறியியலாளர் / சிவில் பொறியியல் தலைமை பொறுப்பேற்க பணியாற்றுகின்றார் (பராமரிப்பு)

# வளமான
## எதிர்காலத்திற்கான
# திட்டமிடல்



# முகாமைத்துவ உரையாடலும் பகுப்பாய்வுகளும்



எமது அபிவிருத்தி அணுகுமுறைகள் மூலம் நமக்கு மாத்திரமின்றி முழுதேசத்துக்கும் மிகவும் சிறப்புமிக்க வளமான எதிர்காலம் உறுதிசெய்யப்படும்.

# முகாமைத்துவ
# உரையாடலும் பகுப்பாய்வுகளும்

விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியானது பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் மற்றும் இரத்மலானை விமானநிலையம் ஆகிய மூன்று விமானநிலையங்களின் செயற்பாடுகளை நிர்வகிக்கும் நிறுவனமாகும். இலங்கையின் புதிய சர்வதேச விமான நிலையமான மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் 2013 மார்ச் 18 தொடக்கம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக சேவைகளை முழுமையாக நடாத்துகின்றது.

2013 ஆம் நிதியாண்டினுள் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி 31 திட்டமிட்ட விமானசேவைகளுக்கு சேவையினை வழங்கியது. பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் விமான கையாளுகை 50,802 விமானங்கள் ஆகும். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5% அதிகரிப்பாகும். அதன் மூலம் 7,311,869 இதற்கு சேவை வழங்கப்பட்டதுடன் அது கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 3% வளர்ச்சியாகும். இதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தன. சுற்றுலா அபிவிருத்தி மற்றும் 2013 நொவெம்பர் மாதம் இடம்பெற்ற பொதுநலவாய தேசத்தலைவர்களின் மாநாடும் முக்கியமாகும். குறை செலவுடைய விமான சேவைகளின் பயணிகள் கொள்ளளவு 19% அதிகரித்ததுடன் இந்த ஆண்டில் அசைவுகள் 4079 ஆக இருந்தது. வருடத்துக்குள் முறையாக சரக்கு மற்றும் அஞ்சல் 193,975 மெட்ரிக் தொண் மற்றும் 1,811 மெட்ரிக் தொண் போக்குவரத்து செய்யப்பட்டதுடன், அதன் வளர்ச்சி முறையாக 4% மற்றும் பூச்சிய அதிகரிப்பாகும்.

மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் மூலம் வர்த்தக விமானங்களின் அசைவுகள் 1,376 உம், பயணிகள் எண்ணிக்கை 36,137 இற்கும் சேவை வழங்கப்பட்டது.

இரத்மலானை விமானநிலையத்தின் மூலம் உள்ளூர் விமான அசைவுகள் 5,986 மற்றும் உள்நாட்டு பயணிகள் 7,435 சேவை வழங்கியுள்ளது. இது 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிறிய பின்னடைவாகும். அவ்வாண்டு 6,128 விமான அசைவுகளுடன் 11,100 பயணிகளாக இருந்தது.

### தற்போதைய சந்தைபோக்கு தொழிற்துறை கண்ணோட்டம

#### உட்கட்டமைப்பு வசதிகளுக்கான முதலீடுகள் மிக முக்கியமாகவுள்ளன.

சிவில் விமானசேவைகள் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக முதலீடு செய்வது, வர்த்தக ரீதியாக அத்துறையின் வளர்ச்சிக்கு அத்தியவசியமாகும். விமான சேவையின் வளர்ச்சி தொழிற்பாட்டிற்குள் விமானநிலையம், தேசிய வானெல்லை முகாமை நிறுவனங்கள் மற்றும் விமான சேவைகள் பல்வேறு சவால்களையும் வாய்ப்புகளையும் அனுபவிக்கின்றன. போயின்ங் கண்காணிப்புகளுக்கிணங்க விமானங்களின் தரையிறக்கம் மற்றும் மேலெழும்போது விமானநிலையத்தில் காணப்படுகின்ற நிகழ்கால கொள்ளளவை நோக்கி செல்வதற்கு அல்லது விஞ்சுவது காரணமாக எதிர்வரும் 20 ஆண்டுகளில் உலகம் பூராவுமுள்ள பல்வேறு விமான நிலையங்களில் பாரிய நெரிசல் காணப்படுவதாக கூறப்படுகின்றது. உலகின் மிகவும் பரபரப்பான விமான நிலையமான, லண்டன் ஹீத்ரு போன்ற விமான நிலையங்கள் ஏற்கனவே ஒரு மணித்தியாலத்திற்குள் கையாள முடியுமான விமானப் பயண அளவில் உச்சளவை இப்போதைக்கு நெருங்கியுள்ளது. அத்துடன் எதிர்பார்க்கக்கூடிய விமானப் பயண வளர்ச்சிக்கு முகங்கொடுப்பதற்கு போதுமானளவு கொள்ளளவு காணப்படும் விமானநிலையங்களும் உள்ளன. நெரிசல் இல்லாத கால எல்லைகளில் காணப்படும் கொள்ளளவு போதுமானதாக இருப்பினும் கேள்வி மிகவும் அதிகமான காலை மற்றும் மாலை வேளைகளில் அவற்றினை நிறைவேற்றுமான அளவிற்கு கொள்ளளவு காணப்படாத விமானநிலையங்களும் உண்டு.விமான பயணங்களின் அதிகரிப்பு திட்டமிடப்பட்டுள்ள குறித்த உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியை விஞ்சிய நிலையிலுள்ள சீனா, வட மற்றும் தெற்காசியா, இந்தியா மற்றும் லத்தீன் அமெரிக்கா போன்ற பிராந்தியங்களில் குறித்த உட்கட்டமைப்பு வசதிகளுக்காக தொடர்ந்தும் முதலிடுவது மிக முக்கியமானதாகும்.

### மூலதன மேம்பாடுகள்

உலகம் பூராவமுள்ள விமானநிலைய அதிகாரசபைகள் புதிய விமான ஓடுபாதைகள், முனைய கருத்திட்டம் மற்றும் புதிய விமான நிலையங்களை நிர்மாணித்து பாரிய முதலீட்டு திட்டங்கள் மேற்கொண்டுள்ளன. இந்த முதலீடுகள் மூலம் விமானநிலைய கொள்ளளவு கருதக்கூடியளவில் விரிவாக்க முடியுமாக இருப்பினும் அவை பாரிய முதலீடுகளாக இருப்பதனால் அந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செல்லும் காலம், அவை திட்டமிடுவதிலிருந்து பூர்த்தி செய்யவதற்கு பத்து வருடங்கள் மேற்பட்ட காலம் எடுக்கும். மக்களின் எதிர்ப்புகள் மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் காரணமாக இவ்வாறு செலவாகும் காலத்தை மேலும் நீடிப்பதற்கு ஏற்படுவதனால் விமானநிலைய கொள்ளளவு விரிவாக்குவதில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும்.

விமானநிலையங்களின் நெரிசலைக் குறைத்துக் கொள்வதற்காக விமானசேவை கம்பனிகள் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன. உதாரணமாக நெரிசலான காலப்பகுதிக்குள் தரையிறக்கம் மற்றும் மேலெழுகை எண்ணிக்கை குறையும் வகையில் விமானசேவைகள் மூலம் சிறு விமானங்களுக்குப் பதிலாக பாரியளவில் பயணிகளை கொண்டு செல்ல முடியுமான பெரிய விமானங்களை ஈடுபடுத்துவதைக் குறிப்பிட முடியும்.அவ்வாறு இரண்டாந்தர விமானநிலையத்தை நிர்மாணிப்பதனூடாக நெரிசலுள்ள விமானநிலையத்தில் காணப்படும் நெருக்கம் குறைத்துக் கொள்ள முடியும். ஒரே

**நாம் ம.இ.ச.வி நிலையத்தினை ப.ச.வி. போட்டியாக ஊக்குவிக்காமல் இலங்கையின் இன்னுமொரு சிவில் விமான நிலையமாகவே ஊக்குவிக்கின்றோம். இதன் ஊடாக தேசத்தின் விமான நுழைவாயில் தரம் 3 இங்கு கொண்டு செல்கிறோம்.**

பாதையில் ஒரே தடவையாக இரு விமானப் பயணங்கள் நிகழ்தவதை தவிர்க்கும் வகையில் விமானசேவைக் கம்பனிகள் ஒன்றிணைந்து விமானப் பயணங்களைத் தொழிற்பாடுகள் திட்டமிடுவது இங்கு விளைவுப் பெருக்க முடையதாகும். சுருக்கமாகக் குறிப்பிடின் விமானநிலைய உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துவதற்காக அரசாங்கம் மற்றும் விமானநிலைய சேவைக் கம்பனிகளால் நெரிசல்மிக்க விமானநிலைய நெருக்கத்தைக் குறைப்பது தொடர்பாக தளத்தகை ரீதியில் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படின் வரக்கூடிய காலத்திற்குள் வர்த்தக விமானசேவை வளர்ச்சி தொடர்பில் விமானநிலைய நெரிசலானது வரையறுக்கப்பட்ட காரணியாக அமையாது.

### உலக பொருளாதார சுற்றுப்புறம்

வர்த்தக ரீதியிலான விமான போக்குவரத்தின் வளர்ச்சி மற்றும் விமானங்களுக்கான கேள்வி தொடர்பாக உலக பொருளியல் செயற்பாடுகள் மிகவும் பலமான தாக்கத்தினை கொண்டுள்ளன. அடுத்துவரும் 20 ஆண்டுகளுக்குள் உலகளாவிய இயலளவு உள்நாட்டு உற்பத்தி 3.2% வளர்ச்சியை எய்துவதென எதிர்பார்க்கப்படுவதுடன், அதற்கமைய விமானப் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து 5% வருடாந்த அதிகரிப்பை ஏற்படுத்தும்.

### வளர்ந்து வரும் பொருளாதாரங்களால் ஊக்குவிக்கப்படுகின்ற சர்வதேச வளர்ச்சிகள்

அடுத்த 20 ஆண்டுகளில் வளர்ந்து வரும் பொருளாதாரம் ஆண்டு ஒன்றுக்கு 5.2% வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன், அதன் காரணமாக 2.1% வளர்ச்சியுடனான உறுதியான பொருளாதாரங்கள் விஞ்சும் நிலையடைகின்றன. 2012 மற்றும் 2032 இடையே உலக பொருளாதார வளர்ச்சியில் 60% வளர்ந்துவரும் பொருளாதாரங்களால் மேற்கொள்ளப்படும். குறித்த காலப்பகுதிக்குள் உலக இயலளவு உற்பத்தியின் அவைகளின் பகுதி 31% இலிருந்து 45% வரை அதிகரிக்கப்படும். உலகின் அதிக வேகத்தில் பொருளாதார செயற்பாடுகள் விருத்தியடையும் பிராந்தியத்திலே எமது தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாம் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற ஆசிய பசுபிக் பிராந்தியங்களில் இயலளவு உள்நாட்டு உற்பத்தி அடுத்த 20 ஆண்டுகள் பூராவும் வருடத்துக்கு 4.5% வேகத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் வேகம் லத்தீன் அமெரிக்கா பிராந்தியத்திற்காக வருடத்துக்கு 4% உம் மத்திய கிழக்கிற்காக 3.8% உம் ஆகும்.

கல்வியறிவுள்ள ஊழியர் படை அதிகரிப்புடன் குடும்ப வருமானம் அதிகரிப்பதுடன் பாவனை முறைகள் மாற்றமடையும். அதேபோல பௌதீக மற்றும் சமூக உடகட்டமைப்பு வசதிகளுக்கான முதலீடுகள் அதிகரிக்கப்படும். நகரமயமாக்கள் பரவிவருவதுடன் உலகில் வளர்ந்துவரும் பொருளாதாரங்களுக்குள் பொருளாதார துறைகளுக்கு நிகராக முக்கியத்துவங்கள் மாற்றமடையும். நகர மயமாக்களுடன் தொழிற்படையினர் கைத்தொழிற்சாலைகள் மற்றும் சேவைப் பிரிவுகளில் ஈடுபடுபடுவதுடன், நடுத்தர வருமான மட்டத்தையுடைய அபிவிருத்தி நாடுகளில் உயர் வருமானத்தை பெறுபவர்களின் மட்டத்தை நெருங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும். சர்வதேச பண்டங்கள் மற்றும் சேவைகளுக்குள்ள கேள்வி மற்றும் ஓய்வு கால அதிகரிப்புடன் வெளிநாட்டு சுற்றுலாக்களுக்கான விருப்பம் அதிகரிக்கப்படும்.

(மூலம்: போயிங் மூலம் வெளியிடப்பட்ட 2013 - 2023 நிகழ்கால சந்தை நிலை)

### பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் விமானங்கள் வலையமைப்பு

பதிவுகளுக்கமைய வருடம் பூராவும் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் மூலம் மேற்கு நோக்கி 32 சேரிடங்களுக்கும், கிழக்குநோக்கி 15 சேரிடங்களுக்கும், சேவை வழங்கியது. 2013 ஆம் ஆண்டில் 31 திட்டமிடப்பட்ட விமானசேவைகளில் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் தனது பிரதிநிதித்துவத்தை மேற்கொண்டது. தேசிய விமான சேவையான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பயணிகள் அளவில் 55% இனை பிரதிநிதிப்படுத்திய பாரியளவிலான வாடிக்கையாளராக இருந்ததுடன் பயணிகள் அளவில் 9% இனை பிரதிநிதிப்படுத்திய எமிரேட்ஸ் இரண்டாம் இடத்தினை வகித்தது. வருடத்துக்குள் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்துக்கு பிரிட்டிஷ் எயார்வேஸ், டர்கிஸ் எயார்லைன்ஸ், கொரியன் எயார்லைன்ஸ் மற்றும் எயார் ஏசியா எக்ஸ் பர்ஹார்ட் போன்ற நான்கு விமானசேவைகளும்

விமானசேவைகள் ஊடான பயணிகள் வருகை

| | | 2013 | Change in % | Share in % |
|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் | 4,018,543 | 2.7 | 54.96 |
| 2 | எமிரேட்ஸ் | 675,589 | 8.7 | 9.24 |
| 3 | மிஹின் லங்கா | 504,789 | 40.5 | 6.90 |
| 4 | கட்டார் ஏயார்வேஸ் | 318,035 | 1.0 | 4.35 |
| 5 | ஃபைளய் டுபாய் | 164,391 | 58.8 | 2.25 |
| 6 | ஜெட் ஏயார்வேஸ் | 164,298 | -42.0 | 2.25 |
| 7 | கெதே பசுபிக் | 156,436 | 16.7 | 2.14 |
| 8 | ஏயார் அரேபியா | 149,265 | 19.0 | 2.04 |
| 9 | சிங்கப்பூர் ஏயார்லைன்ஸ் | 138,475 | -6.0 | 1.89 |
| 10 | மலேசியன் ஏயார்லைன்ஸ் | 126,286 | 31.8 | 1.73 |
| | எனையவை | 895,762 | -8.8 | 12.25 |
| | | 7,311,869 | | 100.00 |

# முகாமைத்துவ உரையாடலும் பகுப்பாய்வுகளும் தொடர்ச்சி.

ஒன்றிணைந்தன. இலங்கையின் பூகோள அமைவிடம் மற்றும் உயர் சேவைத் தரங்கள் காரணமாக பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் ஐரோப்பா/ மத்தியகிழக்கு/ மற்றும் தெற்காசிய/ ஆசியாபசுபிக் சேரிடங்களுக்கிடையே முக்கிய நிலையமாக மாற்றம் பெற்றுள்ளது. அதேபோல கொழும்பு வான் தகவல் பிராந்தியத்தினால் (FIR) உத்தரவாதம் தொடர்பாக பேணியுள்ள உயர் அறிக்கையும் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் உயர் நிலைமையும் இந்த வெற்றிக்கு காரணமாக அமைந்துள்ளது. இந்த நிலைமையினால் விமானங்களுக்காக ஐரோப்பா/ மத்தியகிழக்கு/ மற்றும் தெற்காசிய/ ஆசியாபசுபிக் சேரிடங்களுக்கிடையே பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் முழுநிறைநல பரிமாற்ற மையமாக உருவாக்கப்பட்டுள்ளது.

## தொழில்முயற்சியின் வெளிச்செலுத்தும் குறிகாட்டி

விமான நிலையமொன்றின் பிரதான தொழில்முயற்சிகளில் வெற்றியை அளவிடும் முக்கிய காட்டியாக அமைவது பயணிகள் கொள்ளளவு, MTOW மற்றும் விமான பயணத் தடவைகளின் எண்ணிக்கையாகும்.

இங்கு கட்டண கணக்கெடுப்பு, பயணிகள் மற்றும் விமானங்கள் தொடர்பாக மாற்றமடையும். முதலாவது சந்தர்ப்பத்தில் அனைத்து விமானசேவைக் கம்பனிகளும் இடைவழிப் பயணிகள், குழந்தைகள் (வயது 2 வருடங்களுக்கு குறைந்த) மற்றும் சிவில் விமானசேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட நபர்களைத் தவிர்ந்த, புறப்பட்டுச் செல்லும் அனைத்து பயணிகளிடமிருந்தும் மேலெழுகை கட்டணம் அறவிடப்படும். பின்னர் இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகாரசபையின் ஊடாக விமானநிலைய தொழிற்பாட்டாளருக்கு அனுப்பப்படுகின்றது. இவ்விதத்தில் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் இந்த கட்டணத்தின் அளவு விமானநிலைய வருமானத்திற்கு நேரடியாக தாக்கம் விளைவிக்கின்றது. இரண்டாவது சந்தர்ப்பத்தில் MTOW மற்றும் வான் பயண தடவைகளின் எண்ணிக்கை முக்கிய காரணியாகும். MTOW ஒரே ரகத்திலான விமானங்களுக்காக உற்பத்தியாளர் மற்றும் விமானசேவைக் கம்பனியால் முடிவுசெய்யப்படும். வெவ்வேறு விமானசேவைகளுக்காக தரையிறக்க கட்டணங்கள் கணக்கெடுப்பதற்காக சுட்டளவாக பயன்படுத்தப்படும். விமான நிலையங்களுடன் தொடர்புடைய ஏனைய பிரதான கட்டணங்களை அறவிடுவதில் வான் பாலங்களின் கட்டணங்கள் மற்றும் விமானங்களை நிறுத்தி வைப்பதற்கு அறவிடப்படுகின்ற கட்டணங்கள் உள்ளடக்கப்படும்.

ப.ச.வி. இன் கட்டண வருமானங்கள் சிறந்த மட்டத்தில் பேணப்படுவது தொடர்பாக உயர் MTOW மற்றும் பயணிகள் கொள்ளளவு தாக்கம் விளைவிக்கும். அதாவது மிகப் பெரிய விமானங்களின் வருகை அவற்றின் கூடுதலான ஆசனங்களின் எண்ணிக்கை நிரப்பப்பட்டிருப்பதும், விமானப் பயண தடவைகளின் சிறு உயர்வும் விமான ஓடுபாதைக் கொள்ளளவு ஆகக்கூடிய பயன்பாடு இங்கு தாக்கம் விளைவிக்கும். 2013ஆம் ஆண்டு விமானப் பயணத் தடவைகளின் எண்ணிகை 48,416 இருந்து 50,802 வரை 5% வீதத்தால் அதிகரித்தது. விமானமொன்றுக்கு MTOW, முன்னைய இரு வருடங்களில் காணப்பட்ட 137 இலிருந்து 140 வரை அதிகரித்தது.

## பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் விமானப் பயணத் தடவைகளின் வியக்கத்தக்க சாதனைகள்

### 1983 தொடக்கம் ப.ச.வி பயணிகள் அபிவிருத்தி




### 1983 தொடக்கம் ப.ச.வி வர்த்தக விமானங்கள் அபிவிருத்தி




### 1983 தொடக்கம் ப.ச.வி விமானபொருட்கள் / சரக்கு



## பயணிகள் வளர்ச்சி

வருடத்துக்காக எதிர்வுகூறப்பட்ட விமானப் பயணிகள் மற்றும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையை விஞ்சும் வகையில் வருடத்துக்குள் 7,311,869 பயணிகள் மற்றும் 1,274,593 சுற்றுலா பயணிகள் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் கையாளுகின்றன. அதாவது விமானநிலைய வரலாற்றுக்குள் பயணிகள் எண்ணிக்கை 7.3 மில்லியன்களும், சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 1.2 மில்லியன்களை விஞ்சிய முதல் சந்தர்ப்பமாகும். இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் சேரிடங்கள் ஆகக் கூடிய வளர்ச்சியை பதிவு செய்தன. தெற்காசிய மற்றும் மேற்கு ஐரோப்பாவில் சேரிடங்களிலும் அதிகளவு வளர்ச்சி பதிவு செய்தது.

## விமானங்களின் அசைவுகள்

ப.ச.வி மொத்த வர்த்தக விமானங்களின் அசைவுகளின் எண்ணிக்கை முதல் தடவையாக 50,000 இனை தாண்டி 50,802 அசைவுகளை பதிவு செய்ததுடன், அவற்றுக்கு திட்டமிடப்பட்ட அசைவுகள் 48,646 உள்ளடக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட ப.ச.வி. விமானங்களின் வலையமைப்பின் கீழ் குறிப்பிடப்பட்ட, கடந்த வருடத்துக்குள் விமானப் பயணங்களைத் தொடங்கி புதிய 4 விமானசேவைகளுக்கு மேலதிகமாக சினமன் எயார், அல்பா எயார் சோலியூசன், மற்றும் எத்தியோப்பின் எயார்லைன்ஸ் இனால் பயணத் தடவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

## விமான சரக்குத் தொழிற்பாடுகள்

விமான சரக்கு போக்குவரத்து 193,975 மெட்ரிக் தொண் ஆக இருந்ததுடன், அது 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 4% அதிகரிப்பாகும். ப.ச.வி. இல் பதிவுசெய்த ஆகக்கூடிய விமானச் சரக்குப் போக்குவரத்து பெறுமதி இதுவாகும். ஏற்றுமதி சரக்கு 5% இனாலும் இறக்குமதி 2% இனாலும் அதிகரித்தன. தற்போது நடைமுறையிலுள்ள வான் சரக்கு போக்குவரத்துச் சேவை கம்பனிகளின் விமானச் சரக்கு போக்குவரத்துக் கொள்ளளவு அதிகரிப்புடன், விமானப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பும் இவ் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்துள்ளது.

## ம.இ.ச.வி இல் பதிவு செய்த ஊக்கப்படுத்தும் சிறு விமானப் பயண புள்ளிவிவரங்கள்

ம.இ.ச.வி இனால் முதல் வருட முழுவதும் 1,376 விமானப் பயணங்கள் பதிவு செய்தது. 36,137 பயணிகள் மற்றும் 10,938 இடைவழிப் பயணிகளால் விமானநிலையத்தை பயன்படுத்தப்பட்டிருந்தது. ம.இ.ச.வி ஆரம்பித்த திகதியிலிருந்து 5 வருடங்கள் வரை புதிய வாடகை விமான தொழிற்பாட்டாளர்கள், புதிய சிக்கன வானூர்திகள், மரபுரிமை வானூர்திகள், பயணத் தடவைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கின்ற தற்போதுள்ள சிக்கன வானூர்திகளுக்கும் மரபுரிமை வானூர்திகளுக்கும் தரையிறக்கம் மற்றும் தரிப்பிட கட்டணங்கள் தொடர்பாக விஷேட கழிவு வழங்கப்படும். மேலும் 6 மணித்தியாலங்கள் அல்லது அதன் பகுதியொன்றுக்கு தரையிறங்கும் கட்டணத்திலிருந்து 10% கழிவு வழங்கப்படும். தரையிறங்கும் மற்றும் தரிப்பிட கட்டணம் தவிர்ந்த ம.இ.ச.விமான நிலையத்தின் கட்டணங்கள் எவ்விதத்திலும் ப.ச.விமான நிலையத்தின் கட்டணங்களிலிருந்து மாற்றமடையாது.



ம.இ.ச.வி பணிகள் மாற்றல் பகுதியிலுள்ள தளம் மாறும் பயணிகள்

## வெற்றிக்கான முக்கிய காரணிகள்

### ப.ச.வி உயர் பாதுகாப்பு உத்தரவாத அறிக்கை

ப.ச.வி அவசர விபத்து / நிகழ்வுகள் விகிதாசாரம் ஏற்கக்கூடிய மட்டத்தில் காணப்படும். வருடத்துக்குள் பயணிகள் மற்றும் விமானங்களின் அசைவுகள் அதிகரிக்கப்பட்டிருப்பினும் எவ்விதமான பாரதூரமான விபத்துகளும் பதிவு செய்யப்படவில்லை. இதற்கு சகல தொழிற்பாடுகளினதும் தொடர்ச்சியான கண்காணிப்பு, செயல்முறைகளை கடைப்பிடித்தல், முறைப்படி பரிசோதனைகள், சரியான வேளைகளில் நிகழ்கின்ற திருத்தம் மற்றும் விழிப்புணர்த்துதல் உதவியாக இருந்தன.

வான்வழி தொடர்புடையவை
(10,000 விமான அசைவுகள் பிரகாரம்)



# முகாமைத்துவ உரையாடலும் பகுப்பாய்வுகளும் தொடர்ச்சி.

கீழேயுள்ள வரைபடம் மூலம் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியாக ப.ச.வி இன் அவசரகால விபத்துக்கள் / நிகழ்வுகள் / வழுக்கள் காட்டப்படும். பாதுகாப்பு குறிகாட்டிகளின் கணக்கீட்டிற்கு, விமானம் இயக்கங்களின் எண்ணிக்கை, வணிக மற்றும் இராணுவ இயக்கங்களும் உள்ளடக்கியதாக 54,037 என கொள்ளப்பட்டது.

### ப.ச.வி. நிலையத்தை தெற்காசியாவில் பிராந்திய வான் போக்குவரத்து கேந்திர நிலையமாக வலுப்படுத்துதல்

இந்திய உப கண்டத்திற்கு தரைத் தொடர்பு குறைப்பாடுகள் காரணமாக, பண்டாரநாயக சர்வதேச விமான நிலையம் அதனுடன் தொடர்புகொள்வதற்குள்ள ஒரேயொரு பிரயோக பயணிகள் நுழைவாயில் இதுவாகும். ப.ச.விமானநிலையத்தின் பயணிகளுக்கு இந்தியா உபகண்டத்தை நோக்கி பல்வேறு தொடர்பு வாய்ப்புக்கள் திறந்து வைக்கப்படும். தென் ஆசியா பயணிகள், கிழக்கு ஆசியா மற்றும் மேற்கு ஆசியா நாடுகளுடன் தொடர்படுத்தி பிராந்திய நிலையமாக வெற்றியடையும் இயலுமை அதற்குரியது. இதற்கு மேலதிகமாக உள்நாடு மற்றும் சர்வதேச சந்தையிற்கான

சரக்கு கேள்வி நிறைவு செய்வதற்கு வர்த்தக மற்றும் கைத்தொழில் துறைக்கு மொத்த போக்குவரத்து வசதிகள் மூலமும் முக்கியமான பணி நிறைவேற்றும் இயலுமை இந்த விமானநிலையத்துக்கு உண்டு. அதேபோல இடைவழிப் பயணிகள் எண்ணிக்கை மற்றும் வான் சரக்கு கொள்ளளவு உயர் பெறுமதியைக் கொண்டிருத்தல் பிராந்திய நிலையமான விமானநிலையமொன்றில் மேலும் விஷேட அம்சமாகும். இது பிராந்திய விமானநிலையத்தை மதிப்பிடுவதற்காக இன்று பொதுவாக கையாளப்படும் துணையலவாக கருத முடியும்.

அண்மைக் காலங்களில் உல்லாசப் பயணிகளின் வருகையிலான அதிகரிப்புடன் பயணிகள் கொள்ளளவில் ஏற்பட்ட துரித வளர்ச்சி முக்கியமான இடைப்போக்கு நிலையமாகவும் மற்றும் உல்லாசப் பயணிகளின் சேர்விடமாகவும் ப.ச.வி. நிலையத்தின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துகின்றது. 2013 ஆம் ஆண்டிற்குள் கருதக்கூடியளவு உயர் மட்டத்தில் காணப்படும் ப.ச.வி இன் "இடைப்போக்கு பரிமாற்ற விகிதாசாரம்" தென் ஆசியா பிராந்தியத்திற்குள் பிரபல்யம் வாய்ந்த இடைப்போக்கு பரிமாற்ற நிலையமாக வளரந்து வருவதற்கு ப.ச.விமானநிலையத்துக்குரிய சாத்தியத்தன்மை குறிப்பிட்டு காட்டுகின்றது. வழங்கப்படும் காலப்பகுதிக்குள் மொத்த பிரயாணிகள் எண்ணிக்கைக்கு, இடைப்போக்குப் பரிமாற்ற பிரயாணிகளின் எண்ணிக்கையின் விகிதாசாரம் "இடைப்போக்குப் பரிமாற்ற விகிதாசாரமாகும்." 1 மில்லியனான இடைபோக்கு பரிமாற்ற பயணிகளின் உறுதிபடுத்தும் வகையில் ப.ச.வி கையாளும் 5 பயணிகளின் ஒருவர் இடைப்போக்குப் பரிமாற்ற பிரயாணியாக இருப்பதுடன், அந்த மொத்த கூட்டுத்தொகை மில்லியனை விஞ்சுகின்றது.

### பாதுகாப்பு குறித்த கவனம்

எமது பிரதான இரண்டு சர்வதேச விமான நிலையங்கள் தொடர்பாக நிகழும் அனைத்து சிவில் விமான தொழிற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக உயர் பாதுகாப்பு மற்றும் விமான நிலைய வசதிகளை வழங்குதல் எமது பிரதான கடமைப் பொறுப்பாகும். பாதுகாப்பு தொடர்பான பொறுப்பை நிறைவேற்றுவது வி.வி.சே கம்பனியின் பாதுகாப்பு குழுக்களாலாகும்.



உள்நுழையும் பகுதிகள் பாதுகாப்பு சோதனைகள்

அண்ணளவாக 800 ஊழியர்கள் (முழு வேலையாட்களினதும் 25%) விமானசேவை பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுவதுடன், கம்பனியின் மிகப் பெரிய தொழிற்பாட்டுப் பிரிவும் அதுவாகும். பயணிகள் மற்றும் வானறைப் பொதிகள், பிடித்து வைத்திருக்கும் பொதிகள், விமான சரக்கு, அஞ்சல், உணவளிப்பு மற்றும் ஏனைய பொருட்கள் தொடர்பில் சர்வதேச சிவில் விமானசேவை அமைப்பின் வழக்கங்கள் மற்றும் விதந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கிணங்க செயலாற்றுவதற்குத் தேவையான பயிற்சி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எமது பரிசோதனை அலுவலர்கள் சிவில் விமானசேவைக்காக சரியான அதிகாரிகள் மூலம் உறுதிபடுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களால் பயணிகள், ஊர்திப் பணியாளர் தொகுதி, விமானநிலைய ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் அதற்கு மேலாக விமானங்கள், விமான நிலையங்கள் மற்றும் வானோடல் வசதிகளின் பாதுகாப்பும் உறுதிபடுத்தப்படும்.

### நெருக்கமான வாடிக்கையாளர் உறவுகள்

விமானநிலைய தொழிற்பாட்டாளராக, பாரம்பரிய விமானநிலைய வாடிக்கையாளர்கள் என்ற வகையில், விமானசேவைகள் நோக்கி செலுத்தப்படுகின்ற அவதானிப்பிற்கு மேலதிகமாக, வாடிக்கையாளர்கள் போன்று நுகர்வோரின் விமானப் பயணிகளின் இரட்டை செயற்பாடுகள் தொடர்பாக வி.வி.சே கம்பனி விஷேட கவனம் செலுத்துகின்றது. விமான பயணங்கள் தொடர்பாக அதிகரிக்கும் கேள்வியை பூர்த்திசெய்வதற்கு விமான நிலைய விரிவாக்கத்திற்கு ஏற்கப்படும் முதலீட்டுச் செலவுகள் விமான தொழிற்பாட்டு நடவடிக்கைகளை மூலம் மாத்திரம் நிதி உதவி வழங்கிட முடியாது. பயணிகள், வருகையாளர்கள், ஊழியர்கள், மற்றும் அண்டை குடியிருப்பாளர்களுக்கு வழங்கும் சேவைகள் அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் மேம்பாடுகள் மற்றும்

ஒன்றுசேர்ப்பவர்களுக்கு எதிர்காலத்தில் விமானநிலையம் பொருளாதார அபிவிருத்தி தொழிற்பாட்டுக்குள் முக்கிய இடம் வகிக்கின்றன. விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி அதன் விமானசேவைகள் அல்லாத தொழில் முயற்சிகளை பரவலாக்குவதற்காக தொடர்ந்தும் கவனத்தைச் செலுத்துகின்றது. உதாரணமாக, 2016-2018 காலத்திற்காக திட்டமிடப்பட்டுள்ள 10,000 சதுர மீட்டர் பரப்பளவிலான வணிக மையத்தைக் குறிப்பி முடியும். 250 அறைகள் கொண்ட விமானநிலைய ஹோட்டல் பல்வேறு பயணிகள், வருகையாளர்களுக்கு சேவை வழங்கும். இந்த கருத்திட்டங்களை முனையத்திற்கு வெளியே திட்டமிடப்பட்டுள்ளதுடன் இந்த முதலீட்டு வாய்ப்புகளுடன் விவி.சே.க தனது பாரம்பரிய விமான தொழிற்முயற்சிகளுக்கு மேலதிகமாக இலாபகரமான தொழிற்முயற்சிகளையும் உருவாக்கியுள்ளன.

## 2013 இல் சேவை செயலாற்றுகை

### 1) பயணிகள் செயல்முறை நேரம்

### புறப்படும் பயணிகள் செயல்முறை நேரம்

23 நிமிடங்களில் % பயணிகள் பாதுகாப்பு சோதனைகளை உள்ளடக்குதல் மற்றும் குடியகல்வு கடமைப்பொறுப்புக்கள் நிறைவேற்றும் பயணிகள் 95% முடிந்த பயணிகள் %

95%

### வருகை பயணிகள் செயல்முறை

வருகையிலிருந்து 22 நிமிடங்களுக்குள் குடிவரவு பயணிகள் விடுவித்து, பொருட்களை வழங்கி சுங்கம் விடுவிக்கப்பட்ட பயணிகள்

97%

### 2) கொழும்பு விமான தகவல்கள் பிராந்தியம் (FIR) இற்குள் விமானங்களுடன் தொடர்புடைய நிகழ்வுகளைத் தவிர்த்தல்

கொழும்பு FIR இற்குள் விமானங்களுடன் தொடர்புடைய நிகழ்வுகள் விமானங்கள் 100,000 இற்கு 3 என்ற மட்டத்திலும் பார்க்க கீழே பேணுதல்.

100%






பயணிகள் தொடர்பில் குடிவரவு பணிகள்



தன்னியக்க நடைபாதைகள்

## விமானநிலையம் சந்தைப்படுத்தல் - நிகழ்கால பங்கு மற்றும் செயலாற்றுகை

2011 ஆம் ஆண்டு நொவெம்பா 01 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்ட ப.ச.வி. சந்தைப்படுத்தல் பிரிவு மூலம் உலக விமானசேவை வரைப்படத்தில் ம.இ.ச.வி இன் நிலைப்பாடு கட்டியமைத்தல் மற்றும் தொடர்ச்சியான வளர்ச்சிக்காக சிறப்பான கடமைப் பொறுப்பினை நிறைவேற்றுகின்றது. ஒன்று மற்றை ஒன்றிலிருந்து வேறாக்கி மாற்றத்தை உருவாக்குவதனை நோக்காகக் கொண்டே அது மேம்படுத்தப்படும்.

வெளிநாட்டு நாடுகளின் பிரதிநிதிகள், சர்வதேச அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களை விழிப்புணர்த்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளும் நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒழுங்கமைத்து ம.இ.ச.வி மேம்படுத்துதல் மற்றும் தொடர்புடைய பல தொழிற்பாடுகளை ஒழுங்கமைத்து மீளாய்விற்குட்படும் வருடங்களில் சந்தைப்படுத்தும் பிரிவு மிகவும் வினைத்திறன்மிக்க செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டது.

சந்தைப்படுத்தல் பிரிவின் முக்கிய அதிகாரிகள் 2013 ஆம் ஆண்டின் ஐக்கிய அமெரிக்கா குடியரசின் லாஸ்வேகாஸ் நகரில் இடம்பெற்ற 19வது உலக ரூட் போரமில் கலந்து கொண்டனர். விமானப் பயணப்பாதை அபிவிருத்தி நிபுணர்களும் ஒன்றுகூடி உலகின் விமானசேவைகளின் எதிர்காலம் குறித்து முக்கிய முடிவு எடுக்கப்படுகின்ற இது,

# முகாமைத்துவ உரையாடலும் பகுப்பாய்வுகளும் தொடர்ச்சி.

உலகின் முதல்நிலை விமானசேவை மாநாடாகும். எமது கம்பனிகள் இந்த சந்தைப்படுத்தும் பிரிவுக் குழு 2013 ஆம் ஆண்டு மே மாதத்தில் டுபாயில் இடம்பெற்ற "அரேபியன் ட்ரெவல் மார்கட்" கண்காட்சியிலும் பங்கேற்றனர். இங்கு எமது நாட்டின் சுற்றுலா கைத்தொழில், விருந்தோம்பல் மற்றும் தொடர்புடைய வேறு பிரதிநிதிகள் நிறுவனங்களுடன் வி.வி.சே.க விற்பனை காட்சியரங்கும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் கீழ் முன்வைக்கப்பட்டன. இவ்வாறான சர்வதேச கண்காட்சிகள் மூலம் சுற்றுலாக் கைத்தொழில்துறையில் கருதக்கூடிய விழிப்புணர்த்துவதற்கு எமக்கு வாய்ப்பு கிடைத்தது.




MRIA தலைமை நிர்வாக அதிகாரி மே 2013 ல் துபாய் நடைபெற்ற அரேபிய சுற்றுலா சந்தை 2013 MRIA பற்றிய விளக்கக்காட்சியை வழங்குகின்றார்.

இவ் ஆண்டின் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி மூலம் 2013 நொவெம்பர் 16 - 21 வரை இடம்பெற்ற பிரான்ஸ் அழகுராணி போட்டியின் சுற்றுலா மற்றும் இரவு சாப்பாட்டு விருதுக்காக அனுசரணை வழங்கப்பட்டது. பிரான்ஸ் அழகுராணியின் இலங்கை விஜயத்திற்காக சினமன் ஹோட்டல்ஸ் அன்ட் ரிசோட்ஸ் உடன் இலங்கை தேசிய விமான சேவையின் விருந்தோம்பல் உரித்துபெற்றது. இலங்கையின் வர்த்தக மதிப்பு மற்றும் ப.ச.வி வர்த்தக மதிப்பு மேம்படுத்தும் சுற்றுலாவுக்காக வி.வி.சே.க சந்தைப்படுத்தல் அணுகுமுறைகளுக்கு இயைவாக அனுசரணையில் வழங்கியது.



CIP Lounge (வருகையை) இற்கு AASL மற்றும் ருடு ஊழியர்களுடன் மிஸ் பிரான்ஸ் அழகிகள் போட்டியில் கலந்து கொள்ள வநந்த போட்டியாளர்கள் வருகை தந்த போது

நேரடியாக வருமானங்கள் பெறும் எதிர்பார்ப்பில் எம்மால் திட்டமிடப்பட்ட வருடாந்த சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமாக ப.ச.வி. 2013 நத்தார் விற்பனைத் திருவிழாவை குறிப்பிட முடியும். இந்த நிகழ்ச்சித்திட்டம் 2013 டிசெம்பர் தொடக்கம் 2014 சனவரி வரை இரு மாதங்களுக்குள் நிகழும். பெரும் எண்ணிக்கையான விற்பனை காட்சியறங்குகள் இதில் பங்கேற்றியதுடன், மோட்டார் வாகனங்கள் தொடக்கம் பணப்பரிசுகள் என கவர்ச்சிகரமான பரிசுப் பொருள்களும், நாளாந்தம் பெறுமதிவாய்ந்த உடனடி பரிசுகளும் வழங்கப்பட்டன.

2013 ஆண்டிலிருந்து விஷேடமாக ம.இ.ச.வி நிலையம் திறந்துவைக்கப்பட்டதன் பின்னர் மற்றும் நாட்டின் உள்ளக விமானநிலையமாக மாத்திரம் இருந்து, பாரம்பரிய தளத்தை விஞ்சிய நிலையில் சர்வதேச தனிநபர் மற்றும் தொழில் ரீதியிலான விமானப் பயணங்களுக்கான வசதிகளை வழங்கககூடியவாறு இரத்மலானை விமானநிலையத்தின் சாத்தியத்தை அபிவிருத்தி செய்ததன் பின்னர் பல்வேறு விதமான சந்தைப்படுத்தல் அணுகுமுறைகளை விமான நிலைய மற்றும் விமான சேவைகள் மேற்கொண்டது. ஆசியாவின் விமான பயண நுழைவாயிலாக இலங்கை மாற்றம் பெறுவதற்காக இரண்டு விமான நிலையங்களும் முக்கியத்துவம் பெரும் வகையில் தமது சந்தைப்படுத்தல் கட்டமைப்பை விமான நிலைய மற்றும் விமான சேவைகள் வடிவமைத்துள்ளது.

ஒன்றுக்கொன்று முரண்படாது அதேபோல இலங்கையின் விமானசேவை பிராந்திய நிலையமாக உருவாக்கும் நோக்கத்தை அடைவதற்காக பங்களிப்புச் செய்யும் பரஸ்பர சந்தைப்படுத்தல் அணுகுமுறைகள் மேற்குறிப்பிட்ட அனைத்து சிவில் விமானநிலையம் தொடர்பாக வி.வி.சே.க நடைமுறைப்படுத்தப்படும்.

இங்கு நடைமுறைச் சந்தையை பாதுகாப்பது மட்டுமன்றி, மேம்படுத்துவதுடன் ம.இ.ச.வி மற்றும் இரத்மலானை விமானநிலையங்களுக்குப் பொருந்தும் புதிய சந்தையை நாடுவதற்கு நேரிடும்.

இந்த முயற்சிக்குள் ப.ச.வி இன் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக விஷேட தொழில்முயற்சிக் காரணங்களுடன் அனைத்து சர்வதேச விமானங்களை நோக்கி சேவைகள் வழங்கப்படுவதுடன், கொழும்பு மற்றும் மேற்கத்திய பிரதேசங்கள் தொடர்பான சிறப்பு வாய்ந்த வர்த்தக மற்றும் கூட்டுறவு ஜெட் விமானங்கள் இரத்மலானை விமானநிலையத்தை நோக்கி திருப்பப்படும். ஏதும் அனைத்து ரக விமானங்களின் தொழிற்பாட்டு நடவடிக்கைகள், விமானநிலைய கட்டணங்களுக்காக விசேட கழிவுகள், ஊக்குவிப்புக்கள் மற்றும் விமான கூடாரங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி ம.இ.ச. விமானநிலையத்தினூடாக அனுப்பப்படும். ப.ச.விமானநிலையத்திடமிருந்து மேலதிக விமானப் பயணத் தடவைகளை கோரியிருக்கும் விமானசேவைகள், ம.இ.ச.விமானநிலையத்தை நோக்கியும் சமமான விமான பயணத் தடவைகளின் எண்ணிக்கையை

தொழிற்படுத்துவதற்காக இணங்குவதாயின் மாத்திரம் அதனை கருத்திற் கொள்ளப்படும். இங்கு எமது பெரு முயற்சியாக இருப்பது ப.ச.வி. பிணையாக வைத்து ம.இ.ச.வி மேம்படுத்துவது அல்ல. இலங்கையின் அனைத்து சிவில் விமானநிலைய ஒருமுகப்படுத்தப்பட்ட அபிவிருத்தியினூடாக இந்நாட்டின் முக்கிய சர்வதேச விமானசேவைகள் மையமாக உருவாக்குவதாகும்.

இதற்கு மேலதிகமாக சர்வதேச விமானசேவை அமைப்பினால் இலங்கைக்கு வழங்கியுள்ள கொழும்பு வான் தகவல் துறைக்குரிய (Colombo FIR) மிகப் பெரிய வானெல்லை வினைத்திறன்மிக்க வானோடல் சேவைகளை வழங்குவதனூடாக குறித்த பிராந்தியத்திற்கு மேலதிக விமானப் பயணங்களை நடாத்துவதற்கு விமானசேவைக் கம்பனிகள் கவரச்செய்து அதிகளவு வெளிநாட்டுச் செலாவணியை உழைப்பதற்காக மிகவும் வெற்றிகரமான முறையில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும்.

சலுகைக் கட்டணங்களை செலுத்துபவர்களின் மூலமாக வானூர்தி மூலமல்லாத வருமானங்களை அதிகரிப்பதற்கு தீர்வைகளற்ற வணிக மையத்தினுள் பயணிகளால் மேற்கொள்ளப்படுகின்ற செலவுகள் எதிர்வரும் 5 வருடங்களுக்குள் 100% இனால் அதிகரிப்பதன் மூலமே பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கிணங்க இச் சந்தைப்படுத்தல் திட்டமிடல் வி.வி.சே.க பின்வரும் தொழில் வாரியான துறைகள் மேம்பாட்டிற்கு காரணமாக அமைகின்றது.

- ப.ச.வி, ம.இ.ச.வி மற்றும் இ.வி.நி விமான நிலைய சேவைகள்
- கொழும்பு விமான தகவல் பிராந்தியம் (FIR) இற்குள் வானோடல் சேவைகளை வழங்குதல்
- விமான நிலையங்களில் உள்ள வர்த்தக தளங்களை பங்குதாரர்களுக்கு வாடகைக்கு வழங்கல்

## பொதுவான சந்தைப்படுத்தல் மற்றும் ஆதனங்கள் பிரிவில் வாய்ப்புகள்

ப.ச.வி நிலையத்தின் மொத்த, சில்லறை விற்பனைகள் ரூபா 14.9 பில்லியனாக இருந்ததுடன் அது 2012 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 15.2 பில்லியனிலும் பார்க்க சிறிது குறைவானது. ப.ச.வி. தீர்வைகளற்ற காட்சியறையின் வருமானங்களுக்காக பாரியளவு பங்களிப்பு மதுபானம், புகையிலை, இனிப்புப் பண்டங்கள் வாசனைப் பொருள்கள் போன்றவற்றினால் கிடைத்ததுடன் முன்னைய வருடத்துக்கு ஒப்பீடாக 2013 ஆம் வருடத்தின் அதன் ஐக்கிய அமெரிக்கா டொலர் பெறுமதியிலிருந்து 0.31% சிறியளவில் குறைவு ஏற்பட்டுள்ளது. அவ்வாறு இருப்பினும் மூன்றாவது மிகப்பெரிய தொகுதியான உணவுத்தொகுதி 139% வளர்ச்சியைக் எய்தியுள்ளதுடன், 30% பங்களிப்பு செய்யும் இரண்டாவது மிகப் பெரிய தொகுதியான மின்சாரம், இலத்திரனியல் வீட்டு உபயோக சாதனங்களில் பதிவாகிய 9% இழப்பை ஈடுசெய்வதாக அமைகின்றது.



World duty Free - ப.ச.வி தீர்வை விலக்கு பகுதியின் முன்னோடியும் தீர்வை விலக்கு பகுதியின் பாரிய பகுதியும். உதாரணம் - புகையிலை, மதுபானம், இனிப்பு பண்டங்கள், நறுமணம்



2011 தொடக்கம் Flemingo இரண்டாவது பாரிய தீர்வை விலக்கு பகுதி - மது, புகையிலை, இனிப்பு பண்டங்கள், நறுமணம்

# முகாமைத்துவ உரையாடலும் பகுப்பாய்வுகளும் தொடர்ச்சி.

ப.ச.வி புரள்விற்காக பங்களிப்புச் செய்கின்ற அடுத்த மிகப்பெரிய தொகுதிகளின் பங்களிப்பு முறையாக 2012 இலிருந்து 2013 வருடமாகும்போது மாற்றமடைந்தன. அந்த பிரிவுகளிடையே இலங்கை கைப்பணி பொருட்கள் பிரிவு உயர் செயலாற்றுகையை பதிவுசெய்து விற்பனை புரள்வின் 78% வளர்ச்சியை எய்தியது. (அதன் விற்பனை புரள்வு 2012 ஆம் ஆண்டில் ரூபா 107 மில்லியன்களிலிருந்து 2013 ரூபா 191 மில்லியன்கள் வரை அதிகரித்தது.) புறப்பாட்டு தீர்வைகளற்ற பிரிவில் கைப்பணி பொருட்கள் விற்பனை நிலையங்கள் 9 வரை அதிகரித்து இணைந்த புதியதொரு கைப்பணி பொருட்களின் நிலையமொன்று இந்த வளர்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்தது.




ப.ச.வி புறப்படு முனையத்திலுள்ள கோ:ஃபி பீன், மற்றும் தீ லீவ்ப்

ஆடைகள் துறையின் புரள்வின் 1% இறுதிநிலை வளர்ச்சியும், இரத்தினக் கற்கள், ஆபரணங்கள் பிரிவில் 13% வளர்ச்சியும், பதிவு செய்ததுடன் தேயிலை மற்றும் கோப்பித் துறையின் 34% சரிவும் பதிவு செய்தது. இடைவழி பரிமாற்ற பயணிகள், ப.ச.வி. ஊடாக பயணம் செய்ய விரும்புவதற்குக் காரணம் அதன் மூலம் உலகத்தின் புகழ்பெற்ற இலங்கை இரத்தினக் கற்கள், ஆபரணங்கள், தேயிலை, கைப்பணிப் பொருட்கள், மரபுரிமை வியாபாரப் பெயர்கள் (பொய்முகம், பத்திக் மற்றும் கைப்பணிப் பொருட்கள் உட்பட) என்பவற்றைக் கொள்வனவு செய்யும் வாய்ப்பைப் பெறுவதற்கேயாகும். மொத்த விற்பனை வரவில் முந்திய ஆண்டைவிட முறையே 49 % மற்றும் 31% வீழ்ச்சி தென்படுத்துகின்றது.

ப.ச.வி நிலையத்தின் தீர்வைகளற்ற பிரிவின் விற்பனைக்காக இருக்கும் ஆடம்பரமான வியாபாரப் பெயர்கள் மத்தியில் இங்கு கிடைக்கக்கூடிய சர்வதேச வியாபாரப் பொருட்களுள் டைமெக்ஸ், றொலெக்ஸ், சிற்றிசன், மொன்ற்புளொக், ரேபேன், என்வோய் சோனி, பெனசொனிக், ராடோ, ஒமெகர், பாகர், றொபர்ட்டோ கவாலி, கெல்வின் க்ளயின, பூமா, நைக், அடிடாஸ், பெரிஸ்டா மற்றும் கொபீ பின் உள்ளடக்கப்படும்.

பயணி ஒருவருக்கான வி.வி.சே.க தேறிய வருமானம் 424 ரூபாவிலிருந்து 411 ரூபாவாக 3% வீதத்தால் குறைந்துள்ளது.

வதிவிட நாடுகளின் அடிப்படையில் உல்லாசப் பயணிகளின் வருகை - 2007 முதல் 2013 வரை

| வதிவிட நாடு | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|
| **வட அமெரிக்கா** | 28,355 | 24,311 | 24,948 | 40,216 | 49,057 | 59,236 | 65,616 |
| கனடா | 11,869 | 10,258 | 10,707 | 21,123 | 24,671 | 29,329 | 30,926 |
| அமெரிக்கா | 16,486 | 14,053 | 14,241 | 19,093 | 24,386 | 29,907 | 34,690 |
| **லத்தீன் அமெரிக்கர்** | | | | | | | |
| **கரீபியன** | 3,962 | 3,739 | 617 | 620 | 1,036 | 1,626 | 3,166 |
| **மேற்கு ஐரோப்பா** | 194,448 | 167,187 | 170,123 | 256,861 | 315,210 | 373,063 | 421,037 |
| அவுஸ்திரியா | 3,580 | 2,651 | 2,409 | 3,925 | 6,262 | 7,991 | 11,300 |
| பெல்ஜியம் | 4,669 | 2,378 | 2,617 | 5,398 | 10,122 | 11,323 | 9,138 |
| டென்மார்க் | 1,796 | 1,320 | 1,362 | 4,393 | 6,582 | 8,323 | 9,845 |
| பின்லாந்து | 497 | 468 | 738 | 1,950 | 3,649 | 4,840 | 2,471 |
| பிரான்ஸ் | 8,091 | 10,594 | 15,886 | 31,285 | 48,695 | 56,863 | 64,388 |
| ஜேர்மனி | 35,042 | 30,625 | 29,654 | 45,727 | 55,882 | 71,642 | 85,470 |
| இத்தாலி | 11,451 | 9,126 | 7,514 | 11,423 | 13,527 | 15,871 | 17,982 |
| நெதர்லாந்து | 17,526 | 13,030 | 11,291 | 17,861 | 23,966 | 26,754 | 22,281 |
| நோர்வே | 2,304 | 1,613 | 1,666 | 3,955 | 4,977 | 7,703 | 8,573 |
| ஸ்பெயின் | 2,484 | 2,282 | 2,387 | 4,461 | 5,886 | 8,319 | 8,183 |
| சுவீடன் | 4,851 | 3,711 | 3,560 | 7,096 | 10,937 | 13,775 | 12,597 |
| சுவிற்சர்லாந்து | 4,917 | 5,326 | 6,331 | 9,427 | 14,110 | 20,054 | 19,141 |
| யூ.கே | 94,060 | 81,331 | 81,594 | 105,496 | 106,082 | 114,218 | 137,416 |
| ஏனையவை | 3,180 | 2,732 | 3,114 | 4,464 | 4,533 | 5,387 | 12,252 |

| வதிவிட நாடு | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|
| **கிழக்கு ஐரோப்பா** | 25,573 | 29,440 | 26,310 | 35,517 | 49,249 | 72,401 | 125,695 |
| ரஷ்யா | 13,621 | 15,797 | 11,834 | 13,278 | 21,385 | 28,402 | 51,235 |
| உக்ரேன் | 524 | 952 | 2,577 | 5,703 | 9,967 | 22,348 | 38,607 |
| செக்குடியரசு | 1,880 | 2,555 | 2,814 | 4,204 | 5,548 | 5,877 | 8,881 |
| போலந்து | 3,761 | 4,960 | 5,138 | 6,613 | 5,817 | 5,806 | 9,688 |
| ஏனையவை | 5,787 | 5,176 | 3,947 | 5,719 | 6,532 | 9,968 | 17,284 |
| **மத்திய கிழக்கு** | 13,554 | 16,776 | 23,741 | 37,540 | 57,501 | 56,169 | 80,509 |
| சவூதிஅரேபியா | 3,861 | 3,456 | 6,685 | 9,301 | 15,081 | 19,423 | 23,753 |
| ஐ.அ.இ | 814 | 2,469 | 5,974 | 9,825 | 17,664 | 11,083 | 8,471 |
| இஸ்ரேல் | 2,648 | 2,596 | 1,901 | 3,919 | 6,164 | 7,212 | 8,545 |
| குவைட் | 831 | 1,011 | 1,123 | 2,303 | 2,812 | 3,245 | 7,427 |
| ஓமான் | 515 | 499 | 727 | 1,359 | 2,177 | 2,602 | 7,634 |
| ஏனையவை | 4,885 | 6,745 | 7,331 | 10,833 | 13,603 | 12,604 | 24,679 |
| **ஆபிரிக்கா** | 2,712 | 2,141 | 1,549 | 2,308 | 3,614 | 5,045 | 8,081 |
| தென்னாபிரிக்கா | 933 | 756 | 779 | 1,415 | 1,962 | 3,048 | 3,366 |
| ஏனையவை | 1,779 | 1,385 | 770 | 893 | 1,652 | 1,997 | 4,715 |
| **கிழக்காசியா** | 52,854 | 44,944 | 48,329 | 68,430 | 96,194 | 132,730 | 183,097 |
| சீனா | 11,949 | 9,812 | 8,550 | 10,430 | 16,308 | 27,627 | 54,288 |
| ஹொங்கொங், சீனா | 186 | 537 | 1,330 | 1,230 | 2,199 | 1,535 | ** |
| இந்தோனேசியா | 1,404 | 1,157 | 1,040 | 1,343 | 2,049 | 2,890 | 17,295 |
| ஜப்பான் | 14,274 | 10,075 | 10,926 | 14,352 | 20,586 | 26,085 | 31,505 |
| கொரியா (தென்) | 4,870 | 4,300 | 3,695 | 4,426 | 5,485 | 7,838 | 12,207 |
| மலேசியா | 6,704 | 5,188 | 6,850 | 13,367 | 16,094 | 21,776 | 19,181 |
| பிலிப்பீன்ஸ் | 2,162 | 1,693 | 1,421 | 1,391 | 2,047 | 5,687 | 14,616 |
| சிங்கப்பூர் | 5,688 | 5,802 | 7,808 | 11,875 | 15,953 | 17,273 | 15,546 |
| தாய்லாந்து | 2,467 | 3,583 | 3,208 | 3,684 | 5,880 | 7,897 | 9,608 |
| தாய்வான் | 2,553 | 1,907 | 2,715 | 5,277 | 7,010 | 12,703 | 3,931 |
| ஏனையவை | 597 | 890 | 786 | 1,055 | 2,583 | 3,265 | 4,920 |
| **தெற்காசியா** | 149,626 | 128,098 | 126,205 | 175,694 | 237,647 | 247,559 | 326,556 |
| பங்களாதேஷ் | 1,665 | 1,564 | 1,294 | 1,954 | 4,726 | 4,646 | 10,037 |
| இந்தியா | 106,067 | 85,238 | 83,634 | 126,882 | 171,374 | 176,340 | 208,795 |
| மாலைதீவுகள் | 29,539 | 31,564 | 31,916 | 35,791 | 44,018 | 47,572 | 79,474 |
| நேபாளம் | 885 | 860 | 676 | 753 | 826 | 1,038 | 2,019 |
| பாகிஸ்தான் | 10,204 | 7,885 | 7,373 | 9,148 | 14,724 | 16,056 | 25,336 |
| ஏனையவை | 1,266 | 987 | 1,312 | 1,166 | 1,979 | 1,907 | 895 |
| **அவுஸ்திரேலியா** | 22,924 | 21,839 | 26,068 | 37,290 | 46,467 | 57,776 | 60,836 |
| அவுஸ்திரேலியா | 20,241 | 19,536 | 23,239 | 33,456 | 41,728 | 51,614 | 54,252 |
| நியூஸீலாந்து | 2,627 | 2,240 | 2,672 | 3,487 | 4,212 | 5,641 | 6,174 |
| ஏனையவை | 56 | 63 | 157 | 347 | 527 | 521 | 410 |
| **மொத்தம்** | 494,008 | 438,475 | 447,890 | 654,476 | 855,975 | 1,005,605 | 1,274,593 |

*இலங்கையில் 1-365 நாட்கள் தங்கிய சுற்றுலா பயணிகள் ஆராயப்பட்டுள்ளனர், இலங்கையர்கள், பரிமாறல் பரிமாற்றம், தொழில் மற்றும் வதிவிடம் பெற வந்தவர்கள் விலக்கப்பட்டுள்ளனர்.

** 2013 இந்த எண்ணிக்கை சீனா கீழ் சேர்க்கப்பட்டுள்ளது

# முகாமைத்துவ உரையாடலும் பகுப்பாய்வுகளும் தொடர்ச்சி.

### சிவில் விமானசேவை பயிற்சி நிலையம்

2013 ஆம் ஆண்டில் கம்பனியால் சிவில் விமானசேவைகள் பயிற்சி நிலையத்தின் வசதிகளை அபிவிருத்தி செய்வதில் குறிப்பிடத்தக்க முதலீடுகளை மேற்கொண்டது. ஆறு வகுப்பறைகள் நவீனமயப்படுத்தப்பட்டதுடன், புதிய தகவல் தொழில்நுட்ப மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆய்வுகூடம் மற்றும் புதிய மொழி ஆய்வுகூடம் என்பன அமைக்கப்பட்டன. மேலும் புதிதாக நிர்மானிக்கப்படும் கட்டிடத்தில் கேட்போர்கூடம் மற்றும் தகவல் வளநிலையம் என்பன பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதில் நவீன தொழில்நுட்பத்தினாலான ATC 3D டவர் சிமியூலேடர் உபகரணத்தைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சிவில் விமானசேவைகள் பயிற்சி நிலையம் 2013 ம் ஆண்டு சுமார் ரூபா 2 மில்லியன் வருவாயை ஈட்டியது. இந்த வருவாயில் 34% வெளிநாட்டு பயிற்சியாளர்களின் சமூகமளிப்பினால் பெறப்பட்டதாகும். குறித்த ஆண்டில் சிவில் விமானசேவை பயிற்சி நிலையத்தில் 555 பயிலுனர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இதில் 10 வெளிநாட்டு பயிலுனர்களும் 15 உள்ளூர் வர்த்தக பயிலுனர்களும் அடங்குவர்.

சிவில் விமானசேவைகள் பயிற்சி நிலையத்தின் மூலம் "விமானசேவை கல்வி டிப்ளோமோ" வெற்றிகரமாக நிறைவு செய்த இரண்டாவது தொகுதி மாணவர்களுக்கான டிப்ளோமா வழங்கும் நிகழ்வு 2013 ஜுலை மாதம் இடம்பெற்றது.

### முதலாவது தொழில் வள திட்டமிடல் அமைப்பு (ERP)

விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனம் முதலாவது இணைய வாயிலான தொழில்வள திட்டமிடல் அமைப்பினை 2014 முதலாவது காலாண்டில் அறிமுகம் செய்ய திட்டமிட்டது. இங்கு 'Oracle EBS' தொழில்வள திட்டமிடல் அமைப்பு எயார்போர்ட் 20/20 பில்லிங் அமைப்புடன் இணைக்கப்படுவதுடன், விமானசேவைத் துறையின் விஷேட தேவைகளை நிறைவேற்றுவதற்காக 'hSenid' மனிதவள தொகுதி பயன்படுத்தப்படும். இந்த சர்வதேச வானோடல் விலைப்பட்டியல் மென்பொருள் Oracle ERP தொகுதியுடன் விளைவுபெருக்கமான விதத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட விமானங்களுடன் இணைந்த மற்றும் இணையாத வருமானங்களின் விலைகளை தீர்மானித்தல் மற்றும் ஒப்பீடு இலகுபடுத்துமென எதிர்பார்க்கப்படும்.

### விமானசேவை துறையில் வரலாறு படைத்த ம.இ.ச.வி வர்த்தக செயற்பாடுகளின் ஆரம்பம்.

ம.இ.சவி நிலையம் இலங்கையின் மேன்மை தங்கிய சனாதிபதி மஹிந்த இராஜபக்ஸ அவர்களினால் 2013 மார்ச் 18 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. முதலாவது பெண்ணாக திருமதி ஷிராந்தி இராஜபக்ஷ உள்ளடங்களாக ஏனைய அதிதிகளுடன் ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் யூ.எல் 226 ரக விமானத்தில் மாகம் ருஹுணு நகரிற்கு முதற் பரப்பினை மேற்கொண்டர். விமான நிலையத்தின் முதல் பயணியாக மேன்மை தங்கிய சனாதிபதி வருகை தந்து நினைவு சின்னத்தினை திறந்து ம.இ.ச.வி செயற்பாடுகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்ததுடன் முதல் விருந்தினராக அதன் தங்கப்புத்தகத்தில் கையொப்பமிட்டார். பின்னர் விமான நிலையத்தினை ஏனைய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் பார்வையிட்டார்.

விமானநிலையம் வருடாந்தம் 01 மில்லியன் பயணிகளையும், 30,000 விமானங்களையும் கையாளும் திறன் கொண்டது. தலைநகரில் அமைந்துள்ள ப.ச.வி பிரதான நுழைவாயிலாக எதிர்நோக்கும் உயர் அழுத்தத்தினை குறிப்பிட்ட அளவில் பகிர்ந்து கொள்ள உதவும். ஐக்கிய அரபு இராச்சியத்தின் சிக்கன சேவையான எயார் அரேபியா விமான சேவையே ம.இ.ச.வி வருகை தந்த முதலாவது வெளிநாட்டு விமான சேவையாகும். 2013 மார்ச் 18 ஆம் திகதி தொடக்கம் சார்ஜா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ம.இ.ச.விமானநிலையத்துக்கு வாரம் இரு முறை செயற்பட்ட இச்சேவை 2013 மே 19 ஆம் திகதியிலிருந்து வாராந்தம் நான்கு பயணத் தடவைகள் வரை சேவைகளை பரவலாக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் முதல் கட்டத்திற்கான மொத்த செலவினம் அ.டொ 209 மில்லியன் ஆகும். இதற்கான கடன் உதவியாக சீனாவின் எக்சிம் வங்கியினால் அ.டொ 190 வழங்கப்பட்டதுடன் மிகுதி அ.டொ 19 மில்லியன் செலவினத்தினை விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனம் பொறுப்பேற்றது. முதல் கட்டத்தில் எஞ்சியுள்ள பணிகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான அ.டொ 120 மில்லியன்கள் கடனுதவினை சீனாவின் எக்சிம் வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

### விமான ஓடுபாதை, நடையோடுபாதைகள் மற்றும் விமான ஏற்றிட அபிவிருத்தி

இவ்விமான நிலையத்தின் ஓடுபாதை Code 4F (A380) ரக விமானங்களை கையாளும் திறன் கொண்டவை. விமான ஓடுபாதையின் நீளம் மற்றும் அகலம் முறையே 3,500 மீ மற்றும் 75 மீ ஆகும். விமான ஏற்றுமிடத்தில் 10 விமானங்கள் காணப்படும். விமான ஓடுபாதை மற்றும் ஏற்றுமிடத்தை இணைத்து 1 கிலோமீட்டர் மற்றும் 1.5 கி.மீட்டரால் ஆன விமான ஓடுபாதைக்கு நுழையும் இரு குறுக்கு வழிகள் விமான ஓடுபாதையில் 22 ஆவது முனையத்தில் உள்ளது.

### பயணிகள் முனையக் கட்டிடம்

இங்கு அதிநவீன பயணிகள் முனையக் கட்டிடத்தின் விமானங்கள் மற்றும் முனையக் கட்டிடங்களை இணைக்கின்ற இணைக்கும் பாலங்கள், (boarding bridges) பயணப் பொதிகளை கையாளும் முறை, பயணிகள் பொதிகள் திரையிடல் அமைப்பு, மின்தூக்கிகள், மின்சாரப் படிகள், விமான தகவல் அமைப்புமுறை மற்றும் பயணமுறை உபகரணங்கள் என ஏதேனும் சர்வதேச பயணிகள் கட்டிடமொன்றில் காணக்கூடிய நவீன வசதிகளாலானது.




மேன்மை தங்கிய சனாதிபதி ம.இ.ச.வி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கும் போது

### விமானப் பயண கட்டுப்பாடு கோபுரம் மற்றும் வானோடல் கருவிகள்

45 மீட்டர் உயரமான இந்த கட்டுப்பாட்டுக் கோபுரம், விமான நிலையத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். பாதுகாப்புடனான விமானப் பயணங்களை உறுதிபடுத்துவதற்காக விமானத்திலிருந்து தரைக்கும் மற்றும் விமானத்திலிருந்து விமானத்துக்கும் தொடர்பாடல்கள் மற்றும் வழிகாணுதவி மற்றுமல்லாது காலநிலை அவதானிப்பு கருவிகளும் நிலை நிறுத்தப்பட்டு தொழிற்படுகின்றது. இங்கு எண்ணியல் குரல் தொடர்பாடல் அமைப்பு விமானங்களின் நெரிசல் இருக்கும் சந்தர்ப்பங்களில் விஷேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், அது நாடு பூராவமுள்ள ஏனைய சிவில் விமானநிலைய விமானப் பயண கட்டுப்பாட்டு நிலையங்களுடன் ஒருங்கிணைத்துள்ளது.

### ம.இ.ச.வி இல் தொடர்பாடல், வழிகாணுதவி மற்றும் கண்காணிப்பு சேவைகள

ம.இ.ச.வி E & ANE தொகுதியால் விமான போக்குவரத்து மற்றும் பயணிகள் போக்குவரத்து கையாளுவதற்காக 24 மணித்தியாலங்கள் பூராவும் வழிகாணுதவி தொடர்பாடல் மற்றும் கண்காணிப்பு சேவைகள் வழங்கப்படும். இந்த அனைத்து பிரிவுகளும் சர்வதேச சிவில் விமானசேவை அமைப்பின் தரங்களுக்கு இயைவாக நடைமுறைப்படுத்தப்படும்.

ம.இ.ச.வி இற்குரிய IP கட்டிடக்கலையை உபயோகித்து எதிர்காலத்தில் பயன்பாட்டுக்கு ஏற்றவகையில் தயாரிக்கப்பட்ட நில தொடர்பாடல் முறைகள் காணப்படுகின்றன. ம.இ.ச.வி இல் பாதுகாப்பு விமானத்துறைகள் மற்றும் தீயணைப்பு போன்ற பலதரப்பட்ட தொகுதிகள் இருப்பதுடன், அதன் மூலம் விமானநிலையத்தினுள் தொழிற்படுத்தப்படும் பல்வேறு பிரிவுகளுக்கிடையே சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும். இந்த நில தொடர்பாடல் தொகுதி நாளாந்த தொழிற்பாடுகளை சரியான விதத்தில் பேணுவதுடன், அவசரமான சந்தர்ப்பங்களில் அந்த நிலைமைக்கு முகங்கொடுப்பதற்காக அந்தந்த நிறுவனங்களுடன் தொடர்புபடுத்தப்படும். விமானநிலைய பிரதிநிதிகளின் தேவைப்பாடுகளுக்காக தயாரிக்கப்பட்ட ஆற்றல்மிக்க கூறுகளை வழங்கி மிகவும் உயர்ந்த விமானநிலைய வினைத்திறனை ஏற்படுத்துவதற்காக உயர் பங்களிப்பு இந்த தொகுதியிலிருந்து கிடைக்கினறது.

ம.இ.ச.வி விமான ஓடுபாதையின் 23 ஆவது முனையம் (Runway 23). Lolizer, Glide Path மற்றும் Middlele Maker போன்ற கருவிகளால் தயாரிக்கப்பட்டு வகை 1(Category 1) தரையிறங்கும் தொகுதியால் (Instrument Landing System) உள்ளடங்கப்பட்டுள்ளது.

விமானநிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள டாப்ளர் அதி உயர் பல்வகை அலைவரிளை (Doppler Very High Frequency Omni Range –DVOR) கருவிகள் மற்றும் தூரத்தை அளவிடும் கருவிகள் (Distance Measuring Equipment) விமானநிலையத்தை நெருங்கும் அதிலிருந்து வெளியேறும் மற்றும் கொழும்பு வான் தகவல் பிராந்தியத்தினூடாக பறக்கும் விமானங்களுக்காக ம.இச.வி அதிகரிக்கும் விமானப் பயணத் தடவைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தி நீண்டகால தீர்வின் தேவைப்பாட்டை இனங்கண்டு அதன் வழிக்காணுதவி தொகுதி I இலிருந்து II/III வரை மேம்படுத்தி நிலையுயர்த்தக்கூடியவாறு தயாரிக்கப்பட்டுள்ளது. அது எதிர்காலம் தொடர்பாக பாதுகாப்பு முதலீடாக இருப்பதுடன், நீண்டகால அபிவிருத்திக்கு துணைபுரிகின்றது.

வெடிக்கக்கூடிய பொருட்களை இனங்கண்டுகொள்ளும் தொகுதி மற்றும் எக்ஸ்ரே பரிசோதனை தொகுதியை ஈடுபடுத்தி பயணிகள் மற்றும் விமானசேவை பாதுகாப்பு உறுதிபடுத்தியுள்ளது. பயணிகளின் பயணப் பொதிகள் தன்னியக்க பரிசோதனை மற்றும் தொழிற்பாடு இலங்கையின்



ம.இ.ச.வி வானில் இருந்தான தோற்றம்.



ம.இ.ச.வி உள்ள கோர்ட்யார்ட். இலங்கை கட்டிடக்கலை நிபுணர்களின் கைவண்ணம்

விமானப் பயணத்துறைக்கு புதிய அனுபவமாக இருக்கின்றன. பராமரிப்பு, பழுதுபார்த்தல் மற்றும் தொழிற்பாட்டு கருத்திட்டங்களின் கீழ் முன்மொழியப்பட்ட விமான ஓடுபாதையின் 5 ஆவது முனையத்தில் கருவிகளை தரையிறக்கும் தொகுதி இந்த மீளாய்வில் “எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்காக திட்டமிடப்பட்ட கருத்திட்டங்கள்” கீழ் விவரிக்கப்பட்டுள்ளன.

### வான் சரக்குக் கட்டிடம்

இது வருடாந்தம் 50,000 மெ.தொ சரக்குகளை கையாளக்கூடியது. இக்கட்டிடத்தில் தவாரங்கள் மற்றும் விலங்குகளை பேணும் வசதிகளுடன் குளிர்சாதன களஞ்சிய வசதிகளும் உள்ளன.

### தீயணைப்பு கட்டடம்

தீயணைப்பு கண்காணிப்பு கோபுரம் அடங்கிய தீயணைக்கும் 5 உந்துப்பொறிகளை நிறுத்தும் வசதிகளுடன் அதி நவீன இரண்டு மாடி தீயணைப்பு நிலையமொன்று இங்கு உள்ளது. 10 ஆவது வகையிற்கு (Category 10) எடுக்கப்படுகின்ற தீயணைக்கும் நிவாரண வசதிகள் ம.இ.ச.வி காணப்படுகின்றது.

### ஏனைய வசதிகள்

தண்ணீர் 300 கன மீட்டர் சேமிக்கத்தக்க 30 மீ உயரத்தில் கூம்பு வடிவிலான நீர் கோபுரம், 200 கனமீட்டர் கொள்ளளவிலான தரைநீர் வடிகாலமைப்பு மற்றும் திண்மக் கழிவு பொருள்களை வெளியேற்றும் தொகுதி இங்கு காணப்படும்.

### மருத்துவப் பிரிவு

ம.இ.ச.வி இன் வாரத்தின் ஏழு நாட்களிலும், 24 மணிநேரமும் செயற்படும் மருத்துவ அதிகாரி ஒருவரின் சேவையைப் பெற்றுக்கொள்ளும் பிரிவுகள் அனைத்தும் மருத்துவ நிலையத்தில் உண்டு. அதன் மூலம் ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ், ஸ்ரீலங்கன் கேட்ரரிங் மற்றும் அனைத்து ஏனைய விமானசேவைகள் விமான நிலையத்தில் காணப்படும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்காக மருத்துவ சேவைகள் வழங்கப்படும்.

### ஆரம்பிப்பதற்கு முன்னதாக - தொழிற்பாடுகளுக்காக ஆயத்தப்படுத்தும் மற்றும் செயற்பாடுகளை கையளிக்கும் நிகழ்ச்சித்திட்டம். (OART)

தொழிற்பாடுகளுக்காக தயார்நிலை, சோதனை, பயிற்சிகளை வழங்குதல் மற்றும் நடவடிக்கைகளை கையளிக்கும் விரிவான திட்டத்தை வகுத்திருந்தமை புதிய விமானநிலையத்தை வெற்றிகரமாக ஆரம்பிப்பதற்காக விஷேடமாக உதவியாக இருந்தது. பலவிதமான கருவிகள், அமைப்பு முறைகள் மற்றும் இயக்க நடைமுறைகள் பல்வேறு விமானசேவைக்களுக்காக மற்றும் பயணம் செய்யும் பயணிகளுக்காக பல்வேறு கட்டங்களில் வினைத்திறன் மிக்க வகையில் வழங்குவது இத் திட்டத்தின் நோக்கமாகும்.

முதலாவது ஆரம்ப சோதனை விமானம் 2012 அக்டோபர் 16 ஆந் திகதி ம.இ.ச.வி நிலையத்திற்கு தரையிறங்கியது. அங்கு நிலைநிறுத்தப்பட்டுள்ள விமான கட்டுப்பாட்டு உபகரணங்கள் சோதனையிடும் நடவடிக்கைகளுக்காக உள்ளன. இந்த முதல் விமானம் AP-CAB ஆக பாக்கிஸ்தானில் பதிவு செய்யப்பட்ட Hawker Beechcraft B200 என்ற விமானமாகும். இரண்டாவது சோதனை விமானம் தேசிய விமான சேவையான ஸ்ரீலங்கன் விமானசேவையின் A330 ரக விமானமாகுவதுடன், வர்த்தக ரீதியாக விமானத் தொழிற்பாடுகள் மற்றும் உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கும் விமானம் மார்ச் மாதம் தரையிறங்கும் இயலுமையை பரிசோதிப்பதற்கு அது 2013 சனவரி 29 ஆம் திகதி தரையிறக்கங்களை ஆரம்பித்தது. விமானம் ப.ச.வி இருந்து புறப்பட்டு ம.இ.ச.வி வந்தடைந்தது.

அக்குறித்த தரையிறங்கள் சிறந்த முறையில் இடம்பெற்றதுடன் ம.இ.ச.வி அனைத்து வானோடல் தொகுதிகள் முறையான விதத்தில் செயல்பட்டதாக எமது தேசிய விமானசேவையான ஸ்ரீலங்கன் விமானசேவையின் மிகவும் தகைமை வாய்ந்த பதவியணியனரால் உறுதிப்படுத்தப்பட்டது. அவர்கள் இந்த விமானநிலையத்தின் வசதிகள் குறித்து மிகவும் திருப்தியடைந்ததுடன் விமான ஓட்டிகளின் கண்ணோட்டத்தின் படி வர்த்தக ரீதியிலான விமான செயற்பாடுகளை திட்டமிடுவதற்கு சகல சிறப்பம்சங்களையும் கொண்டுள்ளதை உறுதிப்படுத்தப்பட்டது.

## இரத்மலானை விமான நிலையம்

இரத்மலானை விமான நிலையம் இலங்கையின் உள்நாட்டு விமானசேவை நிலையமாக உருவாகியுள்ளது. 1968 ஆம் ஆண்டில் இரத்மலானை விமானநிலையம் மூலம் மேற்கொள்ளப்பட்ட அனைத்து சர்வதேச தொழிற்பாடுகள் ப.ச.வி திருப்பப்பட்டன. நிகழ்காலத்தில் Fits Air, Heli Tours, Millennium Airlines, Cosmos Aviation, Senok Aviation, Asian Aviation and Daya Aviation. இங்கு தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்படும். 2013 ஆண்டில் புதிய விமானசேவை தொழிற்பாட்டாளரான லக்வின் ஏவியேஷசன் விமானநிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியுடன் இரத்மலானை விமானநிலையத்தின் விமான முனையத்தில் உள்நாட்டுத் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக உடன்படிக்கையை மேற்கொண்டனர்.

தரை செயற்பாடுகள், சுங்கம், குடிவரவு மற்றும் குடியகல்வு மற்றும் ஏனைய தொடர்புடைய சேவைகள் போன்று அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளால் உள்ளடக்கப்பட்ட இரத்மலானை விமான நிலையம் தற்போது சர்வதேச கம்பனிகள் ஜெட்களை கையாளும் திறன் கொண்டுள்ளது. 2013 ஆம் ஆண்டில் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு அமைய இரத்மலானை விமானநிலையத்தில் தறையிறங்கும் சகல சர்வதேச தனியார் கூட்டுறவு ஜெட்களுக்கு (corporate Jets) வெளிக்கள கையாள்கை வசதிகளை வழங்குவதற்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கம்பனி இணங்கியது.

## 2013 பொதுநலவாய தேசத்தலைவர்களின் மகாநாட்டிற்கு வழங்கிய முக்கிய பங்களிப்பு

பொதுநலவாய தேசத்தலைவர்களின் மாநாடு இலங்கையில் முதல் முறையாக 2013 நொவெம்பர் மாதம் இடம்பெற்றது. இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் 1976 ஆம் ஆண்டு இடம்பெற்ற அணிசேரா நாடுகளின் மாநாட்டிற்கு பிறது இங்கு இடம்பெற்ற இரண்டாவது மிகப்பெரிய சர்வதேச ஒன்றுகூடலாகும். 2013 பொதுநலவாய தேசத்தலைவர்களின் மாநாட்டினை இலங்கை நடாத்தியமை இலங்கையின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.

விமான நிலையத்தில் உள்வருகை மற்றும் புறப்படுதல் பயணிகள் வசதியனை அளிப்பதில் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனம் பிரதான பங்களிப்பை வழங்கியது. பொதுநலவாய தேசத்தலைவர்களின் மாநாட்டுச்செய்றாடுகளை முன்னெடுக்க ப.ச.வி இன் WIP கட்டிடம் இ தரிப்பிடம் மற்றும் பாதைகளில் பாரிய முதலீட்டை மேற்கொண்டு அபிவிருத்தி செய்யப்பட்டது.

2013 பொதுநலவாய மாநாட்டின் தொழிற்பாடுகளுக்காக அடிப்படை ஆயத்தமாக ப.ச.வி. ம.இ.ச.வி மற்றும் இ.வி சர்வதேச விமானநிலையத்தின் உள்வருகை மற்றும் புறப்படுதல் பிரிவுகளில் பல்வேறு பணிகள் நிமித்தம் 4,800 அனுமதி பத்திரங்கள் சேவை வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டன.

வி.வி.சேவைக் கம்பனிகள் மூலம் மாநாட்டுடன் தொடர்புடைய பல கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது. ப.ச.வி. இன் WIP கட்டிடம் 1984 ஆம் ஆண்டிற்கு பின்னர் ரூபா 150 மில்லியன்கள் செலவில் 2 1/2 மாதங்களினுள் வியக்கும் வகையில் முழுமையான புனர்நிர்மாணம் செய்யப்பட்டு விரிவாக்கமும் செய்யப்பட்டது. மேலும் ஆடம்பர கூடம் ஒன்றும் நிகழ்வில் கலந்துகொள்ளும் அதிமுக்கிய புள்ளிகளுக்கான



புனர்நிர்மாணம் செய்யப்பட்ட VVIP கட்டடம்

நிர்மாணிக்கப்பட்டது. இரத்மலானை விமான நிலையம் ரூபா 100 மில்லியன் செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. இது இவ்வாண்டு நிறைவு செய்த திட்டங்களின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளது.

ப.ச.வி மற்றும் இ.வி சுற்றியுள்ள பாதைகள் செப்பனிடப்பட்டு மேலதிக வாகன தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டன. ப.ச.வி வாகன தரிப்பிடம் முதலீட்டு ஊக்குவிப்பு வளாகத்தில் பிரதான நுழைவாயிலுக்கு அண்மையில் கழிப்பறை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான விஷேட வாகன தரிப்பிடத்துடன் அமைக்கப்பட்டன. வாகன தரிப்பிடம் இலத்திரனியலுடன் செயற்படுகின்ற மற்றும் ட்ரொப் ஆர்ம் பெரியர் அமைப்பால் மற்றும் நுழைவுச் சீட்டு கவுன்டரினால் உள்ளடக்கப்பட்டுள்ளன. இரத்மலானை விமானநிலையத்தில் வாகனதரிப்பிடங்கள் 83 இடங்களில் அமைக்கப்பட்டது.

2013 பொதுநலவாய தேசத்தலைவர்களின் மாநாட்டுடன் தொடர்புடையவர்களுக்கு நிகழ்வு ஆரம்பமாகுவதற்கு முதல் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் ஏனைய முகவர் நிறுவனங்களுக்கு தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இங்கு கவுண்டர்களை வர்த்தகநாமப் படுத்தல், மேலதிக அறிவித்தல் பலகைகள், பொது அறிவித்தல் மற்றும் தகவல் அமைப்பு முறைகள் போன்றவற்றை ஈடுபடுத்தி CHOGM மாநாட்டிற்காக விமானநிலையத்திற்குள் மேம்படுத்தப்பட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

CHOGM மாநாடு இடம்பெறுவதற்கு முன்னர் இலங்கையில் சுற்றுலாவில் ஈடுபட்ட வெளிநாட்டு பிரதிநிதிகளுக்காக ஆரம்ப CHOGM அறிமுகப்படுத்தும் மற்றும் வசதிகளை ஏற்படுத்தும் கூட்டம் நடாத்தப்பட்டது. சரியான தொழிற்பாட்டுச் செயற்பாட்டை உறுதி செய்யும் வகையில் CHOGM மாநாட்டிற்கு முன்னர் திட்டமிடப்பட்ட திகதிகளில் அனைத்து

# முகாமைத்துவ உரையாடலும் பகுப்பாய்வுகளும் தொடர்ச்சி.

உரிய தரப்பினர்களுக்கும் பயிற்சிகளும், ஒத்திகைகளும் மேற்கொள்ளப்பட்டன.

## 2013 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்ட வேலைத்திட்டங்கள

### 1) மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம்

மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம், எம்மால் நிறைவு செய்யப்பட்ட மிகப்பெரிய வேலைத்திட்டமானது தற்பொழுது இலங்கை வரலாற்றுப் புத்தகங்களில் பதியப்பட்டுள்ளது. இது குறித்த விபரங்கள் தவிசாளரின் மீளாய்வில் இவ்வறிக்கையின் ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2) இரத்மலானை விமான நிலையத்தின் புனர்நிர்மாணம்

இரத்மலானை விமான நிலையத்தில் 1939 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட முனையக் கட்டிடம் பொதுநலவாய மாநாட்டின் நிமித்தம் மறுசீரமைக்கப்பட்டது. நிர்மாணித்ததன் பின்னர் முதல் தடவையாக புதுப்பிக்கப்பட்டது இந்த சந்தர்ப்பத்திலேயாகும். அதன் வரலாற்று சிறப்புகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் புதிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த பணிகளுக்கு சுமார் ரூபா 100 மில்லியன் செலவிடப்பட்டது.

புதிய முனையக் கட்டிடம் விமானப் பயணிகளுக்காக மிகவும் இட வசதிகளுடனும் நவீன வசதிகளுடனும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. புதிய முக்கிய விருந்தினர் கூடம் நிர்மாணிக்கப்பட்டது. வேண்டியதொரு தருணத்தில் வேண்டியதொரு விசேட நிகழ்விற்கு ஏற்றவாறு வி.வி.ஐ.பி மற்றும் வி.ஐ.பி கூடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. விமானநிலைய உணவகமும் நவீன ஆற்றலுடன் புதுப்பிக்கப்பட்டது. பயணிகள் மற்றும் விமானங்களுக்கு பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்துவதற்கு விமானஓடுபாதை பாதுகாப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டன. விமான ஓடுபாதையின் 04 மற்றும் 22 என்ற இரு முனையங்களினதும் PAPI பொருத்துவதனூடாக விமான நடவடிக்கைகளின் பாதுகாப்பும் உயர்த்தப்பட்டது. இது வரைக்காலம். பயணிகள் எதிர்நோக்கிய வாகன தரிப்பிட சிக்கலுக்கு தீர்வாக 100 வாகனங்களை தரிக்கும் வசதி கொண்ட புதிய வாகனப் தரிப்பிடமொன்று அமைக்கப்பட்டது.



புனர்நிர்மாணம் செய்யப்பட்ட இரத்மலானை விமானநிலையம்

### 3) கொழும்பு பிராந்திய கட்டுப்பாட்டு நிலையத்தில் (ACC) புதிய விமான போக்குவரத்து முகாமை தொகுதி (ATM) செயற்படுத்தியமை

புதிய விமான போக்குவரத்து முகாமை தொகுதி (ATM) 2013 ஏப்ரல் மாதம் நடைமுறையில் செயற்படுத்தப்பட்டதுடன் அதன் மூலம் இலங்கையின் விமானசேவைத் துறை, ஆசியா பிராந்தியத்தில் பாதுகாப்பு, வினைத்திறன்மிக்க வானோடல் சேவைகள் மற்றும் மேலெழுகைச் சேவைகள் திட்டமிடுவதற்கு முடியுமாகவுள்ளது. இரத்மலானை விமானநிலையத்தின் கொழும்பு பிரதேச கட்டுப்பாட்டு நிலையத்தில் (ACC) புதிய விமானப் பயண முகாமைத்துவ தொகுதியை (ATM) பொருத்துதல் கொழும்பு FIR இற்கு நுழையும் மற்றும் வெளியேறும் விமானங்களுக்கான உதவியாக இருக்கும்.

மின்னணுவியல் விமான கீலம் (Electronic Flight Strip) மூலம் விமானப் பயண கட்டுப்பாட்டில் வினைத்திறனை மேம்படுத்துவதுடன் காகித விமான கீலத்துக்கான (paper flight strips) செலவைக் குறைத்துக் கொள்ள முடியும்.

### 4) ப.ச.வி இல் விமான ஓடுபாதையில் 22 ஆவது முனையில் புதிய உதவி தரையிறங்கும் அமைப்புமுறை (ILS) பொருத்துதல்

முன்பிருந்தே ப.ச.வி மூலம் ஓடுபாதை 22 ஆவது முனையத்தை நோக்கி ILS சேவைகள் வழங்கப்பட்டன. E & ANE பிரிவு மூலம் அதன் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு தொடர்பான பொறுப்பு ஏற்கப்படும்.

ILS மூலம் விமான ஓடுபாதையில் தரையிறங்க வரும் ஒரு விமானத்திற்கு பக்கவாட்டு, செங்குத்தான வழிகாட்டுதலை வழங்குகிறது. இந்த நோக்கத்திற்காக இரண்டு முக்கிய உபகரணங்கள், அதாவது, Localizer (LLZ) மற்றும் Glide Path (GP) என்பன முக்கியமாக இருக்கும். LLZ கருவி விமானத்துக்கு விமானம் ஓடுபாதையில் மையக் கோட்டிற்கு சீரமைவதற்கு உதவியாகுவதுடன் சீரான தரையிறங்களுக்காக விமானம் பெற்றுக்கொள்ள வேண்டிய கோணத்தின் தகவல்களை GP வழங்கும். அதற்கமைய பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான உபகரணமாக இது இணங்கண்டு கொள்ளப்பட்டுள்ளது. அதனால் இந்த உபகரணங்கள் தொடரந்தும் சீராக்கி உயர் தரத்தில் பேணுதல் அத்தியவசியமானதாகும்.

25 வருடங்களிலும் பழமைவாய்ந்த 1983 ஆம் ஆண்டில் பொருத்தப்பட்ட ILS உபகரணங்கள் விமானப் பயணிகளின் பாதுகாப்பு நிலையை உறுதிபடுத்தும் என்ற நம்பிக்கை இல்லாதிருந்ததனால் விமான ஓடுபாதையின் 22 ஆவது முனையத்திற்காக E & ANE பிரிவினால் ரூபா 150 மில்லியன்கள் மதிப்பிடப்பட்ட செலவில் புதிய ILS உபகரணங்கள் பொருத்தும் பாரிய கருத்திட்டம் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு பொருத்தப்பட்ட ILS உபகரணங்களானது Normarc மூலம் தற்போது உற்பத்தி செய்யப்படுகின்ற புத்தம் புதிய கருவியாகும். இந்த தொகுதி ஏற்கனவே உலகம் பூராவும் பல்வேறு விமானநிலையங்களில் உபயோகிக்கப்படுகின்றன. 2 மாத காலத்திற்குள் இந்த பழைய அமைப்பு முறையை அகற்றி இணைக்கப்பட்டது. பொருத்தப்பட்ட காலத்திற்குள் குறித்த கருத்திட்டம் ப.ச.வி இன் உள்நாட்டு அல்லது சர்வதேச விமானப் பயணங்களுக்கு தடங்கள் ஏற்படாத வகையில் முகாமை செய்யப்பட்டது.

ILS அமைப்பு முறை வெற்றிகரமான நடைமுறைக்குட்படுத்தியதன் பின்னர் அது பாக்கிஸ்தான் சிவில் விமானசேவைகள் அதிகாரசபையின் மதிப்பாராய்வு குழு மூலம் அளவிடப்பட்டது. இந்த அமைப்புமுறை Category II ILS இற்காக சர்வதேச சிவில் விமானசேவைகள் அமைப்பின் தரங்களுக்கு இயைவாக அமைந்துள்ளதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மேற்குறிப்பிட்ட பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மதிப்பாராய்வு குழு மூலம் இந்த அமைப்புமுறை விமான ஓடுபாதையின் 22 ஆவது முனையத்தின் பாவனைக்கு உகந்ததொன சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

இப்போதைக்கு ILS ஆரம்பத்தில் செயற்படுத்தியதிலிருந்து வருடத்துக்கு லேதிகமாக வெற்றிகரமாகு செயற்பட்டு வருகின்றது. இந்த செயற்பாட்டு தொடர்பாக E&ANE பிரிவின் அர்ப்பணிப்பை பாராட்டுதல் வேண்டும். விமான ஓடுபாதையின் 22 ஆவது முனையத்திற்குரிய அனைத்து ILS உபகரணங்கள் இரண்டாவது தடவைக்கும் E&ANE பிரிவால் அனைத்து வானொலி வானோடல் கருவிகளுக்காக மேற்கொள்ளப்படும் வருடாந்த விமானங்கள் மதிப்பாராயும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மதிப்பாராயப்பட்டது. இந்த மதிப்பாராய்வு ICAO மூலம் நடாத்தப்படும் விதந்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு இயைவாக மேற்கொள்ளப்பட்டதுடன், மொத்த அமைப்புமுறைக்கு மட்டுப்படுத்தப்படாத பாவனை உகந்ததென கண்டறியப்பட்டுள்ளது.

### 5) அத்திடிய HF அலைபரப்பி நிலையத்தின் புதிய உயர் எண்ணிக்கையிலான அலைவரிசை உபகரணங்களை பொருத்துதல்கள்

இரத்மலானையிலுள்ள ஏரோமொபைல் நிலையத்திலிருந்து உற்பத்தியாகும் ஏரோமொபைல் குரல் செய்திகள், தரையிலிருந்து வான்வெளிக்கு ஒளிவரப்புவதே இதன் பிரதான தொழிற்பாடாகும். கொழும்பு FIR இன் பாரியளவு பகுதியொன்று உயர் அலைவரிசைக்கு உட்பட்டதாகும். (VHF காப்பீடு எல்லையிலிருந்து கிழக்குத் திசைக்கு 950 விமான மைல்கள் மற்றும் தெற்குத் திசைக்கு 700 விமான மைல்கள்)

உயர் எண்ணிக்கையிலான அலைபரப்பிகள் மூலம் வெளியிடப்படும் வானொலி சமிக்கைகள், குரள் தொடர்பாடல் வழியாக விமானங்களுடன் முக்கிய தகவல்களின் பரிமாற்றத்துக்காக பயன்படுத்தப்படும்.

அலைபரப்பி நிலையம் அதிக ஆற்றல்மிக்க உயர் எண்ணிக்கையிலான அலைவரிசைகள் மற்றும் உயர் எண்ணிக்கையிலான வானலை வாங்கிகளினால் உள்ளடக்கப்படுவதுடன் அவை அதாவது, Dipole, Monopole, Bi-Conical & Conical monopole ஆகுவதுடன் அவை விஷாலமான வானலை வாங்கிகளினால் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

26 ஆண்டுகளுக்கு மேலதிமாக பாவிக்கப்பட்ட பழைய அலைபரப்பிகளுக்குப் பதிலாக ரூ. 134 மில்லியன்கள் செலவில் நவீன தொழில்நுட்ப ஆற்றல் கொண்ட உச்ச எண்ணிக்கையிலான மூன்று அலைபரப்பிகளை பொருத்தும் கருத்திட்டம் 2012 ஆம் ஆண்டு மே மாதத்தில் பூர்த்திசெய்யப்பட்டது. இந்த புதிய அலைபரப்பிகளில் மின்சார வினைத்திறன் பழைய அலைபரப்பிகளிலும் பார்க்க உயர் மட்டத்தில் இருப்பதுடன் 3200KWH மின்சார சிக்கணத்தை அவதானிப்பதற்கு முடியுமாக இருந்தது.

இந்த புதிய கோனிகல் மோனோபொலி வானலை வாங்கிகள் இலகுவாக பராமரிக்கக் கூடிய வகையில் திட்டமிட்டிருப்பதுடன் பழைய வானலை வாங்கிகள் பழுதுபார்ப்பதற்காக முன்னயவை போன்று கீழிறக்க தேவையில்லை.

### 6) ப.ச.வி தரை வானொலி தொடர்பாடல் அமைப்பைமுறையை மேம்படுத்துதல்

தொடர்பாடல் அமைப்பு முறையிற்காக அதிகரித்து வரும் கேள்விகளுக்கு ஏற்றவாறு அவசரமான நிலைமைகளில் நம்பகத்தன்மையான சேவையை வழங்குதல் உறுதிபடுத்தும் வகையில் பின்வருமாறு காட்டப்படுகின்ற மேம்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன.

- அதிக அலைவரிசைகள், அதிக குழுக்கள் மற்றும் அதிக அங்கத்தவர்கள்.
- பலவித முதன்மை படிநிலைகள் காரணமாக ஏற்படும் தடங்களின்றி முக்கியமான தொடர்பாடல் நடவடிக்கைகள் நம்பகரமான விதத்தில் மேற்கொள்ளுதல்.
- காலத்தை வகைப்படுத்தும் பல்தரப்பட்ட அணுகுமுறை (TDMA) மற்றும் அலைவரிசைகள் வகைப்படுத்தும் பல்தரப்பட்ட அணுகுமுறை(FDMA) காரணமாக ஒளிக்கற்றை அலைவரிசை குறைவாக பயன்படுத்துதல்
- பல்வேறு புதிய பெறுமதி சேர்ப்புகள் (Global Positioning System (GPS), Automatic Vehicle Locator (AVL), Short Message Service (SMS), Etc.)
- Global Positioning System (GPS), Automatic Vehicle Locator (AVL), Short Message Service (SMS), Etc.) போன்ற புதிய பெறுமதி சேர்க்கும் சிறப்பம்சங்கள
- பாவனை மற்றும் பரவலாக்கத்தினை இலகுவில் மேம்படுத்துவதற்கான நெகிழ்ச்சி.
- 25 கி.மீ ஆரையினாலான பிரதேசத்தை உள்ளடக்கக்கூடிய மேம்படுத்தப்பட்ட உள்ளடக்கம்

# முகாமைத்துவ உரையாடலும் பகுப்பாய்வுகளும் தொடர்ச்சி.

செயற்திட்டத்திற்கான முழுசெலவினம் ரூ. 61 மில்லியன்களாகும். விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்திலுள்ள துணை நிறுவனங்களுடன் ஸ்ரீலங்கன் இராணுவம், சீபெட்கோ என்பன புதிய (European Aeronautic Defence and Space (EADS) Cascadian தரைதொடர்பாடல் அமைப்பு குறித்து தமது திருப்தியை பிரகடனப்படுத்தியுள்ளன.

### 7) AMHS விரிவாக்கம்

2012 செப்டெம்பர் மாதம் AMHS திருப்திகரமானதாக செயல்படுத்தியதன் பின்னர் E & ANE மற்றும் ANS பிரிவுகளின் பாரிய பங்களிப்புடன் வி.வி.சே.க இப்போதைக்கு பிராந்தியத்தில் மிகவும் உயர் நிலையிலுள்ள வானோடல் சேவைகள் திட்டமிடலாளராக உருவாகியுள்ளது. இந்த புதிய AMHS தொகுதி தரை மற்றும் தரைகளிடையே வான் அசைவுகளின் செய்திகளை அனுப்பும் சேவையின் ஆகக்கூடிய வினைத்திறனை ஏற்படுத்தி இருப்பதுடன், அதன் மூலம் கொள்ளளவு, வேகம், திருத்தத்தன்மை மற்றும் பாதுகாப்பு அதிகரித்தல் இந்த செய்தி பரிமாற்றத்தின் காணக்கூடியதாக உள்ளது.

இரத்மலானை விமானநிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள மத்திய தகவல் மாற்றீடு அமைப்பானது மும்பாய், சிங்கப்பூர் மற்றும் மாலேயில் ஆகிய நாடுகளுடன் தொடர்புபட்ட மின்சிற்றுக்களினூடாக நாட்டிற்குள் விமானங்களின் பிரவேசத்தில் முக்கியமான தகவல்கள் வழங்குகின்றது. விமானங்களின் திட்டமிடல்கள், வானிலை தகவல்கள், விமானங்களின் முறைமைச் செய்திகள் மற்றும் விமான நிர்வாக தகவல்களை வழங்கி வருகின்றது.

வான் போக்குவரத்து அதிகரிப்புடன் அதிகரித்த கேள்வியை நிறைவேற்றுவதற்கு மற்றும் விமானங்களின் தொழிற்பாடுகள் காரணமாக நாட்டின் எதிர்கால சவால்கள் வெற்றிகொண்டு பாதுகாப்பு தொடர்பான தரங்கள் உறுதிப்படுத்துவதற்கு 2013 ஆம் ஆண்டில் இந்த தொகுதி ம.இ.ச.வி. இற்கு சேவை வழங்குவதற்காக பரவலாக்கப்பட்டதுடன் ப.ச.வி. ஸ்ரீலங்கன் எயார்லைனஸ் மற்றும் இலங்கை இராணுவத்திற்கு புதிய AMHS உபகரணங்கள் பொருத்தப்பட்டது.

மேலும் 2013 மே மாதத்தில் சர்வதேச சிவில் விமானசேவைகள் அமைப்பில் தரங்களுக்கு இணங்கும் வகையில் மற்றும் நம்பகரமான மற்றும் உயர் சேவையை உறுதிபடுத்தும் வகையில் கெனேடியன் வழங்குநரின் ஒத்துழைப்புடன் விமானப் பயண கையாளும் தொகுதி (AMHS) நவீனமயப்படுத்தி உயர்த்தப்பட்டது.

வி.வி.சே.க ATN IP கருத்திட்டத்தின் இரண்டாவது கட்டம் 2014 வருடத்துக்குள் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்படுவதுடன் அதன் மூலம் மும்பாய், சிங்கப்பூர் மற்றும் மாலே போன்ற நாடுகளிடையே வான் அசைவு செய்திகளுக்காக AMHS பொருத்துவதற்கு எதிர்பார்க்கப்படும்.

### 8) எதிர்கால வானோடல் தொகுதியின் (FANS) இணைய வரைமுறை (IP) இடப்பெயர்வு

FANS, என்பது வானெல்லை செய்மதி பாவனையால் Dependent Surveillance Contract (ADS-C) மற்றும் Controller Pilot Data Link Communication (CPDLC) ஊடாக நேரடி மற்றும் முன் மாதிரி செய்தி முறைகள் மூலம் வானோடி மற்றும் விமானப் பயண கட்டுப்பாடுகளிடையே மேற்கொள்ளப்படுகின்ற தொடர்பாடல்கள் மூலம் விமானமொன்றின் பயணம் செய்யும் இடத்தினை கண்டறிவதற்கு உபயோகிக்கப்படும் வான்/ நில தரவுகள் தொடர்பான தொகுதியாகும். குறுகிய காலத்திற்குள் பயன்படுத்துவதற்கு முடியாத நிலைக்கு உருவாக இடமிருந்த X25 தொகுதி தொடர்பை நீக்கி 2013 ஆம் ஆண்டில் வி.வி. சே.க திருப்திகரமான முறையில் IP மீது அடிப்படையான FANS தரவுகளுடன் தொடர்புடைய சேவை நடைமுறையில் பயன்படுத்தியது.

இது தரவுகளின் தொடர்பு தொடர்பாடல் சேவை வழங்குநராக Society of International Telecommunication foe Aeronautique (SITA) இனால் வழங்கப்பட்டது.

### 9) நயாபெத்தவில் ரிபிட்டர் நிலையத்தை நிலைநிறுத்துதல்

ம.இ.ச.வி நிலைநிறுத்தியதன் பின்னர் அதன் தரவுகள் மற்றும் குரல் தொடர்பாடல் தேவைக்காக ப.ச.வி, மற்றும் இ.வி ACC யுடன் தொடர்படுத்துவது அவசியமானதாகும். பிதுருதலாகலை மற்றும் மத்தலைக்கு இடையே நுண்நோக்கு மையக்கோடு இல்லாததனால் அதற்காக ரிபிட்டர் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு தேவையேற்பட்டது. ஆகவே இவ்விரு இடங்களுக்கும் இடையே இடைவழி நிலையத்தின் தேவைப்பாடு ஏற்பட்டது. இங்கு உள்ள ஆகக் குறுகிய வானொலி பயணப் பாதையாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் நயாபெத்த நிலையம் தெரிவு செய்யப்பட்டது. இதன் பின்னர் குறித்த தொடர்பாடல் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் ஏனைய AASL தொகுதியடன் இணைக்கப்பட்டது.



நிர்மாணிக்கப்பட்ட புதிய தன்னியக்க போக்குவரத்து கட்டுப்பாட்டு பணியகம்

### ரூபா 160 மில்லியனுக்கு அதிகமான சேமிப்பை வழங்கிய உள்ளக அபிவிருத்திகள்

#### 1) விமானங்களின் திட்டமிடல்கள் மாற்றி (FPC) உள்வாரியாக அபிவிருத்தி செய்தல்

மரபுரிமை விமான தரவு பதனிடும் (FDP) அமைப்பு முறையின் தொடர்புறுத்தும் பிரச்சினைகளை தீர்த்தல் மற்றும் சீரான தொழிற்பாட்டுக்கா E & ANE பிரிவினால் விமானங்களின் திட்டமிடல்களை மாற்றி (FPC); தயாரிக்கப்பட்டது. அதன் மூலம் அண்ணளவாக ரூபா 160 மில்லியன்களைச் சேமித்துக் கொள்ள முடியுமாக இருந்தது. குறித்த கால பகுதிக்குள் திட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதுடன், ஸ்தீரமான நிதி அனுகூலம் கிட்டியது அது ரூபா 160 மில்லியன் சேமிப்பாகும்.

#### 2) மின்துளக வேலைத்தளம் மூலம் இரத்மலானையிலுள்ள கட்டுப்பாட்டு கோபுரத்திற்கு புதிய ATC கொன்சோல் புனைதல்.

இரத்மலானை விமானநிலையத்தில் ACC இற்குரிய நவீன திட்டமிடலுக்கு அமைவாக கட்டுப்பாட்டு கோபுரங்களுக்காக புதிய கொன்சோல் நிர்மாணிக்கப்பட்டது. இந்த புதிய கொன்சோல் Air Situation Display Unit, AMHS Terminal, காலநிலை தரவுகள் காட்சிமுறை அலகுகளைப் போன்று நவீன உபகரணங்களுடன் சரியான விதத்தில் பொருத்தமானதாக இருப்பதுடன், Voice Communications Switching System (VCSS) panel, அவசர VHF செலுத்துப்பெறுவி, தரைக் கட்டுப்பாட்டு தொடர்பாடல் அலகு மற்றும் தொலைபேசி போன்ற உபகரணங்களுக்காக இலகுவான பிரவேசத்தினை வழங்குகின்றது. ஓடுபாதை 04 இறுதியாக அவதானிப்பதற்காக விழிசார் காட்சிமுறை அலகு Visual Display Unit போன்ற எதிர்கால மேம்பாடுகளுக்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. விஷேடமாக அது விமானப் பயண கட்டுபாட்டாளர்களின் தேவைப்பாடுகளுக்கு பொருத்தமானதாக இருப்பதுடன் கட்டுப்பாட்டாளர்கள் இருவருடன் ஒரே சமயத்தில் செயலாற்றும் இயலுமையை வழங்குகின்றன. (மீட்டெடுக்கும் பொருட்களாக இரத்மலானை விமானநிலையத்தில் விமான கூடார வசதிகள்) கட்டுநாயக்க ரேடார் கட்டுப்பாட்டு நிலையத்தில் ஒதுக்கப்பட்ட பழைய கொன்சோல் பகுதிகள், இரத்மலானை புதிய ATC கொன்சோல் தயாரிப்பதற்காக பாவனைக்கு எடுக்கப்படும்.

புதிய கொன்சோலின் விலை ரூபா 3 மில்லியன்களை விஞ்சுவதுடன் புதிதாக தயாரிக்கப்பட்ட கொன்சோலுக்காக ரூபா 0.2 மில்லியன்கள் செலவாகும். அதற்கிணங்க இந்த கருத்திட்டத்தின் மூலம் வி.வி.சே.கம்பனியின் மீதியாக இருந்த பணம் அண்ணளவாக ரூபா 2.8 மில்லியன்களாகும். விமானசேவைத் தொகுதிகளுக்கான சர்வதேச தரங்களைப் போன்று இந்த தரவுகள் நடைமுறையில் செயல்படுத்துவதற்கு ஈடுபடுத்திக் கொள்ளும் தொழில்நுட்பமும் துரித வேகத்தில் மாற்றமடைந்து வருகின்றது. அதற்குக் காரணம் உலகளாவிய விமானசேவைத் துறை துரிதமாக வளர்ச்சியடைவதுடன் அதன் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக உற்பத்தி நிறுவனங்கள் பாரியளவில் முன்வருவதுமாகும். இவ்வாறான வெளிப்பாடுகளுடன் இணங்குவதாயின் நேரத்துக்கு முன்னர் தயாராகுதல் அத்தியவசியமாகவுள்ளது. சர்வதேச ரீதியாக வழங்கும் கால எல்லை இலக்குகளை அடைவதற்கு அல்லது அதிகரிக்கும் சந்தையின் கேள்வி நிறைவேற்றிக் கொள்வதுமேயாகும்.

### எதிர்வரும் ஐந்தாண்டு காலத்திற்காக திட்டமிடப்பட்ட கருத்திட்டங்கள்.

#### 1) ப.ச.வி ஓடுபாதையின் மேல் விரிப்பு கருத்திட்டம்

இலங்கை அரசாங்கத்தினால் ப.ச.வி. இன் விமான ஓடுபாதை மற்றும் நடையோடு பாதைகள் கருங்காரையிட்டு மறு சீரமைப்பதற்கு எதிர்பார்க்கப்படும். அதற்கிணங்க 2013 ஆம் ஆண்டில் நிதி அமைச்சு மற்றும் வி.வி.சே.க இணைந்து முன்மொழிவுகளை அழைப்பதற்கிணங்க (Request for proposals) முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முதல்தர ஒப்பந்ததாரர்களுடன் கூட்டமொன்று நடாத்தப்பட்டது. முன்மொழிவு பத்திரத்தில் தேவைப்பாடுகளுக்கிணங்க விமானஓடுபாதை மற்றும் நடையோடு பாதையில் விரிவாக்குதல் இடம்பெறாது. 105 ஐக்கிய அமெரிக்கா டொலர் மொத்த பெறுமதியாலான முன்மொழிவுகளை கலந்துரையாடப்பட்டு வருவதுடன் இதனை அங்கீகரித்து செயல்படுத்தப்படின் 3 வருட காலப்பகுதிக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரருக்கு குறித்த பணம் செலுத்தப்படும்.

#### 2) ப.ச.வி. இன் அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் 2 நடவடிக்கை II (BIADPII-2)

அமைச்சரவையினால் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் வருடத்துக்கு மேலும் 9 மில்லியன்களுக்கு சேவை வழங்குமாறு அபிவிருத்தி செய்வதற்கு சிபாரிசு செய்தது. இந்த கருத்திட்டத்துக்காக ஜப்பான் யென் கடன் தொகை மூலம் நிதி திட்டமிடப்பட்டது. ப.ச.வி.அ.க. II – 2. இற்காக நிதி திட்டமிடும் உடன்படிக்கை 2012 மார்ச் மாதம் 28 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது. 2016 கருத்திட்டம் பூர்த்தி செய்ததன் பின்னர் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் மொத்த கொள்ளளவு வருடத்துக்கு 15 மில்லியன் பயணிகளாக இருக்கும்.

வடிவமைப்பு மற்றும் பட்டப்பின் வடிவமைப்பு மதியுரைச் சேவைகளுக்கான உடன்படிக்கை 2014 மார்ச் மாதம் 03 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது. வடிவமைப்பு கால எல்லை 10 மாதங்களாகும். நிர்மாணிப்புக்கள் 2014 நொவெம்பர் மாதம் தொடங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. 2 ஆம் கட்டம், 2015 ஆம் ஆண்டிறுதியில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் தலைமை முனையக் கட்டிடம் அதனுடன் தொடர்புடைய ஏனைய வேலைகளும் 2016 ஆண்டிறுதியில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

# முகாமைத்துவ உரையாடலும் பகுப்பாய்வுகளும் தொடர்ச்சி.

### 3) ப.ச.வி மற்றும் ம.இ.ச.வி ஆகியவற்றில் விடுதிகள் மற்றும் கூட்டிணைந்த சொத்துக்களின் அபிவிருத்தி

ப.ச.வி நிலையத்தில் விடுதிகள், பொழுதுபோக்கு நிலையம், வணிக மையம் மற்றும் அடுக்குமாடி வாகன தரிப்பிடம் மற்றும் ம.இ.ச.வி நிலையத்தில் விடுதி, கோல்ப் திடல், தீர்வை விலக்கு கடைத்தொகுதிகள் மற்றும் பொழுதுபோக்கு நிலையம் போற்வற்றுக்காக முதலீடு செய்தல் நிர்மாணிப்பு மற்றும் கொண்டு நடாத்துவதற்காக 2013 நொவெம்பர் 13 ஆந் திகதி இலங்கையில் இருந்த பொதுநலவாய வர்த்தக மாநாட்டில் CHEC உடன் புரிந்துணர்வு ஒபப்ந்தம் கைச்சாதிடப்பட்டது.

இந்த புரிந்துணா்வு ஒப்பந்தம் 6 மாதங்களுக்கு செல்லுபடியானது என்பதுடன் அக்கால பகுதிக்குள் CHEC நிறுவனத்திற்கு ப.ச.வி கவனத்திற்கமைய விவரங்களடங்கிய முன்மொழிவை கையளிக்கப்பட முடிவதுடன் அதற்குப் பின்னர் இதனை நடைமுறைமுறைப்படுத்துவதற்கு வணிக மாதிரி முடிவுசெய்யப்படும். பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் விடுதி பல்வேறு வகையிலான உல்லாசப் பயணிகளுக்குப் பொருந்தும் வகையில் 250 அறைகளினால் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்குள் மாநாடுகளை நடாத்தும் வசதிகள், விரிவுரை மண்டபங்கள் கேடிக்கை நிலையங்கள் என்பன உள்ளடக்கப்படும். உல்லாசப் பயணிகள் மற்றும் பயணிகளுக்காக பொருட் கொள்வனவு வசதிகளை வழங்குவதற்காக வருகைத்தரும் முனையத்தின் முன்நிலையில் புதிதாக பெற்றுக்கொண்ட காணிப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட வணிக மையம் 10,000 சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்டது. முனையம் மற்றும் இந்த வணிக மையத்தினை தொடர்படுத்தும் பிரவேசமும் நிர்மாணிக்கப்படும்.இந்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு ஐ.அ 400 மில்லியன் டொலர்களாகும்.

### 4) ம.இ.ச.வி இன் புதிய விமானத்தள வசதிகளை தரமுயர்த்துதல் மற்றும் விமான கூடங்களின் பழுதுபார்த்தல்கள்

ம.இ.ச.வி வெற்றிகரமாக செயற்பாடுகளை ஆரம்பித்ததன் 2013 செப்தெம்பர் 06 ஆந் திகதி அந்த விமானநிலையத்தின் MRO வசதிகள் நிர்மாணித்தல் மற்றும் விமானதளங்களை மேம்படுத்தும் நோக்கில் சைனா ஹாபர் இன்ஜினியரிங் கம்பனியுடன் உடன்படிக்கை மேற்கொண்டது. இக்கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் விமானங்கள் தொடர்பான ஆராய்ச்சியை மேற்கொண்டு பிராந்திய வர்த்தக செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக அது இயலுமைகளால் நிறைவுபெற்ற MRO தொழிற்பாட்டாளருக்கு கையளிக்கப்படும். இந்த கருத்திட்டத்தின் கீழ் புதிய விமானசரக்கு ஏற்றிடம், புதிய MRO வசதிகள் துரிதமாக வெளியேறும் நடையோடு பாதைகள் மற்றும் சமாந்தர நடையோடு பாதையின் பகுதி நிர்மாணிக்கப்படும். அது 18 மாதங்களால் நிறைவு செய்வதற்கு இருப்பதுடன் மதிப்பிடப்பட்ட செலவு ஐ.அ. டொலர் 80 மில்லியன்களாகும்.

### 5) ப.ச.வி. இற்காக புதிய ATM தொகுதி

தற்போதுள்ள ATM தொகுதியின் கணினி வன்பொருள் வழக்கொழிதல்,வவ அது விமான பயணங்களின் திட்டமிடல் மாதிரியுடன் (Flight Plan) ஒத்தியல்பு இல்லாத பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காக ப.ச.வி.இன் 2014 ஆண்டாகும்போது ATM தொகுதியை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அது புதிய ICAO விமானங்கள் பயணங்களின் திட்டமிடல்களின் மாதிரியிற்கு பொருந்துமாக இருப்பதுடன் ADS-B ஒருங்கிணைக்கும் இயலுமையாகும். அது AMHS, AFTN காலநிலைத் தரவுகளை ஒருங்கிணைக்கும் சாத்தியம் மற்றும் ADC சாத்தியங்களினாலானதுடன் விமானங்களின் அவதானிப்பு நடவடிக்கைகள் மற்றும் கையாளுதல் மேம்படுத்துவதற்கு உதவியாக இருக்கும்.

### 6) AIS-AIM மாற்றலின் பிரதான நோக்கம

- உலகளாவிய சிவில் விமானசேவைகளின் பாதுகாப்பை அதிகரித்தல்
- பாரம்பரிய தயாரிப்பு மையமாக இருக்கும் AIS தொழிற்பாடுகளுக்குப் பதிலாக தரவு மையமாக AIM தொழிற்பாட்டை மேம்படுத்துவதனூடாக வானோடல் தரவுகளின் நிலை அதிகளவில் மேம்படுத்த முடியும்.
- AIM செயல்படுத்தப்பட்டதும், தரவுகளின் பரிமாற்றம் மிகவும் வினைத்திறன் மற்றும் விளைவு பெருக்கமாக இருப்பதுடன் அதன் மூலம் வானோடல் தரவுகள் அதிகமானளவு பாதுகாப்பாக கையாளும் இயலுமை உண்டு.
- சுற்றாடலுக்கு முறையற்ற விதத்தில் தீங்கு விளைவிக்காத மற்றும் பொருளாதார கண்ணோட்டத்தினால் பிரயோகிக்கக்கூடிய நிலைத்திருக்கக்கூடிய சர்வதேச சிவில் விமானசேவையை உருவாக்குதல்.

## 07) தன்னிச்சையாக சார்ந்திருக்கும் கண்காணிப்பு ஒலிபரப்பு செயல்முறைப்படுத்தல்

(ADS-B)

ரூ 225 மில்லியன்கள் மதிப்பிடப்பட்டுள்ள செலவில் 2014 ஆம் ஆண்டில் இலங்கை ADS-B ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ICAO ஆசிய பசுபிக் பிராந்திய ADS-B செயல்படுத்தும் திட்டத்துக்கேற்பவும் ரேடார்களுக்கு மேலதிக பிரிவாகவும் இலங்கைக்குள் ADS-B செயல்படுத்த வேண்டும். ஏற்கனவே கருதக்கூடிய விமானங்களின் எண்ணிக்கை ADS-B உபகரணங்களை கையாளப்படுவதனால் இலங்கையிலும் இந்த ADS-B செயல்முறைத்திட்டம் தொழில்நுட்பத்திற்குப் பிரவேசித்தல் மிக முக்கியமானது. ADS-B செயல்முறைத்திட்டம் பாவனை இலங்கையில் ATS தொழிற்பாட்டிற்கு அதிகளவு நன்மைகளை வழங்குவதனால் இதற்கு பிரவேசிக்கப்படுகின்றது. மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு, மிகவும் மேம்பட்ட சூழ்நிலை விழிப்புணர்வு, துல்லியமான நிலை மற்றும் வேகம், ஓடுபாதை ஊடுருவலை விழிப்புணர்வு விமானம், செலவு, திறன் மற்றும் குறைந்த விமானங்களை அளவு முன்னேற்றம் பாதுகாப்பு ADS-B இருந்து பெற முடியுமான நன்மைகளின் சிலவாகும்.

உத்தேச திட்டம், ப.ச.வி, ம.இ.ச.வி பிதுறுதலாகளை ரேடார் மற்றும் தொடர்பாடல் நிலையம் மற்றும் தென் மேற்கு பகுதியில் 4 ADS-B அலைவாங்கி நிலையங்கள் நிர்மாணிப்பதும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ் அனைத்து 4 இடங்களினால் தரவுகளைச் சேகரித்து குறித்த ATM தொகுதியிற்கு அனுப்புவதற்காக இரத்மலானை விமானநிலையத்தில் மத்திய பதனிடும் இடத்தை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

# முகாமைத்துவ உரையாடலும் பகுப்பாய்வுகளும் தொடர்ச்சி.

**எதிர்கால திட்டம் - தொழில்நுட்ப சவால்கள் மற்றும் அதிகரிக்கும் கேள்விக்கான தயார்படுத்தல்**

**2014 2015 2016 2017 2018 2019 2020**

**ப.ச.வி – விமான ஓடுபாதை மீண்டும் மேல்விரிப்பு கருத்திட்டம்**

- ஓடுபாதை மேல்விரிப்பு ..........
- நடையோடுபாதை மேல்விரிப்பு ..........
- ஏற்றிடம் நவீனமயப்படுத்தல் ..........
- AGL அமைப்பு ..........

**முனைய கட்டிடத்தின் விரிவாக்கம்- ப.ச.வி -**

- BHS அமைப்பு முறையுடன் சோதனையிடும் பிரதேசங்களின் மீள்உள்ளமைவு ..........
- பிணைக்கப்பட்ட களஞ்சிமொன்றின் திரும்ப இடஅமைவு மற்றும் முனையம் பகுதி விரிவாக்கம ..........
- வருகை தீர்வை விலக்கு வணிக மையத் தொகுதியின் விரிவாக்கம் ..........

**ப.ச.வி - கட்டம் 2 பகுதி 11**

- பிரதான முனையம் ..........
- பயணிகள் பாலம் (Pier )II ..........
- பயணிகள் பாலம் (Pier )III ..........
- விமான நிலைய இரயில் நிலையம் ..........
- தெற்கு ஏற்றிட நிர்மாணம் ..........
- வாகன தரிப்பிடம் மற்றும் ஏனையவை ..........

**ப.ச.வி 1 ஆவது புகலிடம் மற்றும் விற்பனை தொகுதி வாகன தரிப்பிடங்களுடன்**

- புகலிடம் ..........
- வணிக மையம்-அடுக்கு மாடி வாகன தரிப்பிடம ..........
- அடுக்கு மாடி வாகன தரிப்பிடம் ..........

**மத்தல**

**ம.இ.ச.வி விமான MRO**

- ஏற்றிடம ..........
- விமான கூடாரம ..........

**மத்தல ஓய்வுநேர வசதிகள்**

- புகலிடம் ..........
- கோல்ப் மைதானம் மற்றும் பொழுதுபோக்கு நிலையம் ..........
- வணிக மையம் ..........

**மத்தல கட்டம் 2**

முனைய விரிவாக்கம் ..........

புதிய பயணிகள் ஏற்றிடம் ..........

ப.ச.வி. புதிய விமானப் பயண முகாமை அமைப்புமுறை ..........

AIS/AIM ..........

AADS – B ..........

## விருதுகளும் கௌரவங்களும்

### தேசிய வர்த்தக சிறப்பு விருதுகள்

இலங்கை வர்த்தக சபையால் 2013 நொவெம்பர் 27 ஆம் திகதி நடாத்தப்பட்ட 2013 தேசிய தொழில்முயற்சிகள் சிறப்பு விருது வழங்கும் வைபவத்தில் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியிற்கு விருது வழங்கப்பட்டது. நாம் அரச சேவை பிரிவுகளின் கீழ் போட்டியிடடோம். தங்க விருதினை இலங்கை துறைமுக அதிகார சபை வென்றது.




விமான நிலைய மற்றும் விமான வேவைகள் நிறுவன தலைவர் தேசிய வியாபார சிறப்புத்தன்மை விருதுகள் 2013 இல் அரசு சேவைகள் துறையின் கீழ் வெள்ளி விருதை பெறுகின்றார்.




தேசிய வியாபார சிறப்புத்தன்மை விருதுகள் 2013 இல் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவன தலைவர் மற்றும் குழுவினர்

### தாபன பொறுப்புக்களின் பின்தொடர் மதிப்பீடு

வி.வி.சே.க, 2012 மற்றும் 2013 என்ற இரு வருடங்களில் செயற்பாடுகளை ஆராய்ச்சி செய்து STINH Consultants மூலம் STING தாபன பின்தொடர் பொறுப்புக்கள் தொடர்பான மதிப்பீடுகளில் “வெண்கல” மதிப்பாய்வு 2014 ஆம் ஆண்டில் வழங்கியுள்ளது. ஒருமுகப்படுத்தப்பட்ட அணுகுமுறை, நீண்டகால நிலைப்பாடு மற்றும் ஆளுகை தொடர்பான முயற்சிக்காக தேவைப்படுகின்ற 6 காரணிகள் மதிப்பிடுவதன் மூலமே இந்த கொள்கை பயன்படுத்தப்படும். (2014 ஆம் ஆண்டில் ஈராண்டுக்கு ஒருமுறை பெற்றுக்கொண்ட சுட்டெண் 45.85 ஆகியதுடன் 2012 ஆம் ஆண்டில் அது 32.45 ஆகும்)


2014 Bronze
For The Greater Good
Certificate Number 150405
This is to certify that the Corporate Accountability Rating for
Airport and Aviation Services
has been found to conform to the standard of
BRONZE
This assessment recognizes the level of the corporation's preparedness for effective corporate accountability

1st January 2014 — Original Certificate Date
Colombo — Place Of Issue
1st January - 31st December 2014 — Period Of Issue

This certificate is based on an independent evaluation of the company's corporate accountability performance on which a detailed report is available.

STING Consultants

Tiara Anthonisz
-Head of Strategic Corporate Responsibility-

Ruchi Gunewardene
-Chief Executive Officer-

- Issued by STING Consultants, 25/15, Pepiliyana Rd, Nugegoda, Sri Lanka. -

STING கூட்டுறவு பொறுப்பு சுட்டெண் தொடர்பில் வழங்கப்பட்ட சான்றிதழ்

# நிதி மீளாய்வு

## செயல்திறன் கண்ணோட்டம்

ப.ச.வி. வளர்ச்சியடைந்த சர்வதேச தொழில் வாரியான தொகுதி மற்றும் ம.இ.ச.வி தொடர்பாக புதிய விமானப் பயணங்கள் கட்டமைப்பு திறப்பதனூடாக 2013 நிதியாண்டு விமான நிலைய மற்றும் விமானசேவைகள் நிறுவனத்திற்கு வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஆண்டாக இருந்தது. அதன் பெறுபேறாக எமது முக்கிய விமானப் பயண எண்ணிக்கை ஆவணங்களின் சகல பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளின் சிறப்பான செயலாற்றுகை பதிவு செய்வதற்கு எமக்கு முடியுமாக இருந்தது.

கம்பனி முன்னர் காணப்பட்ட சிறப்பான வரிகளின் பின்னர் தேறிய இலாபம் ரூபா 0.82 பில்லியன் விஞ்சியது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது இலாபம் 30% வளர்ச்சியாகும். அவ்வாறு இருப்பினும் வி.வி.சே.க. வட்டி, வரி, பெறுமதித் தேய்வு, மற்றும் கடன்தீர் முன் சம்பாத்தியங்கள் (EBITDA) ரூபா 4,851 மில்லியன்கள் ஆனதுடன் அது முன்னைய வருடத்துக்கு நிகராக 15% குறைவாகும்.

2013 ஆம் ஆண்டிற்குள் இலங்கையின் மற்றும் பிராந்தியத்தில் காணப்பட்ட உறுதியான பொருளாதார மீளுயுயர்வு மற்றும் ப.ச.வி. மற்றும் ம.இ.ச.வி. மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி காரணமாக வி.வி.சே.க நிதியியல் செயலாற்றுகை வளர்ச்சியடைந்தது.

சிக்கண விமான சேவைகளின் அதிகரிப்பு, ப.ச.வி இன் பயணிகள் அளவு அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகும். சிக்கன விமானசேவைகளின் பயணிகள் போக்குவரத்து 52% அதிகரித்து காணப்பட்டன. அதன் மூலம் மீளாய்விற்குட்படும் வருடத்தின் மொத்த பயணிகள் போக்குவரத்து மூலம் 15% பிரதிநிதிப்படுத்தப்படும். இந்த அதிகரிப்பு காரணமாக முழு சேவை விமானசேவைகளின் முன்னைய வருடத்திலும் பார்க்க 2% குறைவடைந்ததை சரிப்படுத்தப்பட்டது. எவ்வாறிருப்பினும் முழுநேர விமானசேவைகளில் பயணிகள் போக்குவரத்து பெருமளவில் பங்களிப்பு செய்ததுடன் ப.ச.வி. பயணிகளின் போக்கவரத்து 85% அதன் மூலம் பங்களிப்பு செய்யப்படும்.

மீளாய்வு ஆண்டின் ப.ச.வி புதிய 04 விமானசேவைகளை ஏற்றுக் கொண்டதுடன் 09 புதிய நகரங்களுடன் உறவுகள் கட்டியெழுப்பப்பட்டன.

## புரள்வு

வி.வி.சே.க மீளாய்விற்குட்படும் வருடத்துக்குள் ரூபா 12.1 பில்லியனான மொத்த புரள்வை பதிவுசெய்தது. இது முன்னைய வருடத்துக்கு நிகராக 9% ஆன வளர்ச்சியாகும். இதற்காக மொத்த வருமானத்தில் 76% அளவு வானூர்தி மூலமல்லாத வருமானங்கள் முன்னைய வருடத்திலும் பார்க்க 15% அதிகரிப்பே இதற்கு முக்கியமாக பங்களிப்புச் செய்தது.

வி.வி.சே.க 4 வருடங்கள் பூராவும் மொத்த புரள்வு வளர்ச்சி பினவருமாறு மீளாய்வுக்கட்படும்.

மீளாய்வுக்குட்படும் காலத்திற்குள் வி.வி.சே.க புரள்வுக்காக பாரியளவு பங்களிப்பைச் செய்தது, முன்னைய வருடத்தில் 21% ஆக இருந்து இந்த வருடத்தில் கம்பனியின்

### AASL இன் ஒன்றுதிரட்டிய வரவின் அபிவிருத்தி




புரள்விலிருந்து 26% பிரதிநிதிப்படுத்தியது கப்பலேற்றும் வரிகளாகும். 0.07% சிறு வளர்ச்சியுடன் 21% ஆக பதிவுசெய்யப்பட்ட சலுகை வருமானம் (Concession Income)

### நிறுவனத்தின் வருமானக் கட்டமைப்பு 2013




வி.வி.சே.க புரள்வுக்காக இரண்டாவது பாரிய பங்களிப்பைச் செய்தது. வாடகை வருமானங்கள், தரையிறக்கம், தரிப்பிட வருமானங்கள் மற்றும் மேலெழுகை வருமானங்கள் புரள்வுக்காக முக்கியமான பங்களிப்புச் செய்த வேறு காரணிகளாக இருந்தவையாகும். அவற்றின் பங்களிப்பின் முறையே 17%, 16% மற்றும் 6% ஆகும். அவற்றின் மூலம் முறையே 11%, 11% மற்றும் 19% பங்களிப்பை பதிவு செய்தது. பிரதான வருமான மூலகங்களாக உள்நாட்டு தரையிறக்கம் மற்றும் தரிப்பிட வருமானங்களாக இருந்தன. முன்னைய வருடங்களில் மிதக்கும் விமானங்களினால் பெற்ற இலாபங்களை கைவிடுவதே இதற்கு காரணமாக அமைந்தது

## எமது மொத்த செயற்பாட்டு வருவாயில் 50மூ வெளிநாட்டு செயற்பாடுகள் மூலம் பெறப்பட்டவையாகும். 2013 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட ரூ. 6.074 பில்லியன் அல்லது அ.டொ. 47 மில்லியன் வெளிநாட்டு செயற்பாட்டாளர்கள் தீர்வை விலக்கு மூலம் பெற்றுக் கொண்டதன் மொத்த பெறுமதியாகும்.

நாம் வருமான விருத்திக்கு காரணமாக இருந்த மாற்றங்களை மேலும் கண்காணிப்பதாயின், தரையிறங்கும் மற்றும் தரிப்பிட வருமானத்தின் பிரதான சுட்டளவின் ஆகக்கூடிய மேலெழுகை நிறை (MTOW); 2012 காணப்பட்ட 3,316,795 மெ.தொ இலிருந்து 2013 ஆம் ஆண்டில் 3,561,167 மெ.தொ.வரை உயர்வடைந்திருந்ததுடன், இவ்வருடத்தில் தரையிறங்கும் மற்றும் தரிப்பிட வருமானம் 7% இனால் உயர்வடைந்தது. அத்துடன் பறத்தல் அசைவுகள் 15% வரை பறத்தல்களினால் (23,835 இலிருந்து 27,529 வரை) உயர்வடைந்தது. எவ்வாறிருப்பினும் வானத்தில் உயரத்தில் பறக்கின்ற விமானங்கள் (Over fling Flights) மூலம் பெற்ற இலாபத்தின் அதிகரிப்பு இந்த பயணத்தடவைகளின் வளர்ச்சியிலும் பார்க்க குறைவடைவதற்குக் காரணம் அங்த வருமானம் வானத்தில் உயரத்தில் பறக்கின்ற விமானங்களின் ஆகக்கூடிய மேலெழுகை நிறையின் அடிப்படையில் ஆரம்பத்தில் இனங்கண்டு கொண்ட மட்டங்களின் மீது மாற்றமடைவதனாலேயாகும்.

### வெளிநாட்டு செயற்பாடுகளில் இருந்து ஈட்டிய வருமானம

மொத்த செயற்பாட்டு வருமானத்தில் 50% வெளிநாட்டு செயற்பாடுகள் மூலம் பெறப்பட்டவைகளாக இருப்பதுடன், அது ரூ. 6,074 பில்லியன்களாகும். (அ.டொ. 47 மில்லியன்கள்) இது அறவிடப்பட்ட நிதி அலகினை தவிர்க்கும்போது, வெளிநாட்டு விமானசேவைகள் மற்றும் வெளிநாட்டு தீர்வைகளற்ற தொழிற்பாட்டாளர்களினால் உழைக்கப்பட்ட மொத்த வருமானமாகும். இந்த ரூ. 6.074 பில்லியன்கள் வருமானத்தில் ரூபா 1.3 பில்லியன் அமெரிக்கா டொலர்களாக இருந்ததுடன் மீதிப் பணம் இலங்கை ரூபாவால் உழைக்கப்பட்டது. இத்தாலி, இந்தியா, ஐக்கிய அரபு ராஜ்ஜியம், கட்டார் மற்றும் சிங்கப்பூர் 2 அமெரிக்கா டொலர்களிலும் (ரூபா 250 மில்லியன்கள்) பார்கக உழைத்துத்தந்த ஆகக்கூடிய 5 நாடுகளாகும். ஐக்கிய அரபு ராஜ்ஜியம்,(32%) கட்டார் (20%) மற்றும் ஹொங்கொங் (13%) மூலம் ஒரு மில்லியன் அமெரிக்கா டொலர்களிலும் பார்க்க உழைக்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டு புரள்வில் இரட்டை பெறுமதி வளர்ச்சியை பதிவு செய்தது. எமது நீண்டகால வாடிக்கையாளர்களான Emirates, Qatar Airways and Cathay Pacific விமானங்கள் குறித்த 3 நாடுகளிலிருந்து வந்தடைந்த பயணத் தடவைகளின் எண்ணிக்கை அதிகரித்ததுடன் வானத்தில் பறந்த பயணத் தடவைகளை உயர்வே வருமதிகள் இரட்டிப்பாகியமைக்கு பிரதானமான காரணமாகும். மேலும் வருடத்துக்குள் British Airways சேவைகளை மீள ஆரம்பித்ததுடன் ஐக்கிய இராச்சியம் மேற்குறிப்பிட்ட வெளிநாட்டு வருமானங்களைப் பெற்றுக் கொடுக்கின்ற 10 நாடுகளின் பட்டடியலில் ஒன்றிணைந்தது.

இதுவரை வெளிநாட்டு தொழிற்பாட்டு வருமான அதிகரிப்பில் ஆகக்கூய 10 நாடுகளில் உள்ளடக்கப்படாத கொரியா, துருக்கி மற்றும் அவுஸ்திரேலியா போன்ற பாரம்பரியமற்ற சந்தைகளை நோக்கி இடமாற்றப்பட்டதே இந்த வருடத்துக்குள் காணக்கூடிய முன்னேற்றமாக இருந்தது. கொரியன் எயார்லைன்ஸ் மற்றும் டர்கிஷ் எயார்லைன்ஸ் இந்நாட்டிற்கு சேவைகளைத் தொடங்குதல், மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட கொன்டாஸ் விமானசேவை, இலங்கை வான் மையத்திற்கு அப்பால் மேற்கொள்ளப்படும் பயணத்தடவைகள் அதிகரித்தல் போன்றவற்றினால் அவுஸ்திரேலியாவிடமிருந்து கிடைக்கும் வெளிநாட்டு தொழிற்பாட்டு வருமானம் அதிகரித்தமையே இதற்காக பிரதான காரணமாக அமைந்தது. 2012 மற்றும் 2013 வருடங்களில் அதிகளவு தொழிற்பாட்டு வருமானத்தை பெற்றுக்கொடுத்த 20 நாடுகள் மற்றும் அவற்றின் பங்களிப்பு, முறையே மற்றும் ஏற்பட்ட விகிதாசார அபிவிருத்தியை 40 ஆவது பக்கத்தின் உள்ள அட்டவணையில் காட்டியுள்ளது.

### தொழிற்பாட்டுச் செலவுகள்

2012 இல் இருந்த ரூபா 8.0 பில்லியன்களிலிருந்து 2013 ஆம் ஆண்டில் தொழிற்பாட்டுச் செலவு ரூபா 9.8 பில்லியன்கள் வரை 23% இனால் அதிகரித்தது. இது ம.இ.ச.வி வர்த்தக தொழிற்பாடுகள் ஆரம்பத்தின் பின்னர் இருந்த கம்பனியின் தேய்மான ஒதுக்கீடு ரூபா 1.7 இலிருந்து ரூபா 1.2 பில்லியன் ம.இ.ச. விமான நிலையம் சார்பாக உட்கிரகித்தன் பின்னர் ஏற்பட்டதாகும். வேறு கருத்திட்ட நிர்வாகச் செலவு, தொடக்க தின வைபவம் செலவு மற்றும் விளம்பர பிரச்சார செலவுகள் உள்ளடங்களாக அச்சடித்தல், எண்ணியல் மற்றும் சமுக ஊடக செலவுகள் அதிகரித்தமையே ம.இ.ச.வி. இன செலவுகள் அதிகரித்தமைக்கு காரணிகளாகும்.

வருடத்துக்குள் பதவியணியினர் செலவுகள் 2012 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 3.5 பில்லியன்களிலிருந்து ரூபா 4.2 பில்லியன்கள வரை 20% இனால் அதிகரித்தது. பொதுநலவாய தேசத்தலைவர்களின் மாநாட்டு காரணமாக மேற்கொள்ளப்பட்ட சீரமைப்பு காரணமாக அரை வருடமாகும்போது பராமரிப்பு மற்றும் பேணுதல் செலவுகள் அதிகரித்தமை, வருடத்துக்குள் செலவுகள் அதிகரித்தமைக்கு காரணமாக இருந்தது.

செலவினம் - 2013



# நிதி மீளாய்வு தொடர்ச்சி.

செலவினம் - 2012




## நிகர நிதிச் செலவு

நிதியியல் செலவு பிரதானமாக, நீண்டகால கடன் எடுப்பனவுகள் மற்றும் கடன்கள் மாற்றலின் மீது நாணய பெறுமதி இழப்பு ஆகிய இரண்டு பிரதான காரணங்களால் ஏற்படுகின்றது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது முன்னைய வருடத்தின் பரிமாற்ற நட்டமான ரூபா 1.4 பில்லியனுக்கு எதிராக வி.வி.சே.க இந்த வருடத்துக்குள் கடன்கள் மாற்றத்தின் மீது ரூபா. 1.7 பில்லியன்கள் பரிமாற்ற இலாபத்தை ஏற்படுத்திக் கொண்டது. வருடத்துக்குள் காணப்படும் ப.ச.வி உடன் தொடர்புடைய கடன் தொகையில் வட்டியான ரூ. 196 மில்லியன்களுக்கு ம.இ.ச.வி இன் கடன் தொகையின் வட்டியான ரூபா 377 மில்லியன்களை சேர்த்ததன் காரணமாக கடன்தொகை வட்டி முன்னைய வருடத்துக்கு நிகராக 94% இனால் அதிகரித்தது.

## இலாபகரமான தன்மை

ம.இ.ச.வி இன் வர்த்தக மாதிரி வளர்ச்சியில் காணப்பட்டது. விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனியானது, அதன் வரலாற்றில் உயர் வரிக்கு முன் இலாபமான ரூபா 4.7 பில்லியன்கள் மற்றும் வரிக்கு பிந்திய இலாபமான ரூபா 3.6 பில்லியன் இலாபமொன்றினை

இலாபம் ரூ. மில்




## வெளிநாட்டு செயற்பாடுகளில் ஈட்டிய வருமானம்

| | 2013 | | 2012 | | வருமான வளர்ச்சி | | வருமானம் மீதான நிலை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாடு | வருமானம் அ.டொ | செயற்பாட்டு வருமான பங்கு (%) | வருமானம் அ.டொ | Share of Operational Revenue (%) | வித்தியா | % | 2013 | 2012 |
| இத்தாலி | 11,228,609 | 12.0 | 11,924,962 | 14.0 | (696,353) | (0.06) | 1 | 1 |
| இந்தியா | 10,206,471 | 11.0 | 9,576,807 | 11.0 | 629,663 | 0.07 | 2 | 2 |
| ஐ.அ.இ | 10,178,851 | 11.0 | 7,685,466 | 9.0 | 2,493,384 | 0.32 | 3 | 3 |
| கட்டார் | 2,825,100 | 3.0 | 2,349,972 | 3.0 | 475,128 | 0.20 | 4 | 4 |
| சிங்கப்பூர் | 2,219,071 | 2.0 | 2,034,128 | 2.0 | 184,943 | 0.09 | 5 | 5 |
| ஹொங்கொங் | 1,740,484 | 2.0 | 1,545,844 | 2.0 | 194,639 | 0.13 | 6 | 6 |
| மலேசியா | 1,550,743 | 2.0 | 1,412,015 | 2.0 | 138,728 | 0.10 | 7 | 7 |
| சவூதி அரேபியா | 1,049,414 | 1.0 | 1,404,352 | 2.0 | (354,938) | (0.25) | 8 | 8 |
| தாய்லாந்து | 794,305 | 1.0 | 813,897 | 1.0 | (19,591) | (0.02) | 9 | 9 |
| இங்கிலாந்து | 769,592 | 1.0 | 384,691 | 0.5 | 384,901 | 1.00 | 10 | 15 |
| ஓமான் | 725,006 | 1.0 | 641,161 | 0.8 | 83,844 | 0.13 | 11 | 10 |
| இந்தோனேசியா | 499,550 | 0.5 | 553,180 | 0.7 | (53,630) | (0.10) | 12 | 11 |
| கொரியா | 418,480 | 0.4 | 1,552 | 0 | 416,928 | 268.57 | 13 | 39 |
| துருக்கி | 414,970 | 0.4 | 1,095 | 0 | 413,874 | 377.85 | 14 | 42 |
| குவைட் | 391,146 | 0.4 | 464,673 | 0.5 | (73,527) | (0.16) | 15 | 13 |
| ஜோர்தான் | 347,584 | 0.2 | 434,824 | 0.5 | (87,240) | (0.20) | 16 | 14 |
| அவுஸ்திரேலியா | 220,973 | 0.2 | 83,020 | 0.1 | 137,953 | 1.66 | 17 | 20 |
| சீனா | 206,726 | 0.2 | 159,904 | 0.2 | 46,821 | 0.29 | 18 | 17 |
| தென்னாபிரிக்கா | 182,700 | 0.2 | 184,192 | 0.2 | (1,492) | (0.01) | 19 | 16 |
| மாலைதீவு | 147,371 | 0.2 | 102,786 | 0.1 | 44,585 | 0.43 | 20 | 19 |
| ஏனையவை | 539,151 | 0.5 | 1,233,343 | 1 | | | Not Ranked | |
| | **46,656,296** | 50 | **42,991,866** | 51 | | | | |

### காசுப்பாய்ச்சல்

தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தொழிற்படு இலாபம் முன்னைய ஆண்டில் காணப்பட்ட ரூபா 6052 மில்லியன்கள் இலிருந்து ரூபா 5,290 மில்லியன்கள் வரை குறைவடைந்தது. மேலும் தொழிற்படு மூலதனம் குறைவடைந்ததன் காரணமாக நிதிப்பாய்ச்சல்கள் மேலும் மேம்படுத்தப்பட்டதுடன் அதன் பலனாக ரூபா 5,849 தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் காரணமாக எதிர்மறை நிதிப்பாய்ச்சல் உருவாகியது. மூலதன செலவுகளாக நிதி வெளிப்பாய்ச்சல் ஒட்டம் ரூபா 6,378 ஆகியதுடன் அதில் ரூ. 5400 மில்லியன்கள் ம.இ.ச.வி தொடர்பாக செலவிடப்பட்டது. (2012 ஆம் ஆண்டில் ரூ. 17,449 மில்லியன்கள் ஆகும். அதில் ரூ. 16,355 மில்லியன்கள் ம.இ.ச.விமான நிலையத்திற்காகும்) 2012 ஆம் ஆண்டில் இருந்த ரூபா 222 மில்லியன்கள் தேறிய அதிகரிப்பிற்கு நிகராக வருடத்துக்குள் காசு மற்றும் காசு சார்ந்தவைகளின் நிகர குறைவு ரூபா 394 மில்லியன்களாகும்.

தொழிற்பாடுகள் மூலம் நிதி உருவாக்குவதற்குத் தேவையான திரவச்சொத்துக்கள் கம்பனிக்கு சொந்தமாகயிருப்பதுடன் தொழிற்படு மூலதனம், மூலதன செலவு, பங்கிலாபங்கள் மற்றும் நியதிச்சட்ட கொடுப்பனவுகளின் தொழிற்பாடுகளை கொண்டு நடாத்துவதற்கு நிதி போதுமானதாக இல்லை.

### மூலதன கட்டமைப்பு

விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனியின் மூலதன கட்டமைப்பினை பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பங்கு மூலதனம் | ரூ. 20 மில்லியன்கள் |
| ஒதுக்கங்கள் | ரூ. 7,421 மில்லியன்கள் |
| பிடித்துவைத்த சம்பாத்தியங்கள் | ரூ. 37,317 மில்லியன்கள் |

நிறுவனத்தின் மூலதனக் கட்டமைப்பு ரூ. மில் இல்




கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது பிடித்துவைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் 95% இனால் வளர்ச்சியடைந்தது. 2012 ஆண்டுடன் ஒப்பிடும்போது நீண்டகால கடன் பொறுப்புக்கள் 5% இனால் குறைவடைந்துள்ளது.

### நெம்புகோள் விகிதம்

இந்த விகிதாசாரம் மொத்த மூலதனத்திற்கு நிகராக வட்டியிடனுனான நீண்ட கால கடன்களைப் பெற்றுக் கொள்ளும் பகுதியிற்கிணங்க கணக்கிடப்படுவதுடன் இதன் மூலம் நிறுவனத்தின் நிதி தாங்கிக் கொள்ளும் ஆற்றலை வெளிப்படுத்தும். இந்த விகதாசாரம் மூலம் கம்பனியின் அதி நெம்புகோள் நிலைமைகள் இருப்பதை காணக்கூடியதாக இருப்பினும் இலங்கை அரசினூடாக ப.ச.வி. மற்றும் ம.இ.ச.வி அபிவிருத்தி செய்வதற்காக தங்க பவுன் பாதுகாப்பதன் கீழ் இந்த கடன்தொகை பெற்றுக் கொடுள்ளது.

நிறுவன தொழிற்படு மூலதனம் ரூ. மில்




### பங்குதாரர்களின் வருமான உச்சக்கட்டம்

#### 2013 ஆம் ஆண்டுக்கான பெறுமானச் சேர்க்கை

2013 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த நிதி வருடத்திற்காக ரூபா 11.4 பில்லியன் மொத்த பெறுமதியை உருவாக்குவதற்கு முடியமாக இருந்ததுடன் அது முன்னைய வருடத்துக்கு நிகராக 11% அதிகரிப்பாகும்.

மொத்த பெறுமதியினை உருவாக்கிய விதம், அது இலங்கை அரசு, ஊழியர்கள் மற்றும் கடன்கள் மற்றும் பங்கு மூலதன தயாரிப்பாளர்கள் இடையே பங்கிடும் முறையை பின்வரும் பிரகடனத்தில் காட்டப்பட்டுள்ளது. அதேபோல பெறுமானத்தேய்வு மற்றும் ஒதுக்கங்களுக்கு ஏற்றவாறு மீள முதலிடுவதற்காக பிடித்து வைக்கப்பட்ட பகுதியும் காட்டப்பட்டுள்ளது.

# நிதி மீளாய்வு தொடர்ச்சி.

| | 2013 Rs.000 | % | 2012 Rs. 000 | % |
|---|---|---|---|---|
| வருமானங்கள் | 12,219,411 | | 10,687,381 | |
| ஏனைய வருமானங்கள் | (109,728) | | 426,332 | |
| நிதி வருமானம் | 2,428,407 | | 704,524 | |
| கணிப்பீட்டு அனுமான மாற்றங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு | 170,790 | | 205,038 | |
| | 14,708,880 | | 12,023,275 | |
| நிர்வாக நிறுவல் மற்றும் சந்தைப்படுத்தல் செலவினம் | (3,297,121) | | (1,699,654) | |
| **பெறுமதி சேர்க்கப்பட்டது** | 11,411,759 | | 10,323,621 | |
| | | % | | % |
| **சேர்கப்பட்ட பெறுமதி பகிர்ந்து வழங்குதல்** | | | | |
| ஊழியர்களுக்கு வேதனமும் ஏனைய நன்மைகள் | 4,170,302 | 37% | 3,514,655 | 34% |
| அரசாங்கத்திற்கு வரிகள் | 1,192,121 | 11% | 1,121,112 | 11% |
| பங்குதாரர்ளுக்கு பங்கிலாபங்கள் | 500,000 | 4% | - | 0% |
| கடன் மூலதனம் வழங்கியோருக்கு மீள் கொடுப்பனவு | 573,574 | 5% | 1,734,681 | 17% |
| தொழிலில் பிடித்து வைத்தல் தேய்மானங்கள் | 1,751,423 | 15% | 1,010,595 | 10% |
| தொழிலில் பிடித்து வைத்தல ஒதுக்கங்கள் | 3,224,340 | 28% | 2,942,579 | 28% |
| | 11,411,759 | 100% | 10,323,621 | 100% |

பெறுமதி சேர்ப்புகளின் விநியோகம் 2013




பெறுமதி சேர்ப்புகளின் விநியோகம் 2012



# மனித வளங்கள் முகாமைத்துவம்

வி.வி.சே.கம்பனியின் மனிதவள வளங்கள் பிரிவின் பிரதான நோக்காகக் கருதப்படுவது கம்பனியின் தொழிற்பாட்டு இலாபம் மேம்படுத்துவதற்கு மற்றும் தொழில் ரீதியிலான அணுகுமுறைகள் வெற்றியடையச் செய்வதற்குள்ள திறமையான மற்றும் வினைத்திறனான பதவியணியினரை கொண்டு நடாத்துவதாகும்.

## ஆட்சேர்ப்பும் தேர்ந்தெடுப்பும்

எமது ஆட்சேர்ப்பு தொழிற்பாடு அடிப்படையாக அமைவது தொழில்துறைக்கேற்ற திறமைகளுடனான மற்றும் திருப்திகரமான முறையில் பொறுப்புகள் நிறைவேற்றியிருப்பதாக எதிர்பார்க்க முடியுமான நபர்களை கண்டறிவதன் அடிப்படையிலேயாகும். எமது அடிப்படை எடுகோளாக அமைவது பயிற்சியால் மெலெழுப்பக்கூடிய திறமைகள் குறித்த நபர் மத்தியில் இருப்பின் அவர் திருப்திகரமான தொழில்சாராளாக நியமிப்பதற்குரிய இயலுமையாகும்.

ஆட்களின் திறமைகள் தொடர்பாக யதார்த்தமான மற்றும் தெளிவான கருத்தொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு இயலுமான முறையில் எம்மால் தொழில் எதிர்ப்பார்ப்பாளர்கள் பல்வேறு வித்தியாசமான அணுகுமுறைகள் மூலம் பரிசோதனைக்குட்படுத்தப்படும். அவ்வாறு செய்யப்படுவது தகைமையற்ற ஆட்கள் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமைக்கு உறுதிபடுத்துவதற்கேயாகும். இந்த பரிசோதனையில் எழுத்தாற்றல் பரீட்சை, பௌதீக பரீட்சை குரல் மற்றும் வேறு தகைமைகளையுடைய பரீட்சைகள் உள்ளடக்கப்படுவதுடன் அனைத்து தேர்வுநாடிகளுக்காக மருத்துவ பரீசோதனைக் கட்டாயமாக நடாத்தப்படும்.

நம்மால் ஊடகங்களினூடாக பகிரங்கப்படுத்தப்படுகின்ற தொழில் வெற்றிடங்களுக்கு கிடைக்கும் உயர் பதில்குறிப்புகள் மூலம் காட்டப்படுவது வி.வி.சே.கம்பனியில் பலர் தொழிலாற்றுவதற்கு பொருத்தமான இடமாக கருதப்படுவதனாலேயாகும்.

வி.வி,சே.க மூலம் வான் பயண கட்டுப்பாடு, தீயணைப்புச் சேவைகள், விமானசேவை உத்தரவாதம், வானோடல் எந்திரவியல், பயணிகளின் வசதிகளை ஏற்படுத்துதல், விமான நிலையத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, மற்றும் பராமரிப்பு போன்று நிதி, மனித வள முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சட்டம் போன்ற பல்வேறு துறைகளில் திறமைகளைக் கொண்ட ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஆட்சேர்ப்பு மற்றும் தேர்ந்தெடுப்பதைப் போன்று எமது மனிதவள பயிற்சி மற்றும் அபிவிருத்திக்காகவும் நாம் பாரிய நிதி முதலிடுகின்றோம். அது எமது செலவுத் திட்டத்தில் பாரிய பகுதியாக அமைந்துள்ளது.

வருடத்துக்குள் எமது ஊழியர்படை 3,674 வரை 4% ஆல் அதிகரிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புகள் புதிய ஆட்சேர்ப்புகள் 221 இனால் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் வருடத்துக்குள் பதவி விலகிச் சென்ற எண்ணிக்கை 21



ப.ச.வி. மற்றும் ம.இ.ச.வி முன்னணி ஊழியர்கள். ம.இ.ச.வி ஊழியர்கள் 2013 ஆண்டு அவர்களுக்கு வடிவமைக்கப்பட்ட புதிய சீருடையினை அணிந்து காணப்படுகின்றனர்.

ஆகும். புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்கள் மற்றும் வருட இறுதியில் தொழிற்படையிடையிலான விதிதாசாரம் 6% ஆகும். (2012 ஆம் ஆண்டு 419 ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டதுடன். 2012 மற்றும் 2013 மொத்த ஆட்சேர்ப்புகள் வருட இறுதி தொழிற்படையின் விகிதாசாரம் 17% ஆகும்) சேவையிலிருந்து விலகுவதனை நிரப்புவதைப்போன்று தொழில் வரச்சியைப் பேணுவதற்கும் ம.இ.ச.வி போன்ற கம்பனியின் புதிய கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்கும் இந்த புதிய ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

## குழுக்களை கட்டியெழுப்பும் செயற்பாடுகள்

கம்பனியின் வெற்றிக்கு சேவைக் குழுக்கள் மிகவும் உதவியாக இருப்பதுடன் நாம் எமது ஊழியர்கள் மத்தியில் குழுக்கள் உணர்வுகள் மேம்படுத்துவதில் செலாற்றுகின்றோம். குழு உணர்வுகள் அபிவிருத்தி செய்யும் செயற்பாட்டுக்காக வேறொரு சுற்றாடலில் வெளிவாரி பயிற்சியை திட்டமிட்டமிடப்பட்டதுடன் 2010 மற்றும் 2011 இரு வருடங்களில் எமது மொத்த நிறைவேற்று அலுவலர் பதவியணியினருக்கு அந்த பயிற்சியை வழங்குவதற்கு முடிந்தது. அதன் மூலம் நோக்கங்கள் முன்னுரிமைப்படுத்துதல், அணுகுமுறை அபிவிருத்தி, திட்டமிடல் மற்றும் ஒழுங்கமைப்பு கடமைகளை கையளித்தல், தொடர்பாடல், கால முகாமைத்துவம்



CATC நிறுவன ஊழியர்களிடையே மேற்கொள்ளும் பயிற்சிகளில் குழு மேம்பாட்டு செயற்பாடுகளும் வழமையாக இடம்பெறும்.

# மனித வளங்கள் முகாமைத்துவம் தொடர்ச்சி.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல் மற்றும் அபாயங்களுக்கு முகங்கொடுத்தல் போன்ற துறைகள் உள்ளடக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டம் எமது பயிற்சித் திட்டத்தின் திட்டமிடப்பட்ட பிரிவாக இருப்பதுடன் 2014 வருடத்தில் மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்குள்ளது.

எமது பயிற்சி வழங்கும் பிரிவான CATC மூலம் “குழுக்களை கட்டியெழுப்பும் பாடநெறி” ஒழுங்குபடுத்தப்படும். “குழுக்களிக் தொழிற்பாடுகள் மற்றும் ஆளுமை வளர்ச்சி” மற்றும் “தலைமைத்துவத்தின் கோட்பாடுகள் மற்றும் செயல்முறை விதிகள்” என்று அதிகளவில் நடாத்தும் இரு பாடநெறிகளாக இருப்பதுடன் அந்த பாடநெறிகள் எமது பதவியணியினர் மத்தியில் அதிகளவு நன்மதிப்பை பெற்றுள்ளன.

### அறிவு மேலாண்மை

நிறுவனமொன்றினது நீண்டகால நிலைப்பேற்றிற்கு அறிவு மேலாண்மைக்கும் முக்கியமாக தேவைப்படுவதால் அறிவைச் கைப்பற்றுதல், விநியோகித்தல் மற்றும் பாவனைக்குரிய அணுகுமுறைகள் தொடர்பாக செலுத்தப்படும் அவதானிப்பிர் தொடர்ந்தும் வளர்ச்சி காண முடியும்.

### அதிகாரத்தினைக் கையளித்தல்

எமது நிறைவேற்று பணிப்பாளர்களினால், கம்பனியின் வளர்ச்சிக்கு காரணமாக அமையும் தொழில் அபிவிருத்தி மற்றும் புதிய கருத்திட்டங்களைத் தொடங்குதல் தொடர்பாக நடாத்தப்படும் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு குறித்த ஊழியர்களுக்கு உரிமை வழங்குவதுடன், அந்த வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தி குறித்த நோக்கங்களை அடைவதனால், சுய தொழில் வாய்ப்புகளின் அபிவிருத்தி மற்றும் திருப்தியை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் பதவியணியினருக்கு உரித்தாகுவதனால் அவர்களின் தனிப்பட்ட அபிவிருத்தி சார்பாக அளப்பறிய சேவை அத்துடன் நிறைவேற்றப்படும்.

### மின்-நூலக சாலை

எமது பதவியணியினரால் சுய தொழில்சார் அனுபவங்கள் மற்றும் கல்வியின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட கற்கைக் கருவிகள், வெளியீடுகள் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகள் இலத்திறனவியல் கோப்பாக களஞ்சியப்படுத்தப்படுகின்ற மின் நூலகசாலை நுழைவாயில் ஆரம்பித்துள்ளது. அதற்கிணங்க தேவைப்படும் சந்தர்ப்பங்களில் செயல் ரீதியாகத் தேவைப்படும் தகவல்கள் மற்றும் அறிவு உடனடியாக பெற்றுக் கொள்ளும் திறமை கிடைத்துள்ளன.

இந்த கருவியினூடாக இப்போதைக்கு பின்வரும் நன்மைகள் கையேற்கப்பட்டுள்ளன.

- எதிர்வரும் வருடத்தில் பயிற்சித் தேவைப்பாடுகளை முடிவு செய்யும்போது, முன்னைய பாடநெறி ஆவணங்கள், வெளிநாட்டுப் பயிற்சிப் பெற்ற அங்கத்தவர்களின் விதந்துரைகள் மற்றும் அனுபவங்கள் மனிதவளப் பிரிவு மற்றும் மேற்பார்வையாளர்களினால் கருத்திற் கொள்ளப்படுதல்.

- விஷேடமான மற்றும் சிறப்புத் தன்மை வாய்ந்த உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக கேள்விப் பத்திரங்களைத் தயாரித்து உள்ளபோது மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களுக்கு அதற்காக அழைப்பு விடுத்துள்ளபோது அது தொடர்பாக முடிவுகளை எடுக்கும்போது தேவைப்படும் தொழில்நுட்ப அறிவு உறிஞ்செடுத்தல்.




விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கிறிஸ்தவ சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த கிறிஸ்துமஸ் கரோல்ஸ்



பௌத்த சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட அநுராதபுரத்திற்கான வருடாந்த யாத்திரை. ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் என சுமார் 1200 யாத்திரிகள் இதில் கலந்து கொண்டனர். ஒரு முழுபுகையிரதம் இதற்காக ஒதுக்கப்பட்டது.

## முக்கியமான மைல்கற்களை எய்துவதற்கும் துணிகரமான புதிய சவால்களைத் தழுவுவதற்கும் ஒழுங்கமைப்பிற்கு வசதியளித்த பரந்தளவிலான அறிவும் தேர்ச்சியும் கொண்டவர்களும் பல்வேறு துறைகளிலான பின்னணிகளைச் சேர்ந்தவர்களுமான அர்ப்பணிப்புடன் செயற்படும் உயர் தொழிலர்களின் அணியை உள்ளடக்கிய பணியாட்டொகுதியை AASL கொண்டுள்ளது.

### TRAINAIR PLUS

ICAO இன் TRAINAIR PLUS நிகழ்ச்சித் திட்டத்தின் அங்கத்துவத்தினால் கம்பனியிற்கு அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் அங்கத்துவ பயிற்சி நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட சர்வதேச ரீதியிலான பயிற்சி பாடநெறிகளுக்கு அணுகல் வழங்கப்படும். இந்த அதிகரிக்கும் ஒதுக்கத்தின் பாடநெறிகளுக்கு பங்களிப்புச் செய்வதற்கு மேலதிகமாக அவர்களது நிலையங்களில் ஏதேனும் பாடநெறியை பயிலும் சந்தரப்பம் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும். அதற்கிணங்க பயிற்சி பாடநெறிகளை தயாரிப்பது தொடர்பாக ஏற்க நேரிடும் மேலதிக முயற்சியின் கருதக்கூடிய மீதி ஏற்படும்.

எமது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினூடாக எம்மால் மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் ஆட்சேர்க்கும் தொழிற்பாட்டை வெற்றிகொண்டு பயிற்சி மற்றும் புதிய தொழிற்படையினரை உருவாக்கினோம்.

எமது CATC முதல் முதலாக நடைப்பெற்ற TRAINAIR நிகழ்ச்சித்திட்டத்தின் அங்கத்தவராக இருந்தது. ICAO/ UNDP கருத்திட்டத்தின் மூலம் TRAINAIR PLUS என்ற விஷேட தரத்திலான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறையில் செயல்படுத்துவதுடன் எமது CATC உடனடியாக அதன் குறித்த அங்கத்துவத்தை பெற்றுக் கொள்வதற்காக செயல்பட்டது. முழு அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறையில் செயல்படுத்தியுள்ளது. TRAINAIR PLUS நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்காக அமைவது சர்வதேச ரீதியாக விமானசேவை ஊழியர்களுக்கு உயர்தர பயிற்சிகள் வழங்குவதனூடாக விமான போக்குவரத்தின் உத்தரவாதம் மற்றும் வினைத்திறன் மேம்படுத்துவதேயாகும். அதன் பயிற்சி கொள்கையாக அமைவது “விமானசேவை ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கும்போது நாடுகளிடையே ஒற்றுமை வளரச் செய்து பயிற்சி போதுமானதாக இல்லாததனால் சர்வதேச விமான போக்குவரத்துச் சேவைகளுக்கு ஏற்படக்கூடிய பாரதுாரமான தாக்கங்களை தவிர்த்துக் கொள்வதேயாகும்.

### ஊழியர்களின் நலன்புரி மற்றும் உரிமைகள்

ஊழியர்களது நலன்புரி மற்றும் உரிமைகள் தொடர்பான கவனம் எமது மனிதவள கொள்கை முக்கிய பகுதியாகும். கம்பனியொன்றின் நேர்த்திவாய்ந்த நலன்புரி செயற்பாடுகள் தொழில்துறையின் வெற்றிக்கு மற்றும் மாற்றமடைகின்ற தொழில்துறை மேம்பாட்டின் மத்தியில் ஆர்வம் மற்றும் நெகிழ்ச்சிவாய்ந்த திடப்பற்றுடைய மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட ஊழியர்களை உருவாக்குவதற்காக மற்றும் விடாதுவைத்திருப்பதற்காக உதவியாக உள்ளது.

வி.வி.சே.க, ஊழியர் ஒன்றுகூடும் உரிமைகளுக்கு மதிப்பளிக்கின்றது. நாம் வழக்கமாக பல வருட காலமாக தன்னிச்சையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுள்ளோம். கம்பனிக்குள்ளே பல்வேறு தொழில்களை பிரதிநிதிப்படுத்துகின்ற தொழிற்சங்கங்கள் காணப்படுவதுடன் அத்துடன் விளையாட்டு மற்றும் கேடிக்கை கழகங்கள், சேவா வனிதா பிரிவு, பௌத்த சங்கம் மற்றும் கிறிஸ்துவ சங்கம் மூலம் குறித்த பிரிவுகளின் ஊழியர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்துகின்றது.

எமது அனைத்து ஊழியர்களுக்கு போக்குவரத்து சேவை வசதிகள், உணவுநேரக் கொடுப்பனவு, ஊழியர் கடன்கள், வீடமைப்பு கடன், தனிநபர் விபத்து காப்புறுதித் திட்டம், மரண பணிக்கொடை திட்டம் மற்றும் சுகாதார காப்புறுதி திட்டம் உள்ளடங்களாக பல நன்மைகள் வழங்கப்படும்.

வி.விசே.கம்பனியின் மூலம் ஊழியர்களின் கடமை - வாழ்க்கை சமநிலை மேம்படுத்தி உளவழுத்த முகாமைத்துவ பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். ஊழியர்களின் பிள்ளைகளுக்காக “சவால்களை எதிர்கொள்வோம;” என்ற ஆளுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்று 2013 ஆம் ஆண்டு முதல் தடவையாக நடைமுறைப்படுத்தப்பட்டது. CATC மூலம் ஆரம்பிக்கப்பட்ட விமானசேவை டிப்ளோமா பாடநெறியிற்காக மாணவர்களுக்கு புலமை பரிசில்கள் வழங்கப்பட்டன. பாடசாலை விடுமுறைக் காலங்களில் ஊடகப் பிரிவால் விமானநிலையத்தை பார்ப்பத்றகாக பிள்ளைகளுக்கு சுற்றுலாக்கள் ஒழுங்கமைக்கப்படும்.

### ஊழியர்கள் ஆற்றலை மேம்படுத்தல்

#### பயிற்சி மற்றும் அபிவிருத்தி

வழக்கமாக மாற்றமடையும் தொழில்துறை மற்றும் துறைவாரியான சுற்றுப்புறத்துக்கேற்ற பூரணத்துவ மிக்க



வெளி வள பணியாளர் பயன்படுத்தி நிர்வாக பிரிவுகளுக்கு நடாத்தப்பட்ட உள்ளக பயிற்சி

# மனித வளங்கள் முகாமைத்துவம் தொடர்ச்சி.

பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பல எமது தேர்ச்சிப்பெற்ற உள்ளக பயிற்சியாளர்களால் மேற்கொள்ளப்படும். அதேபோல தேவையான சந்தர்ப்பங்களில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வெளிவாரி கருத்துவள ஆட்களின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படும்.

2012 ஆம் ஆண்டு 1,751 ஊழியர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளை பெற்றமைக்கு நிகராக 2013 ஆம் ஆண்டிலும் 2,377 ஊழியர்களுக்கு இவ்வாய்ப்பு பெற்றுக் கொண்டனர். 2013 ஆண்டு பயிற்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான மொத்த முதலீடு ரூபா 64 மில்லியன்களாகும். குறித்த ஆண்டில் 145 ஊழியர்களுக்கு சிங்கப்பூர், மலேசியா, ஹொங்கொங், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், சீனா, கனடா மற்றும் பிலிபீன்ஸ் நாடுகளுக்கு வெளிநாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு அங்கே சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், வர்த்தக முகாமைத்துவம், விமானசேவை மருத்துவ வசதிகள், அறிவுறுத்தல் நுட்பங்கள், வணிகவள திட்டமிடல், இலத்திரனியல், வாழ் வனோடல் சேவைகள் தொடர்பாக பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு பெற்றனர். 2013 ஆம் ஆண்டிற்காக CATC யின் மொத்த



பணியாளர்கள் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் ஈஆர்பி பற்றி இவ்வாறான அமர்வுகள் மூலம் ஈஆர்பி தீர்வு வழங்குநர் இடமிருந்து மேலும் அறிய முடியும்

பயிற்சி முயற்சிக்காலம் 37,032 ஆனதுடன், அதில் 60% பயிற்சிகள் நிறுவன ஊழியர்களுக்கும் மீதி 40% வணிக பயிற்சிகளாகவும் வழங்கப்பட்டன.

CATC யினால் றேம்கொள்ளப்பட்ட பயிற்சிகளின் விபரம்:

| பிரிவு | பயிற்சி மணித்தியாலம் |
|---|---|
| மென்மையான திறன் விருத்தி | 1,308 |
| புதிய ஆட்சேர்ப்புகளுக்கான பயிற்சி | 5,952 |
| தொழில் அபிவிருத்தகிக்கு வழிவகுக்கும் செயற்திட்டங்கள் | 12,336 |
| வழிகாட்டும் பயிற்சி | 126 |
| விழிப்புணர்வு திட்டங்கள் | 2,466 |
| வேறுநபர்களுக்கான பயிற்சி | 14,844 |
| மொத்த | 37,032 |

Company Classification
2013




Age Analysis
2013




## பதவி உயர்வுகள்

குறித்த ஆண்டில் ஆண்டில், 128 வரிசை பதவி உயர்வுகள் மற்றும் 133 பக்க பதவி உயர்வுகள் தொழில் மேம்பாட்டுக்காக மற்றும் விரிவாக்கத்திற்கு வழிவகுத்தது.

## ஆலோசனை

வி.விசே.கம்பனியின் மொத்த விளைவுபெருக்கம் மேம்படுத்தும் நோக்கில் 2008 ஆம் ஆண்டில் மதியுரை அலகு அமைக்கப்பட்டதுடன் அது ஏற்கனவே வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகின்றது. உணர்ச்சிவயப்பட்ட உறுதிநிலை, பூசல்களை தீர்த்தல், மன அழுத்த மேலாண்மை, மாற்ற மேலாண்மை போன்ற பிரிவுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. செயலாற்றுகையில் குறைப்பாட்டினை காட்டுபவர்கள் இரு முறைகளினூடாக அதாவது மேற்பார்வையாளர் தலையீடு மற்றும் ஊழியர்களின் நேரடி வேண்டுகோளினூடாக ஆலோசனைகளுக்கு உட்படுத்தப்படுவர்.

## செயல்திறன் மேலாண்மை

விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி செயற்திறன் மேலாண்மை அமைப்புமுறை மற்றும் செயற்திறன் அடிப்படையிலான தொடர்புடைய கொடுப்பனவுத் தொகுதி ஒத்த முறையில் நடைமுறைப்படுத்தி

## செயற்திறன் என்பன உட்பட பல்வேறு துறைகளிலும் தேர்வுநாடிகளின் ஆற்றல் மதிப்பீடு செய்யப்படுவதை எமது விரிவான ஆட்திரட்டல் செயல்முறை உறுதிப்படுத்துகின்றது.

கண்டறியப்பட்டுள்ளது. ஆகையால் இப்போதைக்கு எமது அவதானிப்பு, செயலாற்றுகை தொடர்பாக பலன்களை வழங்கும்போது நிதியியல் இல்லாத பலன்தரும் கருவியின் பால் செலுத்தப்பட்டு வருகின்றது. அதாவது, அது நிதியியல் நன்மைகளை விஞ்சி போவதை எமது நிகழ்காலம் நம்புகின்றது. செயலாற்றுகை தொடர்பாக பலன்களை வழங்கும்போது எமது முதன்மை கவனம் பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்கள், பதவியுயர்வுகள் மற்றும் மதிப்பாய்வுகளுக்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

மேலும் கம்பனி நியாயமான சம்பளம் செலுத்துபவராக புகழ்பெற்றுள்ளதுடன், குறைந்தபட்ச சம்பள அளவு இலங்கை ஏனைய துறைகளிலும் பார்க்க மிகவும் அதிகமானது. குறைந்தபட்ச மற்றும் உயர்வான சம்பளம் இடையே ஒப்பீட்டு ரீதியில் ஒடுக்கமான மட்டத்தில் காணப்படுவதுடன், எமது அனைத்து பதவியணியினரும் அவர்களின் வாழ்க்கை தேவைப்பாட்டை திருப்திப்படுத்துவதற்கு ஏற்றவாறு போதுமானளவு சம்பாத்தியம் பெறுவதைக் காட்டுகின்றது.

எவ்வாறிருப்பினும் சம்பளம் மற்றும் செயலாற்றுகையிடையே காணப்படும் தொடர்பாடல் முற்றுமுழுதாக தவிர்ப்பதற்கு நாம் கருதவில்லை. அது நிகழ்காலத்தில் மிகவும் முதிர்ச்சி பெறாத சந்தர்ப்பத்தில் இருந்தாலும் முறையாக அது தொடர்பாக நடவடிக்கையெடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். அதற்கிணங்க செயலாற்றுகையிற்கு உரியதாக சம்பளங்களை தயாரித்தல் வி.வி.சே.க இந்த செயலாற்றுகை முகாமைத்துவம் தொகுதியை முறை தவறாமல் எதிர்வரும் வருடங்களில் நடைமுறையில் தொழிற்படுத்துவதுடன் மேற்கொள்ளப்படும். இப்போதைக்கு அந்த கணக்கெடுப்புகள் கிளை மட்டங்களுக்கு மாத்திரம் மேற்கொள்ளப்படுவதுடன், நபர்களின் மட்டத்திற்கு மேற்கொள்ளப்படவில்லை.

### செயல்திறன் மதிப்பீடு

நாம் தனிப்பட்ட செயலாற்றுகையை மதிப்பிடும்போது மேலிருந்து கீழ் வரை அணுகுமுறை கையாளப்படும்.

பிரிவின் இலக்குகள் மற்றும் தனிநபர் இலக்குகள், கம்பனி இலக்குகளுடன் தொடர்படுத்தி தொழிற்படும் கருத்திட்டமாக நிறைவேற்று/ முகாமைத்துவ குழுக்களுக்கு ஒரு புதிய அணுகுமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த புதிய திட்டமிடல் மூலம் ஊழியர்களின் நோக்கங்கள் நிறுவனத்தின் நோக்கங்களுடன் சீரமைவான பலன்கள் மற்றும் மதிப்பீடு செயலாற்றுகையுடன் நேரடியாகத் தொடர்படுதல் உறுதிப்படுத்துவதற்கு கருதப்படும். முன்மொழியப்பட்ட திட்டத்தின் கீழ் செயலாற்றுகை முதன்மையாகக் கொண்ட விழுமியங்களுக்கு அனுப்பப்படும் பிரதான விழுமியங்களுடனான திறமைகள் சுயமான பாத்திரத்திற்குள் வளர்த்துக்கொள்வதற்கு பதவியணியினரை தூண்டப்படுகின்றது. அங்கு சுய தூண்டுகோளுடன் எமது பாவனையாளர் நோக்காகக் கொண்ட படைப்பாற்றல் மிக்க விளைவுப் பெருக்க தொழிற்பாடு எதிர்பார்க்கப்படும். அங்கு சுய தனிநபர் ஆளுமை பாதுகாத்துக் கொள்வதுடன் கம்பனியின் பெறுமதியையும் உயர்த்தி வைக்கப்படும்.

இது மேலும் வி.விசே. கம்பனியிற்குள் கம்பனி இப்போதைக்கு செயலாற்றுகை அளவை அணுகுமுறை தயாரித்துள்ளது. 2007 ஆம் ஆண்டில் தனிநபர் செயலாற்றுகை அளவிடுவதை அறிமுகப்படுத்திய முதல் வருடத்திலிருந்து அவ்வாறு செயலாற்றுகை அளவிடும்போது முகங்கொடுப்பதற்கு ஏற்படும் சிக்கல்கள் தொடர்பான விழிப்புணர்வு எமது கம்பனி பெற்றுள்ளது. இப்போது கம்பனிகளின் நோக்கங்கள் மற்றும் இணைந்த பிரிவு செயலாற்றுகையை கணக்கெடுதல் அறிமுகப்படுத்தும் தொழிற்பாடு இப்போதைக்கு செயல்முறையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட ERP அணுகுமுறையினூடாக இந்த நிகழ்ச்சித்திட்டம் முன்கொண்டு செல்வதற்காக நாம் விஷேட கவனத்தைச் செலுத்துகின்றோம். அதன் மூலம் இலக்குகள், பிரிவுகளின் செயலாற்றுகை மற்றும் தனிநபர் செயலாற்றகையின் புள்ளிகளுடன் தொடர்படுத்துவதற்கும் அணுகுதல் கிடைக்கும்.

### முன்னேறும் காலடிப்பாதை

இலங்கைப் பொருளாதாரத்தின் முன்னணியிலுள்ள முற்போக்கான ஒரு ஒழுங்கமைப்பு என்ற வகையில் கடந்த ஆண்டுகளில் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி பல சவால்களை எதிர்நோக்கியுள்ளது. எமது தெளிவான கண்ணோட்டம் மற்றும் முதிர்ச்சியான கண்ணோட்டம் காரணமாக இந்த தடைகள் மற்றும் சவால்கள் எதிர்கொண்டு இலங்கை தொழில்நுட்ப வர்த்தக உலகத்திற்குள் ஆற்றல்வாய்ந்த மற்றும் பிரபல்யமான கம்பனியாக தலை தூக்குவதற்கு எமக்கு இயலுமையாக இருந்தது. மனிதவளங்கள் மற்றும் இணைந்த அனைத்து காரணங்கள் உள்ளடக்கப்பட்ட பரந்த மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட மனிவள மாதிரி அபிவிருத்தி செய்வதற்காக எமது நீண்டகால அர்ப்பணிப்பு தாபனத்தின் உள்ளக சாவால்கள் இலகுவாக வெற்றிக்கொள்ளும் இயலுமை எதிர்காலத்தில் எமக்கு வழங்கப்படுகின்றது.

கடந்த வருடமாகும்போது வி.வி.சே.க முகங்கொடுத்துள்ள ஒரேயயொரு சவால் ப.ச.வி. இன் சேவைத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு மாத்திரமேயாகும். ஆனாலும் அண்மைக் காலங்களில் எமது முக்கிய சவால்களாக இருப்பது வளர்ச்சிக் கட்டத்துக்கு பிரவேசித்துள்ள இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமானநிலையமான வி.வி.சே.க ஆளணி வளத்தை நிறைவேற்றுவதற்கு மற்றும் வளர்ச்சிசெய்வதாகும். எம்மால் அந்த விமானநிலைத்திற்காக புதிய ஆளணியினரை ஆட்சேர்த்துக் கொள்ளுதல் திருப்பதிகரமான முறையில் மேற்கொண்டோம். நிகழ்காலத்தில் அது தகைமை வாய்ந்த ஊழியர்களுடன் நாம் பயிற்றுவிக்கும் அணுகுமுறையிற்கு இயைவாக ஆட்சேர்த்துக் கொண்ட புதிய பல ஆளணியினருக்கு நடாத்தப்படும். மேலே எம்மால் தெளிவுபடுத்தப்பட்ட விதத்திற்கு பிரிவின் நோக்கங்கள் ஆட்கள் மதிப்பீட்டுடன் தொடர்படுத்துவதன் மூலம் தாபனத்தின் நோக்கங்கள் வெற்றிக்கொள்வதற்காக வினைத்திறன் வழி திறப்பது நடைபெறும்.

# பராமரிப்பு
## எம்மை
# வெற்றியாளராக்கியது



## நீண்டகால நிலைப்பாட்டு அறிக்கை



நாம் சகல விமானநிலைய பாவனையாளர்களினதும் பாதுகாப்பு மற்றும் சேவை தரங்கள் பற்றி மிகுந்த அக்கறை செலுத்தினோம். எமது அனைத்து சாதனைகளினதும் உள்ளார்ந்தம் அக்கறையாகவே இருந்தது. அதுவே எமது தங்குதிறன் ஆற்றலினதும் பிரதான முன்னோடியாகும்.

# நீண்டகால நிலைப்பாட்டு அறிக்கை

### நீண்டகால நிலைப்பாட்டிற்கான முகாமைத்துவம்

கடந்த பல வருடங்களுக்குள் "நிறுவனத்தின் நீண்டகால நிலைப்பாடு" என்ற எண்ணக்கரு நவீன தாபன வளர்ச்சி அணுகுமுறையில் முன்னணியில் இருக்கின்றது. இங்கு நீண்டகால நிலைப்பாட்டை ஊழியர்கள் மற்றும் அனைத்து தரப்பினர்களுக்கு வழங்குவதற்காக சிறந்த தீர்வுகளை கண்டறிவதற்காக கவனம் செலுத்தப்பட்டது. இறுதியாக இந்த அணுகுமுறை மக்கள், கிரகம் மற்றும் நன்மை என்ற மும்மை அடித்தள எல்லைக்கோட்டு தத்துவம் (Triple bottom line philosophy) வரை செல்கின்றது.

இந்நாட்டில் சர்வதேச விமானநிலைய நிர்மாணிப்பு, தொழிற்பாடுகள் மற்றும் முகாமைத்துவ தொடர்புடைய ஒரேயொரு சேவை திட்டமிடலாளராக பொறுப்புக்களைக் கொண்ட தாபன பிரஜையாக உலகத்திற்கு சிறந்த தாக்கத்தினை ஏற்படுத்துவதில் நாம் செயலாற்றுகின்றோம்.

### சுற்றுச் சூழல் செயல்திட்டம்

சுற்றுச் சூழல் செயல்திட்டத்தினை நோக்கின் புகழ்மிக்க நீண்டகால வரலாறு விமானசேவைத் துறைக்குரியது. ஏனைய அனைத்து துறைகளுக்கும் நிகராக பசுமைக் குடில் வாயு வெளியிடுவது தொடர்பாக விமானசேவைத் துறையில் பங்களிப்பு 3% ஆகும். தொழில்நுட்ப வளர்ச்சியினூடாக 30 வருட காலம் பூராவும் ஒரு பயணிக்காக உள்ள விமான எரிபொருள் பாவனை மற்றும் புகையை வெயிடுதல் கருத்க்கூடியவாறு குறைத்துக் கொள்வதற்கு முடியுமாக இருப்பதுடன், இந்த நிலைமை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு விமானசேவை துறை அர்ப்பணித்துள்ளது. ஆனாலும் அறபுக் கடல் மற்றும் இந்தியா சமுத்திரத்துடன் தொடர்புடைய விமானசேவை நடவடிக்கைகளில் பாரிய வளர்ச்சி எதிர்பார்க்கப்படுவதால் இலக்குப்படுத்தப்பட்ட எல்லைகளுக்குள் நிலைநிற்பதற்கு சவாலாக உள்ளது.

ICAO மூலம் 2013 ஒக்டோபர் மாதத்தில் அறபுக் கடல் இந்திய சமுத்திரம் தகைமையுள்ள விமானப் பயண பாதைகள் (UPR) பூகோள பிராந்தியம், உத்தியோகபூர்வமான நிலைநிறுத்தப்பட்டது. கொழும்பு FIR பிராந்தியத்திற்குள் அறபுக் கடல் இந்திய சமுத்திரம் தகைமையுள்ள விமானப் பயண பாதைகள் (UPR) பூகோள பிராந்தியத்தில் கருதக்கூடிய பகுதி உரித்தாகியுள்ளது. இது ASIOACG* மற்றும் INSPIRE** என்ற இரு தாபனங்களினால் நிறைவேற்றப்பட்ட புகழ்மிக்க கடமைப் பொறுப்பாக இருப்பதுடன், அதன் மூலம் விமானசேவைகளால் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதகமான தாக்கங்களை குறைக்கும் உலகளாவிய முயற்சிக்கு கருதக்கூடிய பங்களிப்பு அந்த நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இங்கு விமானசேவைக்கு எரிபொருள் சேமித்தல் மற்றும் குறைந்தபட்சம் புகை வெளியிடுதல் போன்ற நன்மைகள் உள்ளடங்கப்படும். வி.வி.சே.க இன் அலகு INSPIRE இல் செயற் குழுவுடன் செயற் ரீதியிலான கடமைப் பொறுப்பினை நிறைவேற்றியது. மேலும், INSPIRE இற்கு "கரிமம் ஈருயிரகம் உமிழ்வதைக் குறைத்தல்" தொடர்பாக 2013 உலக விமானப் பயண சிறப்பு விருது எமது விமானப் பயண கட்டுப்பாட்டாளர்கள் INSPIRE உடன் ஒன்றிணைந்து கொண்டு செலுத்தப்பட்ட ஒத்துழைப்பு ரீதியிலான முயற்சியின் பிரதிபலனாக உரித்தப் பெற்றனர்.

*ASIOACG - அறபுக் கடல் இந்திய சமுத்திரம் ATS ஒருங்கிணைப்புக் குழு, இங்கு ATS என விமானசேவைகள் காணப்படும்.

**INSPIRE – உழிழ்களை குறைக்கும் அறபுக் கடல் இந்திய சமுத்திரம் அணுகுமுறை ஒத்துழைப்பு

### கொழும்பு FIR இற்குள் காபன் உழிழ்வதனைக் குறைத்தல்

விமானப் போக்குவரத்து அலகினால் கொழும்பு FIR இற்குள் காபன் உமிழ்வதனைக் குறைப்பதற்காக தொடர்ச்சியான பங்களிப்பை வழங்குகின்றது. விமானப் பயண கட்டுப்பாட்டளர்களை விழிப்புணர்த்துதல் மற்றும் கரிமம் ஈருயிரகம் உமிழ்வதைக் குறைக்கும் அணுகுமுறைகள் வருடத்துக்கு வருடம் மேம்படுத்தப்படும். சகல விமானங்களும் பயணம் செய்கின்ற தூர அளவைக் குறைப்பதற்காக மிகவும் நேரடி விமானப் பயணங்கள் ஈடுபடுத்துவதை ஒருங்கிணைப்பதனூடாக இலங்கையின் விமானப் பயண கட்டுப்பாட்டாளர்களினால் இந்த செயற்பாடு சென்னை, திருவனந்தபுரம், மாலைதீவுகள் மற்றும் ஆஸ்திரேலியாவில் இந்த செயல்முறைகளை விரிவாக்கியள்ளனர். கொழும்பு FIR இனால் மேற்குறிப்பிட்ட இலக்கை அடைய பின்வரும் முறைகளை பயன்படுத்தப்படும்.

- விமானங்களுக்காக கொழும்பு FIR இற்குள் நேரடி பயணப் பாதைகள்
- சென்னை மற்றும் திருவனந்தபுரம் இருந்து குறுகிய வழித்தடங்கள் வழியாக விமானப் பயணங்களை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் ப.ச.வி / ம.இ.ச.வி வருகையிற்காக Continuous Descent Operation (CDO) வசதிகளை வழங்குதல்.
- Continuous Climb Operation (CCO) மற்றும் வெளியேறுவதற்காக கொழுப்புக்கு வெளியே நேரடி பயணப் பாதைகள்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட விமானங்களுக்காக நெகிழ்வான பாதைகள் மற்றும் தகைமைப் பாவனை பயணப் பாதைகள்
- கரிமம் ஈருயிரகம் உமிழ்வதைக் குறைக்கும் நிகழ்ச்சித்திட்டத்துக்காக பிராந்தியத்தின் வேறு நாடுகளுடன் ஒன்றிணைதல்.

வரும் மற்றும் புறப்படுகை எமது பிராந்தியத்திற்கு மேலாக பறக்கும் விமானங்கள் தொடர்பாக மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை பின்பற்றுவதன் மூலம் ஒரு நாளைக்கு சராசரியாக, எரிபொருள் 12,700 கிலோ கிராம் சேமித்துக்கொள்வதற்கும், கரிமம் ஈருயிரகம் வெளியிடுவது நாளொன்றுக்கு 18 டொன்களினால் குறைத்துக் கொள்வதற்கும் முடியுமாகவுள்ளது.

### வாயுமண்டலத்திற்கு வெளிச்செல்லும் காபன் மற்றும் அடிச்சுவடு குறைத்தல்

எமது திண்மக் கழிவுநீர் கையாளும் திட்டம் சுத்திகரிப்பு மற்றும் எரிஉலை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தரங்களுக்கு இணங்குவதுடன் எம்மால் வலுச்சக்தி மற்றும் நீர் சிக்கணத்திற்காக நடைமுறைகளை நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக 2011 மற்றும் 2012 வருடாந்த அறிக்கையில் விவரங்களுடன் குறிப்பிட்டுள்ளது.

## காபன் அடிச்சுவடுகளைக் குறைத்தல்

2011 ஆம் வருட பெறுபேறுகளுக்கிணங்க வெளியிடப்பட்ட எமது முதலாவது காபன் அடிச்சுவடு அறிக்கை 2013 முதலாவது காலாண்டிங்குள் தயாரித்து வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையால் கம்பனியின் பசுமைக் குடில் வாயு தொகை அதாவது ப.ச.வி. இன் காபன் அடிச்சுவடு கரிமம் ஈருயிரகம் (Co2) சமமான கிலோகிராம் மற்றும் 2011 சனவரி இலிருந்து 2011 திசெம்பர் வரையிலான வருட காலத்திற்காக “Co2 சமமான தொண் ஆக கணக்கிடப்பட்டுள்ளது. 2011 வருடம் ப.ச.வி இற்காக காபன் அடிச்சுவடுகள் கணக்கிடப்பட்ட முதலாவது வருடமாக இருப்பதனால் அந்த புசுமைக் குடில் வாயு தொகை கணக்கிடப்படுவதற்குரிய அடிப்படை வருடமாக கருதப்படும்.

ப.ச.வி. நிலையத்தின் 2011 ஆம் ஆண்டு காபன் சுட்டிக்காட்டிகள்

| | |
|---|---|
|  | 1. காபன் சுட்டெண் கிலோ கிராம் CO2 மற்றும் சமானவை / விமானப் பயணத் தடவைகள் = 391 |
| | 2. காபன் சுட்டெண் கிலோ கிராம் CO2 மற்றும் சமானவை / பயணிகள் = 2.94 |
| | 3. காபன் சுட்டெண் கிலோ கிராம் CO2 மற்றும் சமானவை / முழுநேர சேவைகள = 5,427 |

விமானநிலையத்திற்குள் வலுச்சக்தி உபயோகிக்கப்படும் முறைத் தொடர்பாக சிறந்த அறிவுடன் ப.ச.வி. இற்குள் சரியான கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு எமது வலுச்சக்தித் தேவைப்பாடுகள் பாரியளவில் அதிகரித்துக் கொள்வதிலிருந்து தவிர்த்து எமது வர்த்தக நடவடிக்கைகள் அதிகரித்துக் கொள்வதற்கு இயலுமாக இருந்தது

## சிலாபம் வைத்தியசாலையின் புதுப்பித்தல் பணி

சிலாபம் வைத்தியசாலையிலுள்ள 18 ஆம் இலக்க தொகுதி மீளாய்வு ஆண்டில் முற்றிலுமாக புதுப்பிக்கப்பட்டது. பூமியில் தரையோடு பதித்து நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஒரு பகுதி மலசலகூடலம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டதுடன் இன்னுமொரு பகுதி மலசலகூடல் முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்டது. சுவரும் சீலிங்கும் வர்ணம் பூசப்பட்டது. மின் கம்பியிடல், ஒளி இணைப்புக்கள் மற்றும் மின்விசிறிகள் பொருத்தப்பட்டன. வைத்தியர் மற்றும் தாதிகள் ஒய்வு அறை இடம்மாற்றப்பட்டு கழிவறைகள் இணைக்கப்பட்டன.

## அம்பாறை மாவட்ட பாடசாலை வேலைத்திட்டம

தேசத்தின் மகுடம் கண்காட்சிக்கு ஒத்தாக அம்பாறை வீரன்கெதகொடையிலுள்ள வல்கம்புர வித்தியாலயம் எமது ஊழியாகளின் பங்களிப்புடன் புதுப்பிக்கப்பட்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பிரதான மண்டபம், கிணறு, என்பன புனர்நிர்மாணம் செய்யப்பட்டன. புதிய கல்வித்திட்டம் பிரகாரமான திறந்த வெளி வகுப்பறையொன்றும் அமைத்து கொடுக்கப்பட்டது.

## பட்டத்தை எதிர்பார்த்திருப்பவர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சிகளுகளை வழங்குதல்

விமானசேவைத் துறையில் தேசிய சேவை திட்டமிடலாளராக வி.வி.சே.க இலத்திறனவியல் மற்றும் தொலைத் தொடர்ப்பு தொழில்நுட்ப பயிற்சி வழங்குவதற்காக காணப்படும் சிறப்புமிக்க நிறுவனமாக (E&ANE) பிரிவு காட்டுகின்றது. இந்த பிரிவுடன் தகவல் தொழில்நுட்பம், தொழில்நுட்ப இலத்திறனவியல் பிரிவுகள் எதிர்காலத்தில் நாட்டிற்காக சேவையாற்றுவதற்கு தயாராகும் தொழிற் பயிற்சியாளர் பொறியியல் மற்றும் முகாமைத்துவ திறமைகளை கூர்மையாக்கும் பொறுப்புக்கு இடமளித்தல் வேண்டும்.



வல்கம்புர வித்தியாலயத்தில் புனர்நிர்மாண பணிகள் இடம்பெறுகின்றன.



சிலாபம் வைத்தியசாலையை புதுப்பித்தல்

# நீண்டகால நிலைப்பாட்டு அறிக்கை தொடர்ச்சி.

### வி.வி.சே. க ஏற்கனவே மொரட்டுவை

பல்கலைக்கழகத்தின் பொறியியல் பிரிவில் பொறியியல் பீடம், தொழில்நுட்ப நிறுவகம், பேராதனை பல்கலைக்கழகம், ருஹுணு பல்கலைக்கழகம், இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் பொறியியல் பிரிவுகள், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம், தகவல் தொழில்நுட்ப நிறுவனம், தொழில்நுட்பம் மற்றும் மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான தென் ஆசியா நிறுவனத்தின் (SATIM) எதிர்பார்த்திருக்கும் பட்டதாரிகளுக்கு தொழில்நட்ப பயிற்சியை வழங்குவதற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

### எங்கள் பாதுகாப்பு படைகளுக்கு நன்றி

போர் வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் நலன்புரி வசதிகளை ஏற்படுத்தும் “நமக்காக நாம்” வீடமைப்பு நிதியத்திற்கு ரூபா. 2.5 மில்லியன் பாதுகாப்பு அமைச்சின் ஊடாக விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி வழங்கியது. 05 ஆவது தடவையாகஅதொடர்ச்சியாக வழங்கப்பட்டு வரும் இந்த நிதி உதவியான மொத்தம் 38.5 மில்லியன் வழங்கப்பட்டுள்ளன. இந்த நன்கொடை பயன்படுத்தி 35 வீட்டு அலகுகள் கட்டப்பட்டது போர் வீரர்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.



பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் செயலாளர் திரு கோதாபய இராஜபக்ஸ AASL தவிசாளர் இடமிருந்து பணக் காசோலையினை பெறுகின்றார்.

### தேசத்தின் மகுடம் கண்காட்சியில் பங்குபற்றல்

விமான போக்குவரத்து மேலாண்மை மற்றும் எமது கம்பனியால் உபயோகிக்கப்படுகின்ற தொடர்பாடல், வானோடல் மற்றும் கண்காணிப்பு விழிசார் உதவி வழங்கும் ஒளியியல் தொகுப்பு பாவனை செய்யபப்டும் முறை மற்றும் அதற்குரிய அடிப்படைகள் தொடர்பாக பொருத்தமான வழிமுறைகள் மற்றும் பாவிப்பி மூலம் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் கண்காட்சி அறைகளுடன் நாம் “ தெயட்ட கிருல கண்காட்சிக்கு பங்களிபபை வழங்கியுள்ளோம்.

### கலாச்சார நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கையின் நீண்டகால வரலாறு அதன் கலாச்சாரத்துடன் அனைத்து நேரங்களிலும் இணைந்துள்ளது. நாட்டிற்குள் ஒரே மாதிரியாக உல்லாசப் பயணிகளை கவரச் செய்வதற்கு இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அங்கமாகும். எமது கலாச்சார நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கையின் உண்மையான விழுமியங்கள் மற்றும் பழக்க வழக்கங்களை வெளிப்படுத்துவதற்கு உதவுகின்றது. நாடு பூராவும் நிகழும், கருதக்கூடிய பல கலாச்சார



தேசத்தின் மகுடம் கண்காட்சியில் பங்கு பற்றிய மக்களுக்கு விமான போக்குவரத்து செயற்பாடுகள் பற்றிய விளக்கம் அளிக்கப்படுகின்றது.

வைபவங்களுக்கு நன்கொடைகளினூடாக வருடம் பூராவும் ஒத்துழைப்பு வழங்குவதற்கு விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி இணைந்துள்ளது. கீழுள்ள திட்டங்களுக்கு மேலதிகமாக பல்வேறு முக்கிய பெரஹரவிற்கு நன்கொடைகள் வழங்கியுள்ளது.

### உட்கட்டமைப்பு

- கதிர்காமம் கிரிவிகாரையில் உள்ள கழிப்பறை தொகுதிகள் கட்டுமானம்
- பதுளை அரச விகாரையில் ஒரு புதிய “தர்மசாலா” கட்டிடம்

### கலை மற்றும் கலாச்சாரம்

- கதிர்காமம் நாகப்பட்டி மற்றும் கிரிவிகாரைக்கு இடையே ஒரு நுழைவாயில் கட்டமைப்பு
- கொழும்பு நவம் மகா பெரஹரவுக்காக நன்கொடை
- திஸ்ஸமஹாராம ரஜமஹா விஹாரையின் - “ருஹுணு மகா பெரஹரவுக்காக பங்களிப்பு
- ருஹுணு மகா கதிர்காமம் தேவாலய 2013 ம் ஆண்டு எசல திருவிழா வுக்கு அனுசரணை
- ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே ரஜமகா விகாரை - “இலங்கை தலதா பெரஹரவுக்காக” பங்களிப்பு
- கண்டி “கந்த உடரட்ட எசல பெரஹரவின்” 2013 இற்கு பங்களிப்பு.
- ருஹுணு மகா கதிர்காமம் தேவாலய 2013 ம் ஆண்டு எசல திருவிழா வுக்கு அனுசரணை
- கோட்டே ரஜமகா விகாரை - “இலங்கை தலதா பெரஹரவுக்காக” பங்களிப்பு
- கண்டி “கந்த உடரட்ட எசல பெரஹரவின்” 2013 இற்கு பங்களிப்பு.

### மேற்கொள்ளப்பட்ட ஏனைய திட்டங்கள்

- கொழும்பு இரத்தினபுரி பாதையிலுள்ள மாவல்கமையில் இரண்டு பஸ் தரிப்பிடங்கள் அமைத்தல்
- அத்திடிய வானலை நிலைய பிரதேசத்தை சுற்றி இருக்கும் தேங்காய் விற்பனையாளர்களுக்கு விற்பனை வண்டிகள்.

# கூட்டிணைப்பு ஆளுமை

தாபன போட்டித்தன்மை, வளர்ச்சி மற்றும் நீண்டகால நிலைப்பாடு போன்றவற்றின் அடிப்படைக் கோட்பாடு பொதுநல கூட்டிணைப்பு ஆளுமை என பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் கருதுகின்றது. பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டிணைப்பு ஆளுமை (கூ.ஆ) வரைவிலக்கண வகைப்படுத்தலுக்கிணங்க அது தாபனம் தொழிற்பாடு மற்றும் கட்டுப்பாட்டின் செயல்பாடாகும். பங்காளர்களிடையே ஏற்படும் முரண்பாடுகளை நீக்குவதற்காக உத்தரவாதமளித்தல் மற்றும் பொருளாதார வினைத்திறமை கூட்டிணைப்பு ஆளுமையின் மிக முக்கிய இலட்சணங்களாகும்.

அரச வர்த்தக தொழிற்முயற்சிகளின் தொகுதி “A” இன் கீழ் அரச தொழில்முயற்சிகள் திணைக்களம், நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட பொது கூட்டிணைப்பு ஆளுமையிற்குரிய அரச தொழில்முயற்சி வழிகாட்டலுக்கிணங்க வி.வி.சே.க கூட்டிணைப்பு ஆளுமை எண்ணக்கருக்கள் அமைந்துள்ளன.

| பிரிவு | பொருந்தக்கூடிய சட்டம் | இணக்கப்பாடு |
|---|---|---|
| பணிப்பாளர் சபை | | |
| 3.2 | இயக்குநர் சபை இணைப்பாக்கம் | சங்கங்களின் சட்டப்பிரிவில் 71 ஆவது உறுப்புரையில் குறிப்பிட்டுள்ளவாறு சிவில் விமானசேவைகள் அமைச்சரினால் இயக்குநர் சபை நியமிக்கப்படும்.<br>இயக்குநர் சபை 9 உறுப்பினர்களால் அமையப்பெற்றுள்ளதுடன், மூன்று நிறைவேற்றுக் குழு இயக்குநர்களும் மீதி நிறைவேற்றுக் குழு அல்லாத இயக்குநர்களும் ஆகும். நிறைவேற்றுக் குழு அல்லாத இயக்குநரொருவர் திறைசேரியினால் நியமிக்கப்படும்.<br>இயக்குநர்களின் குடும்ப அங்கத்தவர்கள் எவரும் இயக்குநர் சபையில் சேவையாற்றாததால் அவர்களின் கடமைகளை நிறைவேற்றும்போது அவர்களினால் தற்சார்ப்பில் தாக்கங்கள் எதுவும் ஏற்படாது. |
| 3.3, 3.5, மற்றும் 3.6 | இயக்குநர் சபை பொறுப்புக்கள் | பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள் இரு கொள்ளளவின் கீழ் பிரகடனப்படுத்தப்படும். |
| | | தலைமைத்துவமும் கடமைப்பொறுப்புக்களுக்குள்<br>• தாபனதின் குறிக்கோள் பங்குதாரர்களினதும், பங்காளர்களினதும் தேவைப்பாடுகளை எவ்வளவு தூரம் நிறைவேற்றப்படுகின்றது என்பதனைக் கண்டறிவதேயாகும்.<br>• அனைத்து சட்டங்கள் மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகள் வழங்குவதற்காக பொறுப்பேற்றல் மற்றும் சட்டம் / சங்க அமைப்பு விதிக்குறிப்பு மற்றும் சட்டப்பிரிவுக்கு இயைவாக தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக உடன்பாடு தெரிவித்தல்.<br>• முகாமைத்துவத்தினால் முறைப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளை தயாரித்தல். மக்கள் கொள்கை மதிப்புரைகள் காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்தல் மற்றும் எதிர்கால அபிவிருத்தியிற்காக நீண்டகால இலக்குகள் மற்றும் மதிப்புரைகளை தயாரிப்பதற்காக தளத்தகை ரீதியில் வழிகாட்டுதல்.(வி.வி,சே கம்பனியின் பணிப்பாளர்கள் வெளிவாரி சுற்றுாடலை பகுப்பாய்வு செய்வதற்கு மற்றும் வெளிவாரி தொழிற்பாடுகளை கண்டறிவதற்கு ஒழுங்கமைக்கப்பட்ட அறிவுக் களஞ்சியம் நிகழ்ச்சித் திட்டத்தினுாடாக தந்திரோபாய திட்டமிடல் தொழிற்பாட்டுடன் தொடர்படையது.)<br>• தடங்களற்ற தொழிற்பாட்டு பாய்ச்சலை உறுதிப்படுத்துவதற்காக அடிப்படையாக அமையும் இலக்குகள் மற்றும் மதிப்புரைகளை அறிந்து கொள்வதற்கு உதவும் நிதி தேவைப்பாட்டு மூலகங்களை ஆராய்ந்து கண்டுபிடித்தல்.<br>• நிறைவேற்று பணிப்பாளர்கள் வருடாந்த வரவு செலவு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் பிரிவுகளுடன் கலந்துரையாடுவதற்கு காலத்தை செலவழிக்கின்றது.<br>போதுமானளவு அறிக்கைகள் மற்றும் புத்தகங்களை பேணுவதனுாடாக கடமைப்பொறுப்பு உறுதிசெய்யப்படும். நீண்டகால திட்டமிடல்களை மேற்பார்வை செய்யும் பிரிவு, தளத்தகை வழியிலான தொழிற்பாட்டில் ஈடுபடுத்துதல் மற்றும் நீண்டகால தளத்தகை வழிகளை ஒப்பிடுவதற்கு துணையாக இருந்த கருவியாகும். |

## கூட்டிணைப்பு ஆளுமை தொடர்ச்சி.

| பிரிவு | பொருந்தக்கூடிய சட்டம் | இணக்கப்பாடு |
|---|---|---|
| | | தனது மேற்பார்வை கடமைப் பொறுப்புக்குள்<br>• இயக்குநர் சபையின் சட்ட உரிமைக் கட்டளைகளின் கீழ் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன்,தாபனத்தின் மற்றும் முழு சமுகத்தினதும் நலன் கருதி அவை செயல்படுகின்றதா உறுதிப்படுத்துதல்.<br>• முகாமைத்துவ தகவல்கள் அறிக்கை மற்றும் செயலாற்றுகை மதிப்பாய்வுகள் மூலம் முகாமைத்துவ செயற்பாடுகளை கண்காணித்தல்.<br>• எதிர்பார்க்கப்பட்ட நிலமைகளிலிருந்து வெளியேறும் சந்தர்ப்பங்களில் சரிப்படுத்தும் அணுகுமுறைகள் பயன்படுத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு இயலுமானதை உறுதிப்படுத்துதல்.<br>• அனைத்து தகைமைகளையும் கொண்ட முகாமையாளர்களாக நியமித்து குறித்த தொழிற்பாடுகள் சுயாதீனமாக மற்றும் பொறுப்புக்களுடன் மேற்கொள்ளப்படும் பின்னணி ஏற்படுத்தி முதுநிலை முகாமைத்துவத்திற்குள் குழு உணர்வை வளரச்செய்தல்.<br>• வருடாந்த பொதுக்கூட்டங்களின்போது பங்குதாரர்களுக்கு வளர்ச்சிதொடர்பான செய்திகளை அளித்தல். |
| 4.1 மற்றும் 4.2 | இயக்குனர்களின் முடிவுகள் | இயக்குநர் சபை கூட்டங்கள் மிகவும் முக்கியத்துவ வாய்ந்த சிறந்த முடிவுகளை எடுக்கும் இயக்க முறையாக அனைத்து தளத்தகை ஒருங்கிணைப்பு தொடர்பான முடிவுகள் எடுப்பதற்கு இலகுவாக்கின்றது. இயக்குநர் சபைக் கூட்டங்கள் முறையானதாக கொண்டு நடாத்தப்படுவதுடன், இசைவாணையுடன் அனைத்து முடிவுகளும் எடுக்கப்படும். |
| 3.7.1 | தவிசாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி | சிவில் விமானசேவைகள் அமைச்சரின் தன்விருப்புரிமையின் பேரில் தவிசாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி நியமிக்கப்படுவார். நடைமுறை தவிசாளர் கிட்டத்தட்ட 6 வருடங்கள் தொடர்ந்தும் இயக்குநர் சபையில் சேவையாற்றும் நிகழ்கால தவிசாளர் பணிப்பாளர் சபையிற்கு தலைமைத்துவம் மற்றும் தளத்தகை தொடர்பான வழிகாட்டல் இயக்காற்றலுடனும், தொழில்சார் ரீதியிலும் வழங்குவதனூடாக தவிசாளர் நிறைவேற்று கடமைப் பாங்கினை மேற்கொள்கின்றார். |
| 3.8 | கம்பனி செயலாளர் | அனைத்து இயக்குநர்களுக்கும் உள்ளக மற்றும் வெளிவாரி தகவல்களுக்காக, கூட்டாக அல்லது சுயாதீனமான தொழில்சார் செயலாற்றும் கம்பனிகள் செயலாளரினால் விசாரிக்க முடியும். கம்பனி செயலாளரினால் பணிப்பாளர் சபை ஒழுங்குமுறை விதிகள் கடைபிடிக்கப்படுவதாக உறுதிபடுத்தி குறித்த நடவடிக்கைகள் தொடர்பாக சட்ட ரீதியிலான தேவைப்பாடுகள் தொடர்பாக மதியுரைகள் வழங்கப்படும்.<br><br>இதற்கு மேலதிகமாக கம்பனி செயலாளரினால் இயக்குநர் சபை கூட்டங்கள் தொடர்பாக அறிவித்தல் சுற்றனுப்புதல், கூட்ட அறிக்கைகளின் குறிப்புக்கள் மற்றும் குழு காகிதங்கள் மற்றும் குறித்த ஆவணங்களை பங்கிடுவதன் மூலம் இயக்குநர் சபை அறிவூட்டப்பட்ட முடிவுகளையெடுப்பதற்கு இயலுமையினை ஏற்படுத்துதல் வேண்டும். |
| பொறுப்புடமை | | |
| 2.2 | அரசுக்கு பதில்கூறு நிலையில் இருத்தல் | இயக்குநர் சபை பிரதான பங்குடமையாளராக அரசிற்கு நேரடியாக பதில்கூறும் நிலையில் இருப்பதுடன், பின்வரும் அரச அதிகாரசபைகளுக்கு அறிக்கைகள் அனுப்புதல் வேண்டும்.<br>• பாராளுமன்றம்<br>• அமைச்சரவையின் அமைச்சர்கள்<br>• குறித்த அமைச்சர் / அமைச்சு<br>• கணக்காய்வாளர் அதிபதி |

| பிரிவு | பொருந்தக்கூடிய சட்டம் | இணக்கப்பாடு |
|---|---|---|
| 6.3 | நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக இயக்குநர் சபையிற்கு பதில்கூறுதல் | வி.வி.சே.க. பேணப்படுகின்ற அனைத்து நிதியில் அறிக்கைகளும் இலங்கை கணக்கியல் தரங்கள் மற்றும் 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இயைவாக தயாரிக்கப்பட்டுள்ளதை இயக்குநர்களினால் உறுதிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும். அந்த கூற்றுக்கள் இயக்குநர்களின் அறிக்கைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளன. |
| 7 ஆவது அத்தியாயம் - தொகுதி கட்டுப்பாடு மற்றும் குழு | | |
| 7.1 | கட்டுப்பாட்டு இயக்கமுறை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு முறைசார் உள்ளக கட்டுப்பாடு மற்றும் இடர்பாட்டு முகாமைத்துவ அணுகுமுறையைக் கொண்டு நடாத்துவதற்கு பணிப்பார் சபைக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் உள்ளக கட்டுப்பாடுகளில் விளைவுபெருக்கம் மற்றும் போதுமான அளவை ஆராய்ந்து கண்டுபிடிப்பதற்கு இயக்குநர் சபையினால் காலவரை மீளாய்வுகள் நடாத்தப்படும். |
| 7.4.1 | கணக்காய்வு குழு | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு (AMC) தொடர்பான தகவல்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன. |
| 7.4.1 | கேள்விப்பத்திர சபை | கேள்விப்பத்திர நடைமுறையிற்காக அரசினால் அமுல்படுத்தும் கண்டிப்பான வழிகாட்டல்களுக்கு இயைவாக அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்முதல் நடைப்பெறும். இதன் மூலம் கொடுக்கல் வாங்கல்களின் தெளிவுநிலை பேணுதல் மற்றும் விரும்பத்தகாத வழக்கத்துக்கு மாறான நடவடிக்கைளை குறைப்பதற்கு உதவியாக இருக்கும். ஒப்பந்த பெறுமதி குறித்த கேள்விப்பத்திர சபை முடிவுசெய்கின்ற பிரதான அணிக்கோவைகளாகுவதுடன்,<br>ரூபா. 1 மி. - 5 மி - 2 கேள்விப்பத்திர சபைகள்<br>ரூபா. 5 மி. - 50 மி - 1 கேள்விப்பத்திர சபை<br>ரூபா. 50மி. - 100 மி - கேள்விப்பத்திர சபை<br>அமைச்சினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழு<br>(ரூபா 100,000 கிளைத் தலைவரினால் அங்கீகரிக்கப்படுவதுடன், ரூபா 100,000 இலிருந்து ரூபா 1,000,000 வரை தலைவரினாலும் அங்கீகரிக்கப்படும்.) |
| பங்குதாரர்களுடனான உறவுகள் | | |
| | தாபனங்கள் மற்றும் ஒழுங்குமுறை அதிகாரசபை | தாபனம் அதன் பிரதான பங்குதாரர்களான அரசு உள்ளடங்களாக சகல சட்டப்படியான பங்குதாரர்கள் மீதுள்ள சட்டம் மற்றும் சட்டநியதிகள் கடப்பாடுகள் கண்டறியப்படும். மேலும் பணியாளர்கள் உள்ளடங்களாக ஏனைய பங்குதாரர்கள் மற்றும் விருப்பமுள்ள தரப்பினர்கள், விமான நிலையத்தினை உபயோகிப்பவர்கள் (விமானசேவைகள், பயணிகள் மற்றும் விமானநிலையத்திற்குள் தங்களது வர்த்தக நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தும் வர்த்தக பிரஜைகள்) வழங்குனர்கள் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குவோர் மற்றும் அனைத்து சமுகத்தவர்களுக்கும் நிறுவனம் பதிலளித்தல் வேண்டும். |
| | ஊழியர்கள் | கம்பனியின் தோற்றம், விழுமியங்கள், நிறுவன இலக்குகள் அனைத்து ஊழியர்களுக்கும் தெரிவிக்கப்பட வேண்டியதுடன், கிளை நோக்கங்கள் மற்றும் அலையலையாக விழுகின்ற தனிப்பட்ட நோக்கங்கள் பொருத்தமான படிநிலைகளில் கண்டறிந்து அதன் மூலம் தாபனத்தின் முற்றிசைவு உறுதிப்படுத்தப்படும். திருத்தமான தொழிற்பாடுகள் மற்றும் நிதித் தொழிற்பாடுகள் பற்றிய ஊழியர்களை விழிப்புணர்த்தியுள்ளன. அனைத்து ஊழியர்களுக்கும் நலன்புரி செயற்பாடுகள், போட்டியடிப்படையிலான பணிக்கொடை பொட்டணம் வழங்கப்படும். மனிதவள அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தியிற்கு தடையாக இருக்கும் செயற்கை ரீதியான இடையூறுகளை நீக்குவதற்கு உதவும் பாதுகாப்பான வேலைவாய்ப்பு சூழலினை அனைத்து ஊழியர்களுக்கும் வழங்குவதற்கு அதிகளவில் வ.வி.வி.சே.கம்பனி முயற்சி செய்கின்றது. நிறுவன விழுமியங்களின் கோவை அனைத்து ஊழியர்களுக்கும் தெரிவிப்பதற்கு மேலதிமாக துர்நடத்தையிற்காக விபரங்களுடனான தண்டம் மற்றும் தண்டணை உள்ளடங்கும் மேலதிக உள்ளக சுற்றுநிருபம் வெளியிடப்படும். |
| | சுற்றாடல் | சுழல் நிலைப்பாட்டிற்காக இயக்குநர் சபை அதிக அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதால் சுழலியலை பாதுகாப்பதற்கு மற்றும் சுற்றாடல் தொகுதியிற்கு கண்டிப்பாக பற்றுள்ள விதந்துரைக்கப்பட்ட சுற்றாடல் தரங்கள், தாபனத்தினால் பின்பற்றப்படும். நிறுவனத்தினால் பின்பற்றப்படும் இந்த வழக்கங்கள் நிலைப்பாட்டு முகாமைத்துவத்தின் கீழ் விளக்கமளித்துள்ளது. |

# கூட்டிணைப்பு ஆளுமை தொடர்ச்சி.

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு (AMC)

1999.11.19 ஆம் திகதிய PF/PE/3 இலக்க திறைசேரி சுற்றுநிருபத்திற்கு அமைய உருவாக்கப்பட்ட கணக்காய்வு முகாமைத்துவக் குழு (AMC) சபையின் நடவடிக்கைகளுக்கு உதவுகிறது. மூன்று நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர்கள், சிவில் விமானசேவைகள் அமைச்சின் பிரதம கணக்காளர், உள்ளகக் கணக்காய்வு மற்றும் தர உறுதிப்பாட்டுப் பிரிவின் தலைவர் (H/1A & QA) ஆகியோர் ககண்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு AMC) இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவில் நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர். அதிகாரத்தின் எல்லை குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் குறிப்பிட்ட பொறுப்புக்கள் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பொறுப்புகளைத் தீர்மானித்தல், வருடாந்த கணக்காய்வுத் திட்டங்களை மீளாய்வு செய்தல், சகல நடவடிக்கைகளினதும் உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை மதிப்பீடு செய்தல், செலவினத்தைக் கட்டுப்படுத்தவென ஒழுங்கான அடிப்படையில் செயற்பாடுகளை மதிப்பீடு செய்தல், வீண் செலவினத்தைக் குறைத்தல் என்பன அதன் நடவடிக்கைளில் அடங்கும். அதேவேளை, வெளிக்கள கணக்காய்வாளர்களுடன் இணைந்து கொள்ளல், கணக்காய்வாளர் அதிபதியினாலும், வெளிக்கள கணக்காய்வாளர்களினாலும் வழங்கப்பட்ட முகாமைத்துவ கடிதங்களுக்கு பதிலளித்தல், சட்டங்கள், பிரமாணங்கள், சுற்று நிருபங்கள், விதிமுறைகள் என்பனவற்றுக்கு உட்பட்டு நடத்தலும் கணக்கியல் தரத்திற்கு ஏற்ற வகையில் நிதித்துறை அறிக்கைகள் உள்ளனவா என்பதை நிச்சயித்தல், அரச நிறுவனங்களின் குழுவினால் விடுக்கப்பட்ட பரிந்துரைகள் மற்றும் பணிப்புரைகளின் நடைமுறைக்கிடலின் நிலைமையை மதிப்பீடு செய்தலும் இதில் அடங்கும்.

கணக்காய்வு முகாமைத்துவக் குழுவில் (AMC) மூன்று நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர்கள் சிவில் விமானசேவைகள் அமைச்சின் பிரதம கணக்காளர், உள்ளகக் கணக்காய்வு மற்றும் தர உறுதிப்பாட்டுப் பிரிவின் தலைவர் (H/1A & QA) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இயக்குநர் சபையினால் நியமிக்கப்பட்ட டொக்டர் டி.எஸ். ஜயவீர (தலைவர்), திரு. ஜே.ஆர்.யூ.டி சில்வா, திரு. யோகா பெரேரா ஆகியோர் அதன் அங்கத்தவர்களாக சபையினால் நியமிக்கப்பட்டு ஆய்வுக்குட்பட்ட வருடத்தில்இந்தக் குழுவில் சேவையாற்றியுள்ளனர். கணக்காய்வு முகாமைத்துவக் குழு (AMC) சந்திப்புகள் மூன்று இடம்பெற்றுள்ளதுடன் வருகை விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

## முக்கிய பங்காளராக அரசிற்கு பதில்கூறும் நிலை

அரசாங்கத்திற்கு முழு அளவில் சொந்தமான நிறுவனம் என்ற நிலையில் அரசாங்கத்திற்கான கணக்கியல் தன்மை, கீழ்க்காணும் வழிமுறைகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

## பாராளுமன்றம்

2002 மே 24 ஆம் திகதிய PE/PF/21 ஆம் இலக்க திறைசேரி சுற்று நிருபத்திற்கு அமைய நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் அமைச்சரவையின் மீளாய்விற்காக நிறுவனத்தின் ஆண்டறிக்கைகள் மீளாய்வுக்கென பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## அரச நிறுவனங்கள் பாராளுமன்ற குழு (COPE)

சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் செயற்பாட்டு இலக்குகளை நிறுவனம் அடைந்துள்ளதா என்பதை அரச நிறுவனங்கள் பாராளுமன்றக் குழு மதிப்பீடு செய்யவும், நிறுவனத்தின் செயற்பாட்டை மீளாய்வு செய்யவுமான அதிகாரம் அரச நிறுவனங்கள் பாராளுமன்றக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவினால் மீளாய்வுக்கென அழைக்கப்பட்டதும், நிறுவனத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமாக எழும் விடயங்கள் மற்றும் வினாக்களுக்குப் பதிலளிக்கவென தலைவர், பணிப்பாளர்கள், சிரேஷ்ட முகாமையாளர்கள், அமைச்சின் செயலாளர், பிரதம கணக்கியல் அதிகாரி ஆகியோர் சமூகமளித்திருப்பது அவசியமாகும். வருடத்துக்குள் ஒரேயொரு கூட்டம் மாத்திரமே நடாத்தியுள்ளது.

## பாராளுமன்ற ஆலோசனைக் குழு (PCC)

| AMC குழு அங்கத்தவர் பெயர் | ஏற்கும் பதவி | | வருகை |
|---|---|---|---|
| | வி.வி.சே.க | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு | |
| திரு. கலாநிதி டி.எஸ் ஜயவீர | பணிப்பாளர் / திறைசேரி பிரதிநிதி (நிதி அமைச்சு) | தவிசாளர் | 3/3 |
| திரு. ஜே.ஆர்யூ. த சில்வா | பணிப்பாளர் | அங்கத்தவர் | 3/3 |
| திரு. யோகா பெரேரா | பணிப்பாளர் | அங்கத்தவர் | 3/3 |
| திரு. எச். எம். சந்திரபால | பிரதம கணக்காளர் (சிவில் விமானசேவைகள் அமைச்சு) | அங்கத்தவர் | 3/3 |
| திரு. சீ வன்னிகம | உள்ளக கணக்காய்வு மற்றும் தரச் சான்றிதழ் தலைவர் | அங்கத்தவர் / சேகரிப்பவர் | 3/3 |

விமான சேவைகள் சம்பந்தமான பாராளுமன்ற ஆலோசனைக்குழு, விடுக்கப்பட்ட வினாக்கள் சம்பந்தமாக விளக்கமளிக்கவும், நிறுவனத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமாக அறிந்துகொள்ளவுமென வி.வி.சே.க தலைவர், சபைப் பணிப்பாளர்கள், நிறுவனத்தின் சிரேட்ட முகாமையாளர்கள் ஆகியோரை அதன் கூட்டத்தில் சமூகமளித்திருக்கும்படி கோர முடியும். ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் இரண்டு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

### நிதியமைச்சர் / திறைசேரி

அரச நிறுவனங்கள் உட்பட அரசதுறையில் நிதி ஒழுக்காறு சம்பந்தமான பொறுப்பை நிதியமைச்சர் அல்லது அவரது சார்பில் பொதுத் திறைசேரி கொண்டுள்ளது. சபையின் செயற்பாட்டை நிச்சயிக்கவும், சட்டப் பிரமாணங்களுக்கு உட்பட்ட வகையில் சபை நடந்துகொள்வதை அவதானிக்கவும், சம்பந்தப்பட்ட ஏனைய சகல விடயங்கள் தொடர்பாகவும் அமைச்சருக்கு அறிவிக்கவென திறைசேரிப் பிரதிநிதியொருவர் அதற்கிணங்க சபையில் நியமிக்கப்படுவது வழக்கம். ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் திறைசேரிப் பிரதிநிதியாக கலாநிதி டி.எஸ்.ஜயவீர அவர்களை வ./ வி.. வி.சே.க. இயக்குநர் சபையிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அரச நிறுவனங்களின் நிதித்துறை முகாமைத்துவம், அந்த நிறுவனங்களின் கட்டுப்பாடு என்பனவற்றைக் கண்காணிக்கும் பொறுப்பு, அரச நிறுவனங்கள் திணைக்களம், திறைசேரி என்பனவற்றைச் சார்ந்ததாகும்.

மீளாய்வுக்குட்படும் வருடத்துக்குள் திரு டீ. எஸ். ஜயவீர திறைசேரி பிரதிநிதியாக கடமையாற்றினார்.

அரச தொழில் முயற்சிகளில் முகாமைத்துவ மேற்பார்வை மற்றும் நிர்வகிக்கும் பொறுப்பு திறைசேரியின் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் கீழ் உள்ளது.

### சிவில் விமானசேவைகள் அமைச்சு

விமானசேவைகள் அமைச்சின் செயலாளர் பிரதான கணக்கீட்டு அதிகாரியாக கம்பனியின் நிதி நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக அரசுக்கு பதில் கூறும் நிலையில் இருப்பதுடன் இங்கு பின்வருமாறு காட்டப்பட்டுள்ள காரணங்கள் பணிப்பாளர் சபையுடன் மீளாய்வுக்குட்படுத்துதல் வேண்டும்.

1. தாபன திட்டமிடல் மற்றும் வரவுசெலவுத் திட்டமும்
2. நடைமுறை வருடத்தின் பௌதீக மற்றும் ஏனைய செயற்பாடு
3. கம்பனி மற்றும் கணக்குகள் தொடர்பாக முகாமைத்துவக் கடிதம்
4. வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள்
5. அரச தொழில்முயற்சிகள் குழுவில் தோன்றும் பிரச்சினைகள்

# இடர் முகாமைத்துவம்

### இடர் முகாமைத்துவம்

இலங்கை அரசின் நியதிச் சட்ட சேவை திட்டமிடலாளராக நாட்டின் விமானநிலையங்களானன ப.ச.வி, ம.இ.ச.வி மற்றும் இரத்மலானை விமானநிலைய முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்கின்றது. வி.வி. சே. கம்பனியின் தொழிற்பாடு மற்றும் நிதியியல் செயலாற்றுகையிற்கு சவால்கள் உள்ள அபாயங்களுக்கு மாத்திரம் அல்லாது முழு தேசத்தின் பிரதிம்பத்திற்கு பாதிப்பு ஏற்படாது இடர்பாடுகளுக்கு தோல் கொடுக்கின்றது.

வி.வி.சே கம்பனி பல வருட கால நிலைப்பாட்டுக்காக முகாமைத்துவ தொழிற்பாடுகளை உருவாக்கியுள்ளதுடன் எதிர்காலத்தில் தோற்றுவதற்கு இடமுள்ள பிரச்சினைகளை ஆரம்பத்திலே இனங்காணுதல் மற்றும் அவற்றுக்கு தீர்வு காணுதல் எம்மால் மேற்கொள்ளுதல் வேண்டும்.

விமானங்கள்இ பயணிகள் மற்றும் விமானச் சரக்குகளுக்குரித்தான எந்த நாடாக இருப்பினும் இலங்கை தகவல் பிராந்தியத்தினூடாக செல்லும்போது அதன் பொறுப்பு வி.வி.சே கம்பனியின் கீழ் உட்படுத்தப்படும். இந்த தொழிற்பாட்டிற்குள் எதிர்புகளுக்கு ஆளாகக்கூடிய பிரதான தொழிற்பாட்டுத் துறைகள் மற்றும் பரந்த விமானப் போக்குவரத்து பல ஆதனங்கள் பின்வருமாறு இனங்கண்டு கொள்ள முடியும்.

- விமானநிலைய /விமானசேவைகள் /விமான சரக்குகள் வாடிக்கையாளர்கள்
- விமானநிலையம்/ விமானசேவைகள் / கைத்தொழில் ஊழியர்கள்
- விமானநிலைய மற்றும் விமானசேவைகள் தரப்பினர்கள்
- கம்பனியிற்குரிய சொத்துக்கள் (உ + ம் விமானசேவை அலுவலகம்)
- புலன் சொத்துக்கள்
- விமானநிலைய மற்றும் விமானசேவை ஒபப்ந்தததாரர்கள் (உ + ம் தரையைக் கையாளும் முகவர்கள்)
- தொட்டுணரக்கூடிய (உ + ம் விமானநிலைய வசதிகள்) மற்றும் தொட்டுணரமுடியாத சொத்துக்கள்

பின்னணியிலுள்ள அடிப்படை பெறுமதியாக கருதப்படுவது, சரியான வேளையில் நிகழ்கிற, போதிய தலையீடு மற்றும் துல்லியமான மதிப்பீடாகும் இதற்கிணங்க இடர்ப்பாடானது, அச்சுறுத்தலுடன் இணைந்த இடர்ப்பாடுகளுக்கு இலகுவில் ஆளாகக்கூடிய ஏதுநிலையின்அளவில் நேரடி விளைவாகும். இடர்பாடுகள் ஏற்படுவது, விபத்துக்குள்ளாகும் ஏதுநிலையும், விபத்து சமப்படுத்தும் நேரடி விளைவு ஆகையால் அச்சுறுத்தல் மதிப்பீடு மற்றும்

**The Risk Management Cycle**




எமது கம்பனியால் முகங்கொடுத்துள்ள சவால்கள் மதிப்பிடமுடியமான நிலையில் நாம் இருப்பதுடன் எமது செயற்பாடுகள் நிகழும் சுற்றாடல் வளரும் உட்சிக்கல்நிலை மற்றும் இயக்கவாதத்திலான பின்னணி ஆகையால் நவீன மற்றும் புதிதாக எழக்கூடிய இடர்பாடுகளில் பாதை மற்றும் பிரதிநிதித்துவம் வழக்கமாக காணக்கூடியதாகயிருப்பது அத்தியவசியமானதாகும்.

விபத்துக்களுக்கு ஆளாகுவதனைக் கட்டுப்படுத்துவதற்காக விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனியின் மூலம் எடுக்கப்படும் கருதக்கூடிய மட்டத்திலான இடர்ப்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகள் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

## கைத்தொழிற்சாலையின / நாட்டில் இடர்ப்பாடு

### இடர்பாடு தொடர்பான விவரங்கள்/தன்மை

- விமானப் பயண அளவு வளர்ச்சி விகிதாசாரம்

வி.வி.சே. கம்பனியின் வியாபாரத் தொழிற்பாடுகள் விமானப் பயண கொள்ளவு மற்றும் அதன் வளரச்சியின் அடிப்படையில் நிலைத்திருப்பதுடன் இலகுவில் மாற்றங்களுக்கு உள்ளாகுவதுடன் மற்றும் காலத்திற்கிணங்க வீக்கத்துக்குள்ளாகும் சுற்றுலாக் கைத்தொழில் அடிப்படையின் கீழ் அதிகளவில் நிலைத்து இருக்கின்றது. வி.வி.சேவைக் கம்பனியின் முக்கியமான வருமான வழியாக அமைவது விமானநிலையத்தை உபயோகிக்கப்படும் பயணிகள், விமானசேவை அனுசணைகள் மற்றும் சொத்துக்களை வாடகைக்கு உபயோகிப்பதன் மூலம் கிடைக்கும் வருமானங்களாகும். வி.வி. சேவைக் கம்பனியின் விமானநிலையத்துடன் தொடர்புடைய விமானப் பயண கொள்ளளவு மற்றும் பயணிகளின் எண்ணிக்கை பல காரணிகளின் அடிப்படையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளதுடன் மொத்த தொழில் வாரியான நிலைமைகள், பொருளாதார நிலைமைகள், நாட்டின் சுகாதாரம் மற்றும் அரசியல் பின்னணி உலக பிராந்திய எனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது சுற்றுலா சேரிடமாக நாட்டிலுள்ள கவர்ச்சிகரமான தன்மை, வி.வி.சே கம்பனியின் விமானநிலைய கொள்ளளவு மற்றும் அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளடங்களாக பல காரணிகளின் அடிப்படையில் அமைந்துள்ளன.

### எதிர் நடவடிக்கைகளை நடைமுறைக்கிடல்

வி.வி.சே. கம்பனியின் மேற்குறிப்பிட்ட பல இடர்பாட்டு காரணங்களை கட்டுப்படுத்தவதற்கு முடியாமல் உள்ளது. ஏதேனும் வருமான மூலகம் விமானப் பயண கொள்ளளவின் அடிப்படையின் மீது நிலைத்திருக்காத சந்தரப்பத்தில் மாத்திரம் இங்கு குறித்த நிவாரணம் கிடைக்கும்.

### இடர்பாட்டு தொடர்பான விவரங்கள்∴தன்மை

- விமானசேவை சொத்துக்களுக்கு ஏற்படும் நட்டம் மற்றும் இழப்புகக்ள்

### எதிர் நடவடிக்கைகளை நடைமுறைக்கிடல்

உரிய பாதுகாப்பு மற்றும் தீ நிவாரண நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக அவசரகால திட்டங்கள் ஒத்திகை வழக்கமாக மேற்கொள்ளப்படும். காப்புறுதி பத்திரங்களினூடாக மூனறாம் தரப்பினர்களுக்கு இடர்பாட்டினை கையளிப்பது முக்கியமானதாகவுள்ளது.

- இடர்பாடு தொடர்பான விவரங்கள்/தன்மை

இரண்டாவது சர்வதேச விமானநிலையத்திற்காக சந்தை வளர்ச்சி அபாயம் நவீன விமானநிலையமொன்று அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஆளணி அடிப்படையுடன் தொடர்புடைய இடர்பாடுகளுக்கு உட்படுகின்றன. ம.இ.ச.வி இற்காக இந்த பொதுவான சட்டம் விஷேடமாக உட்படாது.

### எதிர் நடவடிக்கைகளை நடைமுறைக்கிடல்

வி.வி.சே.கம்பனியின் புதிதாக நிலைநிறுத்தப்பட்ட விற்பனை பிரிவு ஆரம்பத்திலிருந்தே ம.இ.ச.வி இற்காக சந்தை பல்வேறு மூலகங்கள் பங்குதாரர்களின் விருப்பங்களை முறைப்படுத்துவதற்கு தேவைப்பட்டதுடன், இதற்காக கண்டறிதல் மற்றும் விரிவுபடுத்தலுக்கு முற்று முழுதாக கவனம் செலுத்தப்பட்டது. வருடத்துக்குள் வளாக சுற்றுலாக்கள் மற்றும் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. சுற்றுலா மற்றும் விமானசேவைகள் தொகுதியின் அமைப்புக்களுடன் கூட்டாக மேற்கொள்ளப்படுகின்ற மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக வாய்ப்பு பகுப்பாய்வு மற்றும் எதிர்வுகூறல், விமானப் பயணத் தடவைகள் மற்றும் விமான வழிகளின் எதிர்வுகூறல், பயணிகள் உருவாக்கிய பிரதேசங்களின் பகுப்பாய்வு அணுகுமுறைகள் போன்ற பல்வேறு முக்கிய நடவடிக்கைகள் விற்பனை குழுவால் வருடத்துக்குள் நடைமுறையில் செயல்படுத்தப்படும்.

# இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி.

## சட்டரீதியான இடர்ப்பாடு

### விபரம் / இடர்ப்பாடுகளின் தன்மை

- ப.ச.வி மற்றும் ம.இ.ச.வி மற்றும் இரத்மலானை விமானநிலைய பொது மக்கள் பயன்பாட்டின்போது மற்றும் பயணிகளின் மரணம் / பயணிகளுக்கு ஏற்படும் இழப்புக்கள் தொடர்பான இடர்ப்பாடு

### எதிர் நடவடிக்கைகளை நடைமுறைக்கிடல்

- முனையக் கட்டிடங்களுக்கு கிட்டிய பிரதேசங்களில் ஏற்படும் விபத்து காப்பீடுகளுக்கு பொறுப்பு காப்புறுதி கொள்கையொன்று அறிமுப்படுத்தப்பட்டது. விமானங்களை தொழிற்படுத்துவொருக்கு தீர்வைகளற்ற கடைத் தொகுதிகள் மற்றும் ஏனைய சலுகையாளர்களுக்கு அவர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளும்போது அவர்களின் ஒப்பந்தங்களுக்கு இணங்கிய பிரதேசங்களில் மூன்றாம் தரப்பினர்களுக்கு ஏற்படும் விபத்துக்கள் மற்றும் மரணம் தொடர்பாக ஏற்படும் சட்டரீதியான இடர்ப்பாடுகளை காப்பீடு செய்வதற்கு பொது மக்கள் பொறுப்பு காப்புறுதி கொள்கை கட்டாய துறையாக ஆக்கப்பட்டுள்ளது. விமான நிலையத்திற்குள் கட்டுமான ஒப்பந்தங்கள் மற்றும் இணைந்த இடர் காப்பீட்டிற்கு சகல ஒபப்ந்ததாரர்களும் வி.வி.சே.க உடன் ஒப்பந்த உடன்படிக்கையிற்கு இணங்கும் சந்தர்ப்பத்திலேயே சகல இடர்ப்பாடுகளையும் உள்ளடக்கும் வகையிலான காப்புறுதி கொள்கையொன்றினை முன்வைத்தல் கட்டாயமான இன்னுமொரு காப்பீடாகும்.
- எமது சகல ஒப்பந்த உடன்படிக்கைகளிலும், சட்டரீதியான அல்லது தலையீட்டாளரை நோக்கிச் செல்வதற்கு முன்னர் நட்புணர்வுடனான இணக்கமொன்றிற்குச் செல்லுவதற்குத் தேவையான நிபந்தனைகளை உள்ளடங்குகின்றது. சட்டரீதியலான இடர்ப்பாட்டின் கீழ் ஏற்கவேண்டிய ஆகக்கூடிய செலவினை கட்டுப்படுத்துவதற்குத் தூண்டுவதற்கே இப்பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டது.

### விபரம் / இடர்ப்பாடுகளின் தன்மை

- சுற்றாடல் தரங்களுக்கு இணங்காமை

### எதிர் நடவடிக்கைகளை நடைமுறைக்கிடல்

- பிரதேசங்களுக்குரித்தாகும் சில சுற்றாடல் பாதுகாப்பிற்காகவுள்ள சட்டங்கள் சில சட்டரீதியலான இடர்ப்பாடுகளுக்கு காரணமாக உள்ளது. இதனுடன் தொடர்புடைய விதத்தில் முகங்கொடுப்பதற்கு எடுக்கப்படும் எதிர் நடவடிக்கை நிலைப்பாட்டு முகாமைத்துவதத்தின் கீழ் தெளிவுபடுத்தியுள்ளதுடன், வி.வி.சே.க மத்திய சுற்றாடல் அதிகாரசபை மூலம் சட்டவாக்கப்பட்டுள்ள சுற்றாடல் தரங்களுக்கு இணங்குவதற்காக செயலாற்றும். உள்நாட்டு பிரஜையொருவர் தலையீட்டில் அல்லது அயலவர் மதியுரைக் குழுவொன்றின் மூலம் தகவல் பரிமாற்றம் இடம்பெறும்.

## தொழிற்பாட்டு இடர்பாடுகள்

### விபரம் / இடர்ப்பாடுகளின் தன்மை

- கணினி தொகுதியிற்கு வேண்டுமென்றே செய்யக்கூடிய இழப்புக்கள்

### எதிர் நடவடிக்கைகளை நடைமுறைக்கிடல்

- எமது அந்தரங்கமான, உணர்வுபூர்வமான, பாதுகாப்புடன் தொடர்புடைய தகவல்களுக்கு இணையத்தள திருடர்கள் மற்றும் வைரஸ்களினால் ஏற்படும் அபாயத்தைத் தடுக்கவென, சக்திவாய்ந்த கணினி அரண் இயக்கமுறை நிலைநிறுத்தப்பட்டது. முறைகேடான விதத்திலான தலையீடுகள், இணையத்தள திருடர்களால் தொகுதியினை விடுவித்துக் கொள்வதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட பாதுகாப்புக்களுக்கு மேலதிகமாக, கணினி வலையமைப்பு அணுகு கட்டுப்பாடு முறைகேடான தலையீடுகளை கண்டறிவதற்குத் தேவையான கவனத்தினைச் செலுத்தி, உயர் தொகுதிகளை அங்கீகரிக்கும் கட்டுப்பாடும் நடைமுறைப்படுத்தப்படும்.

**விபரம் / இடர்ப்பாடுகளின் தன்மை**

- பெரும் மூலதன முதலீடுகள் செயல்பாட்டு பற்சக்கர உயர் மட்ட வெளிப்பாடு

**எதிர் நடவடிக்கைகளை நடைமுறைக்கிடல்**

- அனைத்து முதல்தர முதலீட்டு முடிவுசெய்யப்படுவது கருத்திட்ட சாத்திய ஆராய்ச்சியன் பின்னராகும். அங்கு திரும்ப கிடைக்கக கூடிய நிதிப்பாய்ச்சல் (CFROI), தேறிய நிகழ்காலப் பெறுமதி, (NPV), பொருளாதார பெறுமதிச் சேர்க்கை (EVA) மற்றும் உள்ளக பலன்களின் விகிதாசாரம் (IRR) பாரியளவில் பயன்படுத்தப்படுகின்ற அணுகுமுறைகளை பயன்படுத்தியுள்ளது.

- வருடாந்த வரவு செலவு தயாரிக்கும் தொழிற்பாட்டிற்குள் முலதனங்களை மட்டுப்படுத்துதல் மற்றும் வேறு வகையில் குறிப்பிடுவதாயின், முலதனச் சொத்துக்கள் மற்றும் கருத்திட்டங்களின் முதலீடு மட்டுப்படுத்தி அதன் மூலம் திரவநிலை மற்றும் போதுமான நிதியியல் நெம்பிணைப்பு நீண்டகால கருத்திட்டங்களுக்காக திட்டமிடப்பட்டது. இங்கு மூலதனங்களை மட்டுப்படுத்தும் தொழிற்பாடுகளில் முன்மொழியப்பட்ட மூலதன சொத்துக்கள் அல்லது கருத்திட்டத்தின் இடர்பாட்டுத் தன்மை மற்றும் வர்த்தக முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு முன்னுரிமையை முடிவு செய்யப்படுகின்றது. திரவத்தன்மை மற்றும் நெம்புகோள் விகிதத்தின் அடிப்படையில் வி.வி.சே.கம்பனி இன் செலவுகளின் எல்லை தீர்மானிக்கப்படுவதுடன், இந்த உயர் எல்லை விஞ்சப்பட்ட எனைய கருத்திட்டங்களுக்காக நிதி வெளிவாரி மூலகங்களிலிருந்து மேற்கொள்ளப்படும்.

**விபரம் / இடர்ப்பாடுகளின் தன்மை**

- ஊழல்கள், உள்ளக கட்டுப்பாடுகள் நிலைகுலையும் நடைமுறைகளும் ஒழுங்குவிதிகளும்

**எதிர் நடவடிக்கைகளை நடைமுறைக்கிடல்**

- நடைமுறையில் குறித்த உள்ளக கட்டுப்பாட்டு தொகுதியொன்று, தரப்படுத்தப்பட்ட நிதி நடைமுறைகள் மற்றும் ஐஎஸ்ஓ தரச் சான்றிதழ் பெற்ற முகாமைத்துவ தொகுதி கணக்காய்வும் நடைமுறைப்படுத்தப்படும்.

- உள்ளக குழுக்களினால் தாபனத்திற்குள்ளே மேற்கொள்ளப்படும் வழக்கமான முகாமைத்துவ கணக்காய்வுகள் மூலம், உள்ளக கணக்காய்வு மற்றும் தரச்சான்றிதழ் பிரிவினால் மேற்கொள்ளபப்டும் தவணை மீள்நோக்கு, விளைவுபொருள்மிக்க உள்ளக கட்டுப்பாடொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான துணைநிறைவை வழங்கும்.

# நிறுவனத்தின் அலுவலகள் தொடர்பில் பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

### நிறுவனம் பற்றி

AASL முழுமையான அரசுக்கு உரித்துடைய இலங்கையில் சிவில் சிமான நிலையங்களை நிர்வகிக்க மற்றும் அபிவிருத்தி செய்ய முழு அதிகாரம் கொண்ட நிறுவனமாகும். இங்கு தரப்பட்டுள்ள விவரங்கள் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட இயைபான தகவல்களைத் தருகின்றன. அத்துடன் அதிசிறந்த கணக்கீட்டு நடைமுறைகளின் விதப்புரைகளால் வழிநடத்தப்பட்டுள்ளன.

### பிரதான செயற்பாடுகள்

AASL இன் தொழிற்பாடுகள் சார்ந்த செயற்பாடுகள் இவ்வாண்டின்போது மாற்றமடையாதிருந்துள்ளன. 2010 நவம்பர் 4ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2010ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க சிவில் வான்போக்குவரத்துச் சட்டத்தால் அளிக்கப்பட்ட பணிப்பாணையின்கீழ் ஏக நியதிச்சட்ட சேவை வழங்குநர் என்ற வகையில் கீழுள்ள அதன் பணியை நிறைவேற்றி வந்துள்ளது.

1. பண்டாரநாய சர்வதேச விமானநிலையம் (BIA) மத்தல இராஜபக்ஸ சர்வதேச விமான நிலையம் (MIRA) மற்றும் இரத்மலானை விமானநிலையம் (RMA) ஆகியவற்றின் அபிவிருத்தி, செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு

111. மேற்கூறிய விமான தளங்களின் பராமரிப்பு மற்றும் மீட்பு மற்றும் தீயணைப்பு சேவை முன்னேற்பாடுகள் மற்றும்விமான மற்றும் விமான பாதுகாப்பு சேவைகள்.

111. கம்பனி இலங்கை FIR இற்குள் அனைத்து வானூர்திகளினதும் பிரயாணிகளினதும் கெடுதலின்மையையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி வான் செலவு, விமான தொடர்பாடல், விமான தொடர்பாடலுக்கான பொறியியல் உதவிகள அல்லது கண்காணிப்பு மற்றும் ஏனைய தேவைப்பாடுகள் அனைத்தையும் வெற்றிகரமாக நிறைவேற்றுவது.

### இலங்கை விமான போக்குவரத்து தொழில் துறை

2013 ஆம் ஆண்டில், இலங்கை விமான போக்குவரத்து துறை மத்தல உள்ள MRIA வரை விரிவுபடுத்தப்பட்டது. இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமான மத்தலயின் முதல் கட்ட கட்டுமான நடவடிக்கைகள், அம்பாந்தோட்டையில் வெற்றிகரமாக மீளாய்வு ஆண்டில் AASL இன் மேற்பார்வையின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டதுடன் 18 மார்ச், 2013 அன்று அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மூலம் திறந்து வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

### செயல்பாடுகள் விமர்சனம்

செயல்பாட்டு மற்றும் நிதி செயல்திறன் ஆய்வு, நிறுவனத்தின் எதிர்கால திட்டங்கள் தலைவர் அறிக்கை மற்றும் எம்டிஏ பகுதியில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன. நிறுவனத்தின் தணிக்கை நிதி அறிக்கைகள் மூலம் இந்த தகவல்கள் நிறுவனத்தின் அலுவல்களை அந்தந்த தன்மைகளில் பிரதிபலிக்கின்றன.

### நிதிக் கூற்றுக்கு பணிப்பாளர்களின் பொறுப்புடைமை

2007ஆம் ஆண்டின் 07ஆம் இமலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் தங்கள் பொறுப்புடைமைகளை பணிப்பாளர்கள் நன்கு உணர்கின்றனர். அதற்கிணங்க ஏற்புடைத்தான அனைத்து கணக்கீட்டு நியமங்களுடனும் இணங்கியொழுகும் வகையில் செம்மையான நிதி சார்ந்த பதிவேடுகள் பேணப்படுவதை உறுதிப்படுத்தும் தங்களின் பொறுப்பை ஏற்றங்கீகரிக்கின்றனர்.

அவ்வாறு தயாரிக்கப்பட்ட பக்கம் 72 தொடக்கம் 99 வரை தரப்பட்டுள்ள நிதிக் கூற்றுகள் ஆண்டின் பொழுது கம்பனியின் செயற்பாடுகளின் உண்மையான பிரதிபலிப்பாகும் என்பதில் பணிப்பாளர்கள் திருப்பி கொள்கின்றனர்.

### கணககாய்வாளரின் அறிக்கை

கம்பனியின் நிதிக் கூற்றுகள் மீதான கணக்காய்வாளரின் அறிக்கை முறையே 71 வது பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

### கணக்கீட்டுக் கொள்கைகள்

2013 ஆம் ஆண்டில் கணுக்கீட்டுக் கொள்கைகளில் பாரிய மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. நிறுவனம் 2012 ஆம் ஆண்டு மீளமைக்கப்பட்ட இலங்கை கணக்கியல் கொள்கைகளை உட்படுத்தியுள்ளதுடன், முன்னை ஆண்டு தரவுகள் இலங்கை நிதிதரநிர்யண நியமங்களுக்கு அமைய உள்வாங்கப்பட்டுள்ளன. கம்பனியின் நிதிக் கூற்றுகள், பிடித்துவைத்த வருமான நிதியம், வாக்குப் பண்ணப்பட்ட நிதியம் என்பவற்றைத் தயாரிக்கையில் கையாளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முறையே 76 தொடக்கம் 85 ஆகிய பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

### இணைந்த வாக்களிப்பு நிதி மற்றும் தக்க வருவாய் கணக்குகள்

2012 ஆம் ஆண்டில், SLFRS விதிமுறைகளுக்கு / LKAS முதல் முறையாக தத்தெடுப்பு செயல்முறை, உண்மையான, நேர்மையான புற தணிக்கையாளர்கள், M/s (PwC) பரிந்துரையின் பேரில் நிறுவனத்தின் விவகாரங்களை வழங்கல், மற்றும் சபையின் அங்கீகாரம் உறுதிப்படுத்துவதற்காக இயக்குநர்கள், நிதி வாக்களித்த மற்றும் தக்க வருவாய் கணக்குகள் நிறுவனத்தின் கணக்கு இணைக்கப்பட்டன. 2013 ஆம் ஆண்டில் புற தணிக்கையாளர்கள்; PwC முந்தைய ஆண்டு ஆடிட்டர் ஜெனரல் மூலம் தணிக்கை செய்யப்பட்டது தளம் நிதிகள் உட்பட முழு தணிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இந்த அதன் நிதி அறிக்கைகளின் சமர்பிப்பு அடிப்படையில் மூச்சு மிகவும் குறிப்பிடத்தக்க மைல்கற்களை ஒன்றாக இருந்தது.

### சமூக சார்ந்த பொறுப்புடைமை (CSR)

கம்பனி ஒழுக்கநெறி மற்றும் சூழல் ரீதியில் நிறைபேறான

முறையில் தொழிற்படுவதற்குத் தன்னை அர்ப்பணித்துள்ளது. சமூக அறநெறி சார்ந்த நன்கொடைகளாக நிறுவனம் குறித்த ஆண்டில் ரூ. 18.2 மில்லியன் செலவிட்டுள்ளது. அது பொதுமக்கள் உறவுக்காக செலவிடப்பட்ட ரூ. 8 மில்லியனையும் உள்ளடக்குகின்றது.

## முறைமைகளின் உள்ளகக் கட்டுப்பாடு

கம்பனியின் உள்ளளக் கட்டுப்பாட்டுப் பணியின் கண்காணிப்பு, பணிப்பாளர் சபையின் செயல் வரம்பின்கீழ் வருகின்றது. செயற்பாடுகளின் நோக்கெல்லை கம்பனியின் செயல்நுணுக்கக் குறிக்கோள்களையும் இலக்குகளையும் எய்துதல் தொடர்பில் முறைமைகளின் பயறுதியாகும் தன்மையின் மீளாய்வுக்கு மேலதிகமாக நிதி சார்ந்ததும் எதிர்மறை விளைவின் முகாதைத்துவம் சார்ந்ததுமான அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்குகின்றது. கூட்டிணைப்பு ஆளுகை உருவரைச்சட்டத்திர் (பக்கங்கள் 53 – 57) விவரிக்கப்படும் AASL இன் செயல் நுணுக்கத் திட்டமிடல் செயல்முறையினதும் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்கொள்ளப்படுகின்றது.

## வருங்கால அபிவிருத்திகள்

ப.ச.வி.நி. பிரயாணிகளைக் கையாளும் ஆற்றலை வருடத்திற்கு மேலும் 9 மில்லியனால் அதிகரித்தல். ப.ச.வி. ஓடுபாதையை செப்பனிடுவதற்கும் அபிவிருத்திப் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன. மேலும் ப.ச.வி. மற்றும் ம.இ.வி உள்ளுர் விமான நிலைய வலையமைப்பைத் தரமுயர்த்துவதற்கும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவமற்கும் திட்டமிடப்பட்டள்ளன. அடுத்த 05 ஆண்டுகளுக்குள் ம.இ.வி நிலையத்தில் விமான கண்காணிப்பு, பழுதுபார்த்தல் மற்றும் மீளாய்வு கட்டிட தொகுதியொன்றை நிர்மாணிக்க திட்டமிட்பட்டுள்ளது. இவை நிச்சயமாக நாட்டின் வான்போக்குவரத்துத் தொழிலுக்கு ஒரு உந்துசக்தியாகும்.

## நிறுவனத்தின் வருமானக் கூற்று மற்றும் நிதிதரநிலைகளின் மொத்த விற்பனை வரவு

கம்பனி முன்னெப்பொழுதுமில்லாத ஆகக் கூடுதலான மொத்த விற்பனை வரவாகிய ரூபா 12.1 பில்லியனைப் பதிவுசெய்தது. கம்பனியின் மொத்த விற்பனை வரவு மற்றும் இலாபங்கள், பிடித்துவைத்த வருமான நிதியம், வாக்குப் பண்ணப்பட்ட நிதியக் கணக்குகள் என்பவற்றின் விரிவான பகுப்பாய்வொன்று நிதி சார்ந்த மீளாய்வின்கீழ் விவரிக்கப்படுகின்றன.

### செயற்பாட்டு பெறுபேறுகள்

கம்பனி 2013ஆம் ஆண்டிற்கு முன்னெப்பொழுதுமில்லாத ஆகக் கூடுதலான வரிக்கு முந்திய இலாபமாகவம் வரிக்குப் பின்னரான இலாபமாகவும் ரூபா 4.7 பில்லியனையும் ரூபா 3.5 பில்லியனையும் பதிவுசெய்தது. இது முந்திய ஆண்டுடன் ஒப்புநோக்குமிடத்து முறையே 23% மற்றும் 30% அதிகரிப்பொன்றாகும்.

கீழுளள அட்டவணை வரிக்கு முநிதிய ஒன்றுதிரட்டப்பட்ட வருமானம் 2013 ஆண்டிலும் அதற்கு முன்னை ஆண்டுகளிலும் காணப்பட்டதை காட்டுகின்றது.

### வருமான ஒதுக்கங்கள்

2013 திசம்பர் 31இல் உள்ளவாறு கம்பனியின் ஒதுக்கம்

| | 2013 ரூ.மில். | 2012 ரூ.மில். |
|---|---|---|
| வ.பி.இ - சகல செலவினங்கள், முன்னேற்பாடுகள் மற்றும் தேய்மானங்களின் பின்னர் | 4,745.7 | 3,858.7 |
| கழிக்குக: வரிவிதிப்பு | 1,192.1 | 1,121.1 |
| ஆண்டின் வ.பி.இ. | 3,553.6 | 2,737.5 |
| ஏனைய ஒன்றுதிரட்டப்பட்ட வருமானம | - | - |
| அசல் மதிப்பீட்டு மாற்றம் காரணமான இலாபம்/ நட்டம் | 170.7 | 205.0 |
| மொத்த ஒன்றுதிரட்டப்பட்ட வருமானம் | 3,724.3 | 2,942.6 |

முறையே ரூபா 6,428 மில்லியன், 2012 ஆம் ஆண்டு ரூபா 3,304 மில்லியன், இது 95% அதிகரிப்பாகும். கம்பனியின் ஒதுக்கங்களின் அசைவு 74ஆம் பக்கத்தில் ஒப்புரவிலான மாற்றங்கள் பற்றிய கூற்றில் காட்டப்படுகின்றன.

### பங்குலாபம்

பங்குமாற்ற நிதிக்கூற்று அமைவாக 2013 ஆம் ஆண்டில் ரூ. 500,000,000 வரையான பங்குலாபங்கள் செலுத்தப்பட்டுள்ளன. 2012 டிசெம்பர் முடிவுற்ற ஆண்டில் ரூ. 250,000,000 ஆகும். மிகுதி பங்குலாபம் இடைகால பங்குலாபமாக 2013 ஆம் ஆண்லெ் செலுத்தப்பட்டது.

### ஆதனம், பொறி, உபகரணம் (PPE)

2013 டிசெம்பர் 31 இறுதியில் நிறுவனத்தின் ஆதனம், பொறி, உபகரணம் (PPE) என்பவற்றின் தேறிய புத்தகப் பெறுமதி முறையே ரூபா 43.9 பில்லியன், 2012 இதேகால பகுதியில் அதன் பெறுமதி ரூபா. 39.2 பில்லியனாகும்.

மீளாய்வுக்குரிய ஆண்டில் நிறுவனத்தில் மூலதன செலவினம் ரூ. 6378 மில்லியனாகும், 2012 ஆம் ஆண்டில் ரூ. 17,449 ஆகும். ஆதனம், பொறி, உபகரணம் என்பவற்றின் அசைவுகள் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 05 இல் தரப்பட்டுள்ளன.

## ஐந்தொகைத் திகதியின் பின்னரான சம்பவங்கள்

ஐந்தொகைத் திகதியின் பின்னர் நிதிக் கூற்றுக்களில் சீராக்கத்தைதத் தேவைப்படடுத்தும் முக்கியமான சம்பவங்கள் எவையும் இருக்கவில்லை.

## தொடர்ந்துறும் நிறுவனம்

வழமையான எதிர்வுகூறல் செயல்முறைகளைக் கடைப்பிடித்து வருங்கால வாய்ப்புகளையும் எதிர்மறை விளைவுகளையும் பற்றி உரிய விசாரணைகள் செய்தபின்னர் எண்ணத்திற்கு எட்டிய வருங்காலத்தில் தொழிற்பாடுகள் தொடர்பில் தொடர்ந்து நிறைபெறுவதற்கான போதியளவு வளங்களும் கடப்பாடு கொண்ட கடனெடுக்கும் வசதிகளையும் கொண்டுள்ளது எனப் பணிப்பாளர்கள் கருதுகின்றனர். இதன் விளைவாக நிதி சார்ந்த கூற்றுக்கள் அனைத்தும் தொடர்ந்துறும் நிறுவனம் என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

# நிறுவனத்தின் அலுவலகள் தொடர்பில் பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை தொடர்ச்சி.

## பங்கு மூலதனம்

கம்பனியின் பங்கு மூலதனம் கம்பனி கணக்குகளில் காணப்படுவதுடன் ஒவ்வொன்றும் ரூபா 100 பெறுமதியுடைய சாதாரண பங்குகளைக் கொண்டுள்ளது. 2013 திசம்பர் 31இல் உள்ளவாறு பங்குடைமை வருமாறு.

| பங்குகளின் எண் | பெறுமதி (ரூ) | வைத்திருப்பது. |
|---|---|---|
| 200,000 | 20,000,000 | திறைசேரிக்கான செயலாளர் |
| 1 | 100 | சிவில் வான் போக்குவரத்து அமைச்சு செலாளர் |
| 1 | 100 | சிவில் வான் போக்குவரத்துப் பணிப்பாளர் தலைமையதிபதி |
| 200,002 | 20,000,200 | |

## எதிர்பாராத நிகழ்வுகளும் ஏற்பாடுகளும்

டிசம்பர் 31, 2013 இல், என தொடர்ந்து பொறுப்புகள் மற்றும் மூலதனம் கடமைகள் குறித்து தகவல், நிதி அறிக்கைகளின் 24, 25 குறிப்புகளில் பக்கம் 97 மற்றும் 98 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

## பணிப்பாளர் சபை மற்றும் சபைக் குழுக்களின் விபரங்கள்

நிதியாண்டின் இறுதியில் பதவி வகித்த 09 பணிப்பாளர்க்ளினதும் பெயர்கள் கீழே தரப்படுகின்றன. தவிசாளரனிதும் (உறுப்புரை 79) மற்றும் நிறைவேற்றுத்துறை சாராத பணிப்பாளர்களினதும் (உறுப்புரை 82) நியமனம் AASL இன் அமைப்பு அகவிதிகளின் செற்றொடரின் உறுப்புரைகளில் காட்டப்பட்ட நியதிகளின்படி செய்யப்படுகின்றது.

திரு. பிரசன்ன ஜே விக்ரமசூரிய - தவிசாளர்

திரு. கமால் எஸ் ரத்வத்த - துணைத் தவிசாளர்

திரு. யோஹன்ன ஜயரத்ன - நிறைவேற்றுப் பணிப்பாளர்,

திரு. கோசல ஆர். விக்ரமநாயக - பணிப்பாளர்,

திரு. ஆனந்த குணதிலக - பணிப்பாளர்

திரு. யோக பெரேரா - பணிப்பாளர்

செல்வி ஷானிக்கா கொபல்லாவ - பணிப்பாளர்

திரு. ஜே ஆர் யூ டீ சில்வா - பணிப்பாளர்

திரு. எஸ்.பி. சேனாரத்ன - பணிப்பாளர்

(கலாநிதி டீ எஸ். ஜயவீர - பணிப்பாளர்)

கலாநிதி டீ எஸ். ஜயவீர சபையில் இருந்து 01 டிசெம்பர் 2013 அன்று இராஜிநாமா செய்தார்.

## சபைக் குழுக்கள்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு (AMC) சிறந்த கண்காணிப்பிற்காகவும் தொழிற்பாடுகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு என்பவற்றிற்காகவும் சபையால் தாபிக்கப்படுகின்றன. இதில் சபையால் நியமிக்கப்படும் நிறைவேற்றுத்துறை சாராத கலாநிதி டீ. எஸ். ஜயவீர, திரு. ஜே ஆர் யூ டீ சில்வா, திரு. யோக பெரேரா ஆகியோர் அடங்குவர். இவர்கள் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் குழுவில் சேவையாற்றினர். சிவில் வான்போக்குவரத்து அமைச்சின் பிரதம கணக்காளரும் உள்ளகக் கணக்காய்வு மற்றும் தர உறுதிப்பாட்டுப் பகுதியின் தலைமை அதிகாரியும் ஏனைய உறுப்பினர்களாவர்.

## பங்குகளை அல்லது தொகுதிக் கடன்களைக் கையாளும் பணிப்பாளர்களின் வெளிப்படுத்துகை

எந்தவொரு பணிப்பாளராலும் பங்குகளை அல்லது தொகுதிக் கடன்களைக் கையாளப்படவில்லை

## ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறை

ஆண்டின்பொழுது அல்லது 2013 திசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறு பணிப்பாளர் எவரும் கம்பனியின் தொழிலுடன் தொடர்புடைய ஒப்பந்தங்கள் எவற்றிலும் நேரடியாகவோ நேரடியாக அல்லாமலோ அக்கறை எதனையும் கொண்டிருக்கவில்லை.

## பணிப்பாளர்களின் ஊதியமும் ஏனைய அனுகூலங்களும்

இவ்வாண்டின் பொழுது ரூபா 12.1 மில் பணத்தொகையை ஊதியமாக செலுத்தப்பெற்ற மூன்று நிறைவேற்றுத்தறைப் பணிப்பாளர்களும் நிறைவேற்றுத்துறை சாராத ஒரு பணிப்பாளரும் இருந்தனர். இதில் அனைத்து நிதிசார்ந்த அனுகூலங்களான சம்பளம், ஊ.சே.நி. ஊ.ந.நி, விருந்துபசாரத்தின் செலவீடு, தொலைபேசி, விடுமுறை மற்றும் ஏனைய படிகளும் மிகையூதியமும் அடங்கும். நிறைவேற்றுத்துறை சாராத

ஏனைய பணிப்பாளர்களுக்கு பிரயாணச் செலவுகள், சபைக் கூட்டங்களுக்கு பணிப்பாளர் கட்டணங்கள் என்ற வகையில் ரூபா 400,100 செலுத்தப்பட்டது.

## சமூக மற்றும் சூழல் சார்ந்த பொறுப்புடைமை

கம்பனி ஒழுக்கநெறி மற்றும் சூழல் ரீதியில் நிறைபேறான முறையில் தொழிற்படுவதற்குத் தன்னை அர்ப்பணித்துள்ளது. இந்த அணுகுமுறைக்கும் சமூதய ஈடுபாட்டிற்கும் அறநெறி சார்ந்த நன்கொடைகளுக்கும் கம்பனியின் கடப்பாடுகள் பற்றிய விவரங்கள் நிலைபேறான தன்மை சார்ந்த முகாமைத்துறை என்ற பகுதியில் காணப்படுகின்றது.

## கூட்டிணைப்பு சார்ந்த நெறிப்படுத்துகை

முக்கியமான எல்லா பங்காளர்களுடனும் நீண்ட தவணை உறவை அபிவிருத்தி செய்வதற்கும் பேணி

வளர்ப்பதற்கும் கம்பனியின் பொதுப்படையான நெறியாள்கை நடைமுறையின் பயனுறுதியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்புடைமையை பணிப்பாளர்கள் கடைப்பிடித்து வருகின்றனர்.

## நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

தங்கள் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை அரசாங்கத்திற்கும் ஏனைய ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களுக்கும் ஊழியர்கள் தொடர்பிலும் வருமதியான எல்லா நியதிச்சட்டக் கொடுப்பனவுகளும் உரிய காலத்தில் செலுத்தப்பட்டுள்ளன அல்லது அவற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

## கணக்காய்வாளர்கள்

பட்டயக் கணக்காளர்களான மெஸ்சர்ஸ் பிரின்ஸ் வோட்டர்ஹவுஸ்கூப்பர்ஸ் நிறுவனம் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் 158ஆம் பிரிவின் நியதிகளின்படி நியமனம் செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றது.

கணக்காய்வாளர்களுக்கு கணக்காய்வுக் கட்டணங்களாக 1,395,775 ரூபாவும் (2012 ரூபா 670,728) ரூபா 145,160 ரூபாவும் கணக்காய்வு தொடர்பில்லாத சேவைகளுக்காக 315,840 ரூபா (2012 - ரூபா 552,450) கம்பனி நிதியத்தாலும் செலுத்தப்பட்டன.

## ஆண்டுப் பொதுக் கூட்டம்

ஆண்டுப் பொதுக் கூட்டம் 2014 யூன் 30 ஆம் தகிதி பி.ப. 2.30 மணிக்கு சபை அறையில் நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## நன்றி நவிலல்

அதன் குறிக்கோளை எய்துதல் தொடர்பில் சபை அதன் முகாமைத்துறைக்கும் ஊழியர் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அதன் பாராட்டுக்களைத் தெவித்துக்கொள்கின்றது.

அத்துடன் இலங்கை அரசாங்கதிற்கும் சிவில் வான் போக்குவரத்து அமைச்சுக்கும் நிதி அமைச்சுக்கும் சிவில் வான் போக்குவரத்து அதிகார சபைக்கும் கம்பனிக்கு அதன் முயற்சிகளில் தொடர்ந்து உதவிகள் புரிந்த ஏனைய நிறுவனங்களுக்கும் அதன் நன்றியைத் உரித்தாக்க விரும்புகின்றது.

மேலும் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவன ஊழியாகளின் அர்ப்பணிப்பு, ஒருமைப்பாடு, கற்பனை, சகிப்புத்தன்மை மற்றும் கடின உழைப்பிற்கு நன்றி கூறவேுண்டும். எமது ஊழியர்களே எமது மிகப்பெறுமதியான சொத்தாக நாம் கருதுகின்றோம்.

சபையின் கட்டளைப்படி,



திரு. பிரசன்ன ஜே விக்ரமசூரிய
தவிசாளர்

18 ஜுன் 2014

# சகல தருணங்களிலும் காலவரையற்ற அர்ப்பணிப்பு



# நிதித் தகவல்கள்



எமது நிதிக்கூற்றுக்களில் நாம் மிகவும் வெளிப்படையான, உண்மையான, நியாயமான வெளிப்படுத்தல்களை வழங்கும் கலாச்சாரத்தினை தொடர்ந்தும் பேணுவதில் அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

## நிதிசார் பொருளடக்கம்


| | |
|---|---|
| சுயாதீனக் கணக்காய்வாளர்களின் அறிக்கை | 71 |
| ஒன்று திரட்டிய வருமானக் கூற்று | 72 |
| ஐந்தொகை | 73 |
| பங்குகள் மாற்றங்கள் அறிக்கை | 74 |
| காசுப்பாய்ச்சல் அறிக்கை | 75 |
| நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் | 76 |

# சுயாதீனக் கணக்காய்வாளர்களின் அறிக்கை

வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் பங்குதாரர்களுக்கானது

### நிதிக் கூற்றுக்களின் மீதான அறிக்கை

1. எம்மால் 72 இலிருந்து 95 வரை பக்கங்களில் காட்டியுள்ள வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான விரிவான வருமான அறிக்கை, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பங்குகள் மாற்றங்கள் தொடர்பான கூற்றுக்களுடன் சிறப்புவாய்ந்த கணக்கியற் கொள்கைகள் மற்றும் குறிப்புகளையும் கணக்காய்வு செய்துள்ளோம்.

### நிதி அறிக்கைகள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

2. இலங்கை கணக்கியல் தரங்களுக்கு (SLFRS) ஏற்ப இந்த நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும், சமர்ப்பிப்பதற்குமான பொறுப்பை முகாமைத்துவம் கொண்டுள்ளது. இந்த பொறுப்புகளுக்குள் நிதிக்கூற்றுக்கள் போதுமானளவு தவறுகளின்றி தயாரித்தலும் அவற்றினை முன்வைத்தலும், நிதிக்கூற்றுக்களின் முழு அளவிலான முன்வைத்தல் கருதக்கூடிய மதிப்பீடுகள் மற்றும் கணிப்பீடுகளுக்கு இயைவாகவும் கணக்கியல் கொள்கைகளுக்கு இயைவாகவும் தயாரித்து தவறுகள் மற்றும் மோசடிகள் இன்றி முன்வைப்பதற்கும் உரியவாறு உள்ளக நிர்வாக ஒழுங்குவிதிகள திட்டமிடுதல், நடைமுறையில் செயல்படுத்துதல் மற்றும் உரிய முறையில் பேணுதல் இதில் உள்ளடங்கப்படும்.

### கணக்காய்விற்கான நோக்கமும், அபிப்பிராயத்துக்கான ஆதாரமும்

3. எமது கணக்காய்வின் அடிப்படையில், நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயத்தினை வெளியிடுவது எமது கடமையாகும். இலங்கை கணக்காய்வுத் தரங்களின் அடிப்படையில் நாம் கணக்காய்வை மேற்கொண்டோம். மேற்குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்கள் போதுமானளவு பொருள்சார் பிழைகளில் நியாயமான உறுதிப்பாட்டைப் பெறுவதற்கு எம்மால் கணக்காய்வினை திட்டமிடுவது அந்த தரங்கள் மூலம் தேவைப்படுகின்றன.

   நிதிக்கூற்றுக்களின் பெறுமதிகள் வெளிப்படுத்துவதற்கு உதவும் வெளிப்பாடுகளுக்குமான ஆதாரங்களை குறிப்பிட்ட நியதிக்கேற்ப ஆராய்தல், கடைப்பிடிக்கப்பட்ட கணக்கியற் கொள்கைகள் மற்றும் முகாமையாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட கருதக்கூடிய மதிப்பீடுகள் கணிப்பிடுதல், நிதிக்கூற்றுக்களின் முழு அளவிலான முன்வைப்பு மதிப்பீடு மற்றும் மேற்குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கியல் தரங்களுக்கு இயைவாக தயாரித்து முன்வைக்கப்பட்டுள்ளனவா என நிச்சயித்தல் கணக்காய்வினுள் உள்ளடங்கப்படும்.

   எங்களது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நாம் பெற்றுக்கொண்டோம். ஆகையால் எமது அபிப்பிராயத்துக்குத் தேவையான அடிப்படை ஆதாரத்தை எமது கணக்காய்வு வழங்குகிறது என்று நாம் நம்புகின்றோம்.

### அப்பிராயம்

4. 2013 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்துக்கான முறையான கணக்கியற் பதிவேடுகளை நிறுவனம் பேணி வந்துள்ளது என்பதையும், கணக்கியல் கூற்றுக்கள் இலங்கை கணக்கியல் தரங்களுக்கு இயைவாக தயாரித்து முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், 2013 டிசம்பர் 31இல் உள்ளபடியான கம்பனியின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் மற்றும் காசுப் பாய்ச்சல் தொடர்பாக உண்மையானதும் நியாயமானதுமான தோற்றத்தை காட்டுவதாக கருதுவது எமது அபிப்பிராயமாகும்.

### பொருண்மை அசையமுத்தம்

5. எமது அபிப்பிராயம் தகைமையுறாது பின்வரும் காரணங்களுக்கு கவனத்தைச் செலுத்துகின்றோம். மூலதன செலவுகளுக்காக அரசின் மானியங்கள் மற்றும் பிடித்துவைகக்கப்பட்ட வருமான நிதி தொடர்பாக கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் ஒருங்கிணைக்கும் அடிப்படையில் குறிப்பு இலக்கம் 2.11. இல் விவரிக்கப்பட்டுள்ளது.

### ஏனைய சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்குரிய அறிக்கை

6. இந்த நிதி அறிக்கைகள் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151(2) ஆம் பிரிவில் தேவைப்பாடுகளுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளன.

PricewaterhouseCoopers

**பட்டயக்கணக்காளர்கள்**
2014 யூன் 19
கொழும்பு

*PricewaterhouseCoopers, P. O. Box 918, 100 Braybrooke Place, Colombo 2, Sri Lanka*
*T: +94 (11) 771 9838, 471 9838, F: +94 (11) 230 3197,* www.pwc.com/lk

**Partners Y. Kanagasabai FCA, D.T.S.H. Mudalige FCA, C.S. Manoharan FCA, N.R. Gunasekera FCA, S. Gajendran FCA, Ms. S. Hadgie FCA, Ms. S. Perera ACA**

PricewaterhouseCoopers is a member firm of PricewaterhouseCoopers International Limited, each member firm of which is a separate legal entity.

# ஒன்று திரட்டிய வருமானக் கூற்று

| டிசம்பர் 31இல் முடிவடைந்த வருடம் | குறிப்பு | 2013<br>ரூபா. | 2012<br>ரூபா. |
|---|---|---|---|
| **வருமானம்** | 14 | **12,219,410,804** | 10,687,381,356 |
| ஏனைய வருமானம் | 15 | **(109,727,814)** | 426,332,095 |
| | | **12,109,682,990** | 11,113,713,451 |
| நிர்வாக, தாபன மற்றும் சந்தைப்படுத்தும் செலவினங்கள் | 16 | **(9,218,845,692)** | (6,224,903,211) |
| நிதி வருமானம் | 17 | **2,428,406,945** | 704,524,415 |
| நிதி செலவுகள் | 17 | **(573,573,582)** | (1,734,681,104) |
| நிகர நிதிச் செலவினம் | | **1,854,833,363** | (1,030,156,689) |
| **வரிக்கு முந்திய இலாபம்** | | **4,745,670,660** | 3,858,653,552 |
| வருமான வரிச் செலவினங்கள் | 18 | **(1,192,120,540)** | (1,121,112,099) |
| **வருடத்திற்கான இலாபம்** | | **3,553,550,120** | 2,737,541,453 |
| **ஏனைய விரிவான வருமானங்கள்** | | | |
| ஓய்வூதிய நன்மைப் பொறுப்பு ஏற்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களின் அதிகரிப்பு / (நட்டம்) | 11 | **170,789,838** | 205,037,774 |
| **மொத்த ஏனைய ஒன்றுதிரட்டிய வருமானம்** | | **170,789,838** | 205,037,774 |
| **மொத்த விரிவான வருமானம்** | | **3,724,339,958** | 2,942,579,227 |
| ஒரு பங்கிற்கான அடிப்படை ஊதியம் | 19 | **17,767.57** | 13,687.57 |

பக்கம் 76 தொடக்கம் 99 வரையிலான கணக்கியற் கொள்கைகளும், குறிப்புக்களும் நிதி அறிக்கைகளின் முக்கிய பகுதியாகக் கருதப்படும்.

சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை பக்கம் 71 தரப்பட்டுள்ளது.

# ஐந்தொகை

| டிசம்பர் 31இல் உள்ளவாறு | குறிப்பு | 2013<br>ரூபா. | 2012<br>ரூபா. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
